



# அகத்தியர் புத்தகசாலை

தபால் பெட்டி எண்: 334.

நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-620002.

தொலைபேசி எண்: 26061.

"ELLORA" TN. 2

# தமிழ் இலக்கிய வரலாறு


ஆக்கியோன் :

புலவர் மாமணி, நல்லாசிரியர்

டாக்டர் சு. அரங்கசாமி டி லிட்.,

தமிழகப் புலவர்குழு உறுப்பினர்,

தமிழ்க் குடில்,

திருவானைக்கா திருச்சி–5



அகத்தியர் புத்தகசாலை

அஞ்சல் பெட்டி எண். 334

தெப்பக்குளம் : ; திருச்சி 620 002.

தொலைபேசி எண் : 26061



திப்புரிமை



1986 விலை ரூ. 6–00

# தமிழ் இலக்கிய வரலாறு

## பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | *சங்க காலம்* | |
| 1. | மூன்று சங்கங்கள் | 1 |
| 2. | அகத்தியம் | 3 |
| 3. | தொல்காப்பியம் | 4 |
| 4. | எட்டுத்தொகை | 6 |
| 5. | பத்துப்பாட்டு | 10 |
| 6. | சங்க காலம் ஒரு பொற்காலம் | 14 |
| | *சங்கம் மருவிய காலம்* | |
| 7. | சங்கம் மருவிய கால இலக்கியங்கள் | 16 |
| 8. | இரட்டைக் காப்பியங்கள் | 22 |
| | முத்தொள்ளாயிரம் | 25 |
| | நந்திக் கலம்பகம் | 27 |
| | *பல்லவர் காலம்* | |
| 8. | அ. பன்னிரு திருமுறைகள் | 28 |
| | திருக்கயிலாய ஞான உலா | 30 |
| 9. | ஆழ்வார்கள் பன்னிருவர் | 31 |

## சோழர் காலம்


| | | |
|---|---|---|
| 10. | ஐம்பெருங் காப்பியங்கள் | 34 |
| | பெருங்கதை | 37 |
| 11. | ஐஞ்சிறு காப்பியங்கள் | 38 |
| 12. | கம்பராமாயணம் | 39 |
| 13. | கந்தபுராணம் | 40 |
| 14. | கலிங்கத்துப்பரணி | 41 |
| 15. | மூவருலா | 41 |
| 16. | முக்கூடற் பள்ளு | 42 |
| 17. | சோழர் கால இலக்கண நூல்கள் | 43 |
| 18. | நிகண்டுகள் | 44 |
| 19. | உரையாசிரியர்கள் | 45 |
| 20. | சைவ சித்தாந்த சாத்திரங்கள் | 48 |


## நாயக்கர் காலம்


| | | |
|---|---|---|
| 21. | 15-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் | 50 |
| 22. | 16-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் | 53 |
| 23. | நைடதம் | 54 |
| 24. | சைவத் திருமடங்களும் தமிழ்த் தொண்டும் | 56 |
| 25. | 17-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் | 58 |
| 26. | தமிழ் வளர்த்த முகம்மதியப் புலவர்கள் | 61 |


## ஐரோப்பியர் காலம்


| | | |
|---|---|---|
| 27. | கிறித்துவத் தமிழ்ப் புலவர்களும், அவர் தமிழுக்குச் செய்த தொண்டும். | 63 |

28. 18-ஆம நூற்றாண்டுப் புலவர்கள் 66

29. 19-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் 69


## தற்காலம்


30. தமிழில் புதினங்கள் 73

31. தமிழில் சிறு கதைகள் 75

32. உரைநடை வளர்ச்சி 78

33. இலங்கை ஈந்த தமிழறிஞர்கள் 82

34. தமிழறிஞர்கள் 84

35. தமிழ்க் கவிஞர்கள் 88

36. தலபுராணங்கள் 93

37. இசையும் நாடகமும 95

# அணிந்துரை

மகாவித்துவான், முனைவர்
**ச. தண்டபாணி தேசிகர்**

'திருமந்திரம்'
தருமபுரம் சாலை,
மயிலாடுதுறை

புலவர் மாமணி முனைவர் சு. அரங்கசாமி அவர்கள் எழுதியுள்ள 'தமிழ் இலக்கிய வரலாறு' தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தன்னேரிலாத அரும் படைப்பு.

*　　*　　*

வித்துவான
**சாந்தலிங்க இராமசாமி அடிகள்,**
முதல்வர்.

பேரூர்,
கோயமுத்தூர்-10

தமிழ் இலக்கிய வரலாறு காணும் நல்லாசிரியா சு. அரங்கசாமி அவர்களின் தமிழ்ப் பணி நெறி முறையோடு நாளும் வளர்வதாக.

*　　*　　*

டாக்டர் **அ. மா பரிமணம்**
எம்.ஏ., பிஎச்.டி., டி.லிட்.
தமிழ்ப் பேராசிரியர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ் இலக்கிய வரலாறு படைக்கும் தங்கள் முயற்சி வெற்றி பெறுக.

*　　*　　*

பேராசிரியர்
**ஆ. சிவலிங்கனார்**

ஞானியார் மடாலயம்,
திருப்பாதிரிப்புலியூர்.

நல்லாசிரியர் க. அரங்கசாமி அவர்களால் எழுதப் பெற்ற தமிழ் இலக்கிய வரலாறு தேவையான கருத்துக் களைக் கொண்டும், சிறப்பான நடை பயின்றும் விளங்குகின்றது.

இ. ஏம்போலா மாஸ்கரேனஸ்,
தமிழகப் புலவர் குழு உறுப்பினர்,

தில்லை நகர்,
திருச்சிராப்பள்ளி-18

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியா கா. சு. பிள்ளை, டாக்டர் அ சி. செட்டியார் போன்ற பேராசிரியர்களிடம் முறையாகப் பயின்ற—என்னுடன் ஒரு சாலை மாணாக்கராய்ப் பயின்றநல்லாசிரியர்— ஆண்டுதோறும் புலவர்களை உருவாக்கும் விளைபுல விததகர் சு. அரங்கசாமி அவர்களின் தமிழ்ப்பணிககு ஓர் உரை கல் தமிழ் இலக்கிய வரலாறு

❋ ❋ ❋

முனைவர் கு. சுந்தரமூர்த்தி,
எம்.ஏ.,பிஎச்.டி.,டி.லிட்.,
முதல்வர்.

செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்.

தமிழ் இலக்கிய வரலாறு திரு. புலவர் மாமணி சு. அரங்கசாமி அவர்களின் சிறந்த படைப்பாக இலங்குகிறது பல தலைப்புகளைக் கொண்ட இந்நூல் நெறியாகவும், முறையாகவும் நன்கு ஆராய்ந்து எழுதப்பெற்றுள்ளது. ஆசிரியரின் ஆற்றொழுககான நடை படிப்போரை இறுதி வரையிலும் அழைத்துச் செல்லும் பான்மையது. வரலாற்றுலகில் தலைசிறந்து விளங்கும் அறிஞர் பெரு மக்களின் கருத்துக்கள் அவர்கள் பெயருடன் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளமை ஆசிரியரின் நேர்மையைக் காட்டு கிறது. சுருக்கமாகவும், தெளிவாகவும் தம் கருத்துக் களை ஆசிரியர் கூறியிருப்பது அவர் தெளிந்த புலமை யைக் காட்டுகிறது.

# தமிழ் இலக்கிய வரலாறு

## சங்க காலம்

### மூன்று சங்கங்கள்.

லெமுரியாக் கண்டம் அழிவதற்கு முன்னர் அதில் விளங்கிய தென்மதுரை, பாண்டியர் தலைநகராக விளங்கிற்று. கடல் கோளால் அது அழிந்த பிறகு கபாடபுரம் அவர்களுடைய இரண்டாவது தலைநகரமாயிற்று. அதுவும் அழிந்த பிறகு தமிழகம் ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'' ஆகச் சுருங்கிற்று. அந்நாள், இன்றைய மதுரை மாநகரமே தலைநகரமாயிற்று. இத்தகைய மூன்று தலைநகரங்களிலும் பாண்டிய மன்னர் தமிழ்ச்சங்கத்தை அமைத்துத் தமிழையும், தமிழ்க் கலைகளையும் வளர்த்து வந்தனர் என்பர்.

இத்தகு சங்கத்தைப் பற்றிப் பல கருத்துக்கள் உலவுகின்றன. மூன்று சங்கங்கள் இருந்தன என்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார் சங்கமே இல்லை என்பர். பிறிதொருவர் ஒரே ஒரு சங்கம் இருந்தது என்பர். பேராசிரியர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் சங்கமே இருந்திருக்க முடியாது என்பதற்குச் சில கர்ரணங்கள் கூறுகின்றார். அவை பின் வருமாறு :

சங்க இலக்கியங்களில் 'சங்கம்' என்ற சொல்லாட்சி இல்லை. மதுரையின் மாண்பு கூறும் மதுரைக் காஞ்சியில் கூடச் சங்கம் என்ற சொல்லாட்சி இல்லை. திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும் சங்கப் புலவர்களாக வந்து பொறுப்பேற்றார்கள் என்பதை ஒப்புக் கொள்ளமுடியாது. சங்கம் என்ற சொல்லே வடசொல்.

**சங்கம் இருந்தது என்பதற்குக் கூறப்படும் சில சான்றுகள்:**

கடவுள் தன்மை வாய்ந்த சில புலவர்களையே இறையனார் என்றும், உக்கிரகுமாரப் பெருவழுதி என்றும் பெயரிட்டுள்ளனர் போலும். சமணர்கள் வந்த பிறகு தான் சங்கம் என ஒன்று கூட்டிப் பொருள்களை ஆய்வது என்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆதலின் சங்கம் இருந்தது என்று கூறுவதில் தவறில்லை. வடமொழியில் இச்சொல் இருப்பது போலத் தமிழிலும் இச்சொல் உண்டு என்று கொண்டால் வரும் இழுக்கில்லை என்பார் ஞா. தேவ நேயப் பாவாணர் அவர்கள். பட்டி மண்டபம், கழகம், அவை என்பன இச்சொல்லுக்கேற்ற தமிழ்ச் சொற்கள.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினங் கூறுங்கால்,

''ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக . . .
புலவர் பாடாது வரைக என் நிலவரை''

என்று கூறுவதிலிருந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு இம் மாங்குடி மருதன் தலைமை ஏற்றிருக்கவேண்டும் என்பது புலனாகின்றது. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம, ''மதுரைத் தென்றல் வந்தது காணீர்'' என்று குறிப்பிடு கின்றது, மணிமேகலையும், 'தென்றமிழ் மதுரை' என்று குறிப்பிடுகின்றது. கம்பர், 'தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரே' என்று பாடுகின்றார்- பரிபாடல் வையை ஆற்றைச் 'தமிழ் வையை' என்று குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசர் தாம் பாடிய பதிகம் ஒன்றில் 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நல் கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண்' என்று குறிப்பிட்டுள்ளார். (திருப்பத்தூர்ப் பதிகம்) ஆண்டாள் திருப்பாவையில் 'சங்கத் தமிழ்' என்று குறிப்பிட்டுள்ளாள். மாணிக்கவாசகர் தம் திருக்கோவையாரில், 'உயர்மதில் கூடலின் ஆய்ந்த வொண் டீந்தமிழ்' எனக் கூறுகின்றார்.

முதல் சங்கத்தைக் காய்சினவழுதி என்பான்நிறுவினான் என்பர். இது தென் மதுரையில் அமைந்திருந்தது என்பர். இதில் எழுந்தருளிய புலவர்கள் இயற்றிய நூல்களே பரிபாடல், முதுநாரை, முதுகுருகு போன்றன என்பர்.

முதற்சங்கம் அழிந்த பிறகு இடைச்சங்கம் கபாடபுரத்தில் தோன்றிற்று. இதைத் தோற்றுவித்தவன் வெண்டேர்ச் செழியன். இதன் தலைமைப் புலவர் தொல்காப்பியர், இவர் அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவர் என்பர். இந்த இடைச்சங்க காலத்தில் எழுந்த நூல்களே அகநானூறு புறநானூறு போன்றன. கடைச்சங்கம் எனப்படும். மூன்றாம் சங்கம் கி. மு. 500ஆம் ஆண்டில் தோன்றியிருக்கலாம் என்பர். இதன் தலைமைப் புலவர் நக்கீரர். இதில் நாற்பத்தொன்பது பேர் இருந்தனர் என்பர். இச்சங்கத்தில் தான் திருவள்ளுவர், கபிலர், பரணர் முதலிய பெரும் புலவர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இத்தகைய கடைச் சங்கம் இருந்ததனால்தான் தங்கம் நிகர் சங்க இலக்கியங்கள் பல எழுந்தன; முச்சங்கங்கள் இருந்தன; அவை தமிழ் வளர்த்தன என்பது பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை போன்றவர் கருத்து.

## 2. அகத்தியம்.

அகத்தியம் என்ற இலக்கண நூல் இயற்றியவர்-முதல் சங்கம் தோன்றிய காலத்துச் சிறந்து விளங்கிய முனிவர் அகத்தியர். இவர் சிவபெருமானிடத்தும், முருகப்பெருமானிடத்தும் நூல் கேட்டவர் என்று கூறப்படுகிறது. இவர் பொதிய மலையில் தமிழ்ச் சங்கம் ஒன்று வைத்து நடத்தியதாக இராமாயணம் கூறுகின்றது. இநத உண்மை 'தென்றமிழ் நாட்டு அகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்'' எனவரும் கம்பர் வாக்கால் புலனாகின்றது. இவர் மனைவியின் பெயர் உலோபாமுத்திரை இவர் உமையம்மையார் திருமணத்தின் போது தென்றிசைக் கண் சென்று நிலம் காத்தார் என்றும் கூறப்படுகின்றது. இவர் கமண்டலத்திலிருந்து காக்கையால் கவிழ்க்கப்பட்ட நீரே காவிரி என்று கூறப்படுகிறது. இந்த உண்மை, ''அகத்தியன் தனாது கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை'' எனவரும் தொடரால் புலனாகும். இவர் மாணாக்கர் பன்னிருவர்.

அவருள் தலைமையானவரே தொல்காப்பியர். அகத்தியர் நக்கீரருக்கு இலக்கணம் அறிவுறுத்தியதாகத் திருவிளை யாடல் புராணம கூறுகிறது.

## 3. தொல்காப்பியம்.

தொல்காப்பியரால் இயற்றப் பெற்றதே தொல் காப்பியம் என்ற இலக்கண நூல். இத்தொல்காப்பியர் காப்பியக்குடியில் பிறந்தவர் என்பர். இவர் ''ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர்'' என்றும, ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்'' என்றும் போற்றப்படுவதில் இருந்து இவர் பெருமை புலப்படும். இவர் அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள ஒருவர். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று பெரும் பிரிவுகளையு டையது. ஒவ்வொன்றும் ஒன்பது இயல்களைக் கொண்டது. இவர் காலம் இன்றைக்கு 2500 ஆண்டுகட்கு முறபட்டது என்பர். பிற்காலத்தில் எழுந்த பலவகை இலக்கிய இலக்கண நூல்களுக்கும் சிறந்த வழிகாட்டி தொல்காப்பியமே. இந் நூலுக்கு நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், இளம்பூரணர், கலலாடர், தெய்வச்சிலையார், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் போன்றோர் சிறந்த உரை எழுதியுள்ளனர். இதன் அமைப்பு முறையைப் யற்றி விரிவாகக் காண்போம்.

**எழுத்ததிகாரம் :** எழுத்ததிகாரம் நூன்மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என ஒன்பது இயல்புகளை உடையது நூல் மரபு எழுத்துக்களின் பெயர், முறை, தொகை, அளவு, இனம் போன்றவற்றைக் கூறுவது. மொழி மரபோ எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து மொழியாகும் முறையைக் கூறுவது. எழுத்துக்கள் பிறக்கும் பான்மையை எடுத்துக் கூறுவது பிறப்பியல். சொல்லோடு சொல் புணரும் வகையைக் கூறுவதே புணரியல். இருபத்து நான்கு ஈற்றில் விரிந்து முடிந்தனவற்றை எல்லாம் தொகுத்து முடித்தலின் இது

தொகை மரபு என்ப் பெயர் பெற்றது. வேற்றுமை உருபு களின் புணர்ச்சியை எடுத்துக் கூறுவதே உருபியல். ஓர் உயி ரீற்றுச் சொல்லும், வருமொழி முதல் உயிரும் புணரும் வகையை எடுத்துக் கூறுவதே உயிர் மயங்கியல், மெய்யோடு மெய் புணரும் வகையை எடுத்துக் கூறுவதே புள்ளி மயங் கியல். குற்றியலுகர எழுத்துக்களின் புணர்ச்சியை எடுத்துக் கூறுவதே குற்றியலுகரப் புணரியல்

**சொல்லதிகாரம் :** சொல்லதிகாரம் கிளவியாக்கம், வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியியல், எச்ச வியல் என 9 இயல்களைஉடையது. சொற்களை அமைக்கும் முறை பற்றிக் கூறுவதே வேற்றுமை இயல். இரு வேற்றுமை உருபுகள் மயங்குவது பற்றிக் கூறுவதே வேற்றுமை மயங் கியல். விளி வேற்றுமை பற்றிக் கூறுவதே விளி மரபு. பெயர்ச் சொல் இலக்கணம் கூறுவதே பெயரியல். வினைச் சொல் இலக்கணம் கூறுவதே வினையியலாகும். இடைச் சொற்களின் இலக்கணம் கூறுவது இடையியலாகும். உரிச் சொல் இலக்கணம் கூறுவது உரியியல். எஞ்சி நின்ற செய்திகளை எல்லாம் எடுத்துக் கூறுவது எச்சவியல்.

சொல்லதிகாரம் இவ்வாறு சொல் தன்மை. சொல் கட்டுக் கோப்பு இவற்றை அழகுற எடுத்துக் கூறுகின்றது.

**பொருளதிகாரம் :** பொருளதிகாரம அகம், புறம், களவு, கற்பு, பொருள், மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு என்ற ஒன்பது இயல்புகளைக் கொண்டது. மக்களின் அக ஒழுக்கத்தை எடுத்துக் கூறுவதே அகத்திணை. இது அன்பின் ஐந்திணை என்று போற்றப்படும். வெட்சி முதலாகப் பாடாண் ஈறாக உள்ள ஏழு திணைகளைப் பற்றிக் கூறுவதே புறத்திணை. காதல் வாழ்வு பற்றிக் கூறுவதே களவியல். தலைவன் தலைவி இல்வாழ்க்கை பற்றிக் கூறுவதே கற்பியல். அக ஒழுக்கத்தின் ஒழிபியலாக அமைந்தது பொருளியல். சுவை பல பற்றிக் கூறுவதே மெய்ப்பாட்டியல். அணி பல

பற்றி அறிவிப்பதே உவமயியல். செய்யுள் இயற்றும் முறை பற்றிக் கூறுவதே செய்யுளியல், மரபு பல பற்றிக் கூறுவதே மரபியல்.

சங்க இலக்கியங்களும், பிற்கால இலக்கியங்களும் தொல்காப்பியக் கருத்துக்களை ஆங்காங்கு எடுத்துக் கூறுகின்றன. எனவே, இதைத் தமிழ்ப் பெருமக்களின் கருவூலம்; கண்ணாடி என்று கூறின் அது மிகையன்று.

## 4. எட்டுத்தொகை.

தங்கம் நிகர் சங்க காலம் கண்ட தமிழ்க் கருவூலங்களில் ஒன்றே எட்டுத்தொகை.

எட்டுத்தொகை நூல்களாவன :

**நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.**

**நற்றிணை :** எட்டுத்தொகை நூல்களில் முதலிடம் பெறுவது நற்றிணை. இதன் சிற்றெல்லை ஒன்பது அடி. பேரெல்லை பன்னிரண்டு அடி. இது நானூறு பாடல்களைக் கொண்டது. 175 புலவர்களால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டது. இந்நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. அகப் பொருள் சுவை ததும்பும் இந்நூலைக் கொண்டு பண்டை அரசர்களின் ஆட்சி முறை, மக்களின் அறவாழ்வு, ஒருமைப்பாடு, உள்ளுறை, இறைச்சி போன்றவற்றை நன்கு அறியலாம்,

**குறுந்தொகை :** 'நல்ல குறுந்தொகை' என்று போற்றப்படும் இந்நூல் 400 பாடல்களைக் கொண்டது. இதன் சிற்றெல்லை 4 அடி. பேரெல்லை 8 அடி. பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய பாடலொன்றே இந்நூலின் கடவுள் வாழ்த்து. இந்நூலைத் தொகுத்தவன் பூரிக்கோ. அகப் பொருள் சுவை ததும்பும் அரிய நூல் இந்நூல்.

**ஐங்குறுநூறு:** குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து திணைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் நூறாக 500 பாடல்களைக் கொண்டதே இந்நூல். இதன் பாடல்களின் சிறறெல்லை மூன்றடி. பேரெல்லை 6 அடி. ஒவ்வொரு திணைப்பாடலும் அந்தந்தத் திணைக்குரிய ஒழுக்கத்தைப்பற்றிக் கூறும். இது ஆசிரியப் பாக்களால் ஆனது. இந்நூல் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்தது இயற்கையின் இனிமையும், தமிழ் அருமையும் கொண்டு விளங்கும் இந்நூல் வாழ்வியலுக்கும், உலகியலுக்கும் இயைந்த பல கருத்துக்களைக் கூறும் இன்ப நூல். இந்நூலைத் தொகுத்தவர் கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

**பதிற்றுப்பத்து:** சேரவேந்தர் பத்துப்பேரைப் பற்றிக் கூறும் அரிய நூல் பதிற்றுப்பத்து இது ஆசிரியப் பாக்களால் ஆனது. 10 பகுதிகளைக் கொண்ட நூலாதலின் இந்நூல் பதிற்றுப்பத்து எனப்பட்டது. ஒவ்வொரு பததும் ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்றது. இந்நூலின் முதற்பத்தும், இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. எனவே இரண்டாம் பத்தினைப் பாடியவர் குமட்டூர்க் கண்ணனார், பாடப்பெற்றவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன. மூன்றும் பத்து பல்யானைச்செல்கெழு குட்டுவனைப்பாலைக்கௌதமனார் பாடியது, நான்காம்பதது களங்காய்க் கணணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது. ஐந்தாம் பத்து கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியது. ஆறாம் பத்து ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் பாடியது. ஏழாம் பத்து செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது. எட்டாம் பத்து தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறையை அரிசில் கிழார் பாடியது. ஒன்பதாம் பத்து குடக்கோ இளஞ்சேரலிரும் பொறையைப் பெருங்குன்றூர்க் கிழார் பாடியது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் பற்றிய செய்திகள் காணப்படுவது இதன் சிறப்பியல்பு, ஒவ்வொரு பத்திற்கும் பதிகம் என்று

ஒன்று காணப்படுவதும் இதன் சிறப்பியல்பு. ஒவ்வொரு பாடலுக்கும் அரும் பொருள் பொதிந்த அழகான தலைப்பு காணப்படுவது இதன் தனிப்பெருஞ்சிறப்பு

**பரிபாடல்:** பரிபாடல் என்ற ஒருவகை இசைப்பாவினால் இயன்றதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. பொருட்சிறப்பாலும், நுண்மாண் நுழைபுலச் செம்மையாலும் 'ஓங்கு பரிபாடல்' என்று இந்நூல் சிறப்பிக்கப்படுகின்றது இந்நூலில் திருமால், முருகன் பற்றிய வழிபாட்டுப் பாடல்களும், வையை, மதுரை பற்றிய இயற்கைக் காட்சிப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. பண்டைத்தமிழரின் பழக்க வழக்கம், காதற்சிறப்பு, வீரம், ஆடல், பாடல், போன்றன அறிந்து கொள்ள உரிய கருவூலம் இந்நூல். இந்நூல் 70 பாடல்களைக் கொண்டதாயினும் இன்று கிடைப்பன இருபத்திரண்டே அவற்றுள் திருமாலுக்கு உரியன 6. முருகனுக்குரியன 8. வையைக்குரியன 8. இப்பாடல்களுக்குப் பரிமேலழகர் சிறந்த உரை கண்டுள்ளார்.

**கலித்தொகை:** 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்று போற்றப்படும் இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட 150 பாடல்களைக் கொண்டது. இது அகப்பொருள் சுவை ததும்புவது, இந்நூலில் ஐந்து பிரிவுகளுண்டு. அவை பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தற்கலி என்பன, பாலைக்கலி பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடியன 35 பாடல்கள், குறிஞ்சி 29 பாடல்கள், அவை கபிலரால் பாடப்பெற்றன. மருதம் 35 பாடல்கள், அவை மருதன் இளநாகனாரால் பாடப்பெற்றன முல்லை 17 பாடல்கள். அவை சோழன் நல்லுருத்திரனாரால் பாடப்பெற்றன. நெய்தல் 33 பாடல்கள் நல்லந்துவனாரால் பாடப்பெற்றன, இப்பாடல்கள் யாவும் கலிப்பாவில் அமைந்தன.

**அகநானூறு:** அகம என்ற பெயரமைந்த பழைய இலக்கிய நூல இது ஒன்றே. இது பல்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட 400 பாடல்களைக் கொண்டது. இந்நூல்

பாடல்களைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திர சன்மனார். எட்டுத்தொகை நூல்களில் இந்நூல் பாடல்கள் மிக நீளமுடைமையால் இது நெடுந் தொகை என வழங்கும். இது களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை என மூன்று பெரும் பிரிவுகளை உடையது. இதன் சிற்றெல்லை 13 அடி. பேரெல்லை 31 அடி. இந்நூலில் ஒற்றைப்படை எண் பெற்றன பாலைத் திணைப்பாடல். இரண்டும் எட்டுமாக எண் பெறுவன குறிஞ்சி. 4. 14 என நான்கை ஒட்டிய எண் பெறுவன முல்லை. 6. 16 என எண் பெற்றவை மருதம். 10, 20 போன்ற எண் பெற்றவை நெய்தல். இதுவும் அகப் பொருள் சுவை ததும்பும் அரிய நூல்.

**புறநானூறு:** சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய வரலாற்றுச் சிறப்புடைய நூலே புறநானூறு. அது அறம், பொருள், வீடு என்ற புறப்பொருள் பற்றிய நானூறுபாடல் களைக் கொண்ட நூல். இந்நூல் தமிழர் நாகரிகம், வாழ்வு இவற்றைச் செவ்வனே காட்டும் ஒரு கண்ணாடி. இந்நூலில் சற்றேறக்குறைய 160 புலவர்கள் பாடிய பாடல்கள் உள. இந்நூலில் முதல் 226 பாடல்களுக்குப் பழைய உரை உள்ளது. இதைப்பதிப்பித்தவர் தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர். பேராசிரியர் ஔவை. சு. துரை சாமிப்பிள்ளை அவர்கள் அநத 226 பாடல் பழைய உரைக்குச் சிறந்த விளக்கமும், எஞ்சிய பகுதிக்குச் சிறந்த உரையும் எழுதியுள்ளார். புறம், புறப்பாட்டு என்பன இந்நூலுக்கு வழங்கும வேறுபெயர்கள். இந்நூலை டாக்டர் ஜி. யு. போப்துரை மகனார் நன்கு படித்துச் சில பாடல் களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். புலவர்களின் வறுமை நிலை, பெண்பாற் புலவர்களின் சிறப்பு. அரசியரும் பாடல் பாடும் திறம் போன்றன, ஆங்காங்கு மிளிரும் ஒளிர் முத்துக்களாம். இந்நூலைத் தொகுத்தவரும், தொகுப் பித்தவரும் இன்னார் என்று தெரியவில்லை இந்நூலின் தலைப்பில் சிவபெருமானைப் பற்றிப் பாரதம் பாடிய பெருந் தேவனார் பாடிய பாடல் ஒன்று உண்டு. சுருங்கக்கூறின்

ஒரு காலக் கண்ணாடி--பண்பாட்டுக் கருவூலம் புறநானூறு என்று கூறின் அது மிகையாகாது.

## 5. பத்துப்பாட்டு

பத்துப்பாட்டுச் செய்யுட்கள் மிகுந்த அடிகளை உடையன. இவை யாவும் ஆசிரியப் பாக்களே. பத்துப்பாட்டு காப்பியங்களுக்கு விருந்து. இத்தொகையில் அடங்கிய பத்து நூல்களாவன:

| | |
|---|---|
| 1. திருமுருகாற்றுப்படை | 6. மதுரைக் காஞ்சி |
| 2. பொருநராற்றுப்படை | 7. நெடுநல்வாடை |
| 3. சிறுபாணாற்றுப்படை | 8. குறிஞ்சிப் பாட்டு |
| 4. பெரும்பாணாற்றுப் படை | 9. பட்டினப் பாலை |
| 5. முல்லைப்பாட்டு | 10. மலைபடுகடாகம் [கூத்தராற்றுப்படை] |

1. **திருமுருகாற்றுப்படை:** புலவராற்றுப்படை, முருகு என்பன இந்நூலுக்கு வழங்கும் வேறு பெயர்கள். இது 317 அடிகளைக் கொண்டது. இது ஆசிரியப்பாவால் இயன்றது. வீடு பெறுவதற்கு அமைந்த ஓர் இரவலனைப் பெற்ற ஒருவன் முருகப் பெருமானிடத்து ஆற்றுப்படுத்துவதே இத்தொடரின் பொருள். இது பாட்டுடைத் தலைவன் பெயர் பெற்று விளங்கும் தனிச் சிறப்பு உடையது. இதை இயற்றியவர் நக்கீரர். இவர் காலம் இரண்டாம் நூற்றாண்டு என்பர். இது ஆறு பெரும் பிரிவுகளையுடையது. முதற்பகுதியில் முருகப்பெருமான் உருவச் சிறப்பு. அவன் அணியும் மாலை வகைகள், மதுரை, திருப்பரங்குன்றத்தின் சிறப்பு போன்றன இடம் பெறும். இரண்டாம் பகுதியில் முருகனைத் தாங்கி வரும் யானையின் இயல்பு, ஆறுமுகங்களின் செயல், பன்னிருகைகளின் செயல் போன்றன இடம் பெறும். மூன்றாம் பகுதியில் முனிவர் ஒழுக்கம், முருகனைக்

காணவரும் பெண்டிர் இயல்பு, பழனியின் சிறப்பு போன்றன இடம் பெறும். நான்காம் பகுதியில் சுவாமி மலையின் சிறப்பு இடம் பெறும். ஐந்தாம் பகுதியில் முருகப் பெருமான் குன்று தோறும் ஆடும இயல்பு இடம் பெறும. ஆறாம் பகுதியில் பழமுதிர் சோலையின் சிறப்பு இடம் பெறும்.

**2. பொருநராற்றுப்படை :** கரிகால் பெருவளத் தானை முடநதாமக் கண்ணியார் பாடிய பாடலே இது. இப்பாட்டில் இடம் பெறும் பொருநன் போர்க்களம் பாடு கின்றவன். சோழனைப் புலவர் 'கருவிலே திருவுடையான்' எனப் பாராட்டுகின்றார். அவனை ஆளியின் குருளைக்கு ஒப்பிடுகின்றார். இதில் புலவர்களின் வறுமை நிலை நன்கு படம் பிடித்துக் காட்டப்படும், இந்நூலில்,

> ''ஈரும் பேனும் இருந்து இறைகூடி
> வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
> துன்னல் சிதாஅர்......''

என வரும் காட்சி உள்ளத்தை உருக்கும். இந்நூலைக் கொண்டு பண்டைத் தமிழரின் பழக்க வழக்கம் நன்கு புலனா கும். காக்கைக்குச் சோறிடுதல், பண்டமாற்றுச் செய்தல், நிலவளம போன்றன நன்கு புலனாகும். இந்நூல் 248 வரி களைக் கொண்டது.

**3. சிறுபாணாற்றுப்படை :** இந்நூலைப் பாடியவர் நத்தத்தனார். பரிசில பெறக் கருதிய பாணன் ஒருவனைப் பரிசில் பெற்ற ஒரு பாணன் ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் பால் ஆற்றுப்படுத்துவதாக அமைந்ததே இந்நூல். சிறு பாணனை ஆற்றுப்படுத்தலின் சிறுபாணாற்றுப்படை என்பர் சிலர், சிறிய யாழை மீட்டும் சிறு பாணனின் ஆற்றுப்படை என்றும் பொருள் கொள்வர்.

**4. பெரும்பாணாற்றுப்படை :** தொண்டைமான் இளந்திரையனிடம் பெம்பாணன் ஒருவனை மற்றொரு பாணன் ஆற்றுப்படுத்துவதாக அமைந்ததே இந்நூல்.

இதனை இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். பண்டைத தமிழகத்தில் கலங்கரை விளக்கம் உண்டு என்ற உண்மையைத் தெரிவிக்கும் இந்நூல். இந்நூலில் உவமைகள் தனிச் சிறப்பிடம் பெறும். இந்நூல் 500 அடிகளைக் கொண்டது.

5. **முல்லைப்பாட்டு :** இந்நூலாசிரியர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார். இந்நூலே பத்துப்பாட்டில் மிகச்சிறியது. 103 அடிகளைக் கொண்டது. இதன் வேறு பெயர் முல்லை. இது அகப் பொருள் பற்றியது இருத்தல் ஒழுக்கத்தைப் பற்றிச் சிறப் பித்துக் கூறுவது. பிரிந்து சென்ற கணவன் வரும் வரையில் அவன் பிரிவை ஆற்றி இருந்து இல்லறம் நடத்தும் ஒழுக்கமே முல்லை

6. **மதுரைக்காஞ்சி :** மதுரையில் அரசனுக்குக் கூறிய காஞ்சி என்பதே இத்தொடரின் பொருள். மாங்குடி மருதனார் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நிலையாமையை அறிவுறுத்துவதே இந் நூலின் சிறப்பு. காஞ்சி என்பது வீடுபேறு நிமித்தமாகப் பல் வேறு நிலையாமையைப் பற்றிச் சான்றோர் கூறுவது என்பர் தொல்காப்பியர், புறப்பொருள் வெண்பாமாலையோ உட் காது எதிர் ஊன்றுவதே காஞ்சி எனக் கூறும். இந்நூலில்,

''யாறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு''
''வையை அன்ன வழக்குடை வாயில்''
''பயன் அறவறியா வளங்கெழு திருநகர்''

என்று மதுரை பலவாறு பாராட்டப் பெறுகின்றது.

7. **நெடுநல்வாடை :** இந்நூலை இயற்றியவர் நக்கீரர் இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். பாண்டியன் நெடுஞ் செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு அவ்வருத்தம் நீங்கும்படி அவன் பகையை வென்று விரைவில் வருவானாக

என்று கொற்றவையை வேண்டிக் கூறியதாக அவனை நக்கீரர் பாடியது என்று கூறுவார் டாக்டர் உ. வே. சா அவர்கள். நெடுநல்வாடை என்பது நெடிதாகிய நல்ல வாடை. தலைவனைப் பிரிந்து வாழும் தலைவிக்கு ஒரு யுகம் போல் இருப்பதால் வாடை அவளுக்கு நெடுவாடை யாயிற்று. மன்னன் இன்பத்தில் நாட்டமற்று வேற்றுப்புலம் சென்று பாசறையில் தங்கிப் பகைமுடிப்பதற்குத் துணை செய்தமையால் அவனுக்கு நல்வாடையாயிற்று. அன்னத்தின் உள்சிறகு பரப்பப்பெற்ற கட்டிலில் தேவி இருந்து கண்ணீர் வடிக்கும் நிலை, திங்கள், உரோகிணி முயக்கம் பற்றிய ஓவியம் கண்டு பெருமூச்சுவிடும் நிலை போன்றன இந்நூலின் உயிர நாடி. பூமலரப் பொழுதறியும் வழக்கம், மாலைக் காலத்தில் மகளிர் தெய்வத்தை வழிபடும் முறை போன்றன இந்நூல காட்டும் சிறப்புச் செய்திகள்.

**8. குறிஞ்சிப்பாட்டு :** இதைப் பாடியவர் கபிலர் ஆரிய அரசன் பிரகத்தனுக்கு அகப் பொருள் வாயிலாகத் தமிழின் சிறப்பை உணர்த்துவதே இந்நூல். இந்நூல் 261 அடிகளை உடையது மனிதஇனத்திற்கு எல்லாம் மணியாகத் திகழும் அறிவுரை ஒன்று இந்நூலில் இடம் பெறுகிறது. முத்தும், மணியும், பொன்னும் மாசடைந்தால் கழுவி அம்மாசைப் போக்கி விடலாம். ஆனால் கற்பும், இயல்பும் ஒழுக்கமும் குன்றினால் எவ்வாறு ஈடு செய்ய இயலும்? முடியாதே ! என்று கூறுகின்றார்.

''சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்ககும் அந்நிலை
எளிய என்னார்''

என்பதே அது. இவ்வாறு இனிய காட்சி, வருணனை, அறிவுரைகளால் சிறந்த குறிஞ்சிப் பாட்டைச் செந்தமிழின் தீம்பாட்டு எனக் கூறலாம்.

**9. பட்டினப்பாலை:** இதுவும் அகப்பொருள் பற்றியதே. காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் பாலைத்

திணையாதலின் இந்நூல் பட்டினப்பாலை எனப் பெயர் பெற்றது. சோழன் கரிகால் வளவனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியதே இந்நூல். இது 301 அடிகளைக் கொண்டது. பூம்புகாரின் சிறப்பு, நாளும் பல்வகைப் பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி ஆகும் சிறப்பு, பல்வேறு நாட்டினர் வாணிகத்தின் காரணமாகப் புகாரில் குழுமியிருக்கும் சிறப்பு போன்றன இந்நூலில் இடம்பெறும்.

**10. மலைபடு கடாம் :** இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் நன்னன் சேய் நன்னனைப் பாடியதே இந்நூல். ஒரு கூத்தரை ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளதால் இது கூத்தராற்றுப்படை என்றும் பெயர்பெறும். இந்நூல் மலைக்கு யானையை உவமை காட்டி, அம் மலையிலிருந்து ஒழுகும் அருவி ஓசை மதநீர் ஒழுகும் ஓசைக்கு உவமை காட்டப்படுதலால் இது ''மலைபடு கடாம்'' எனற இப்பெயர் பெற்றது.

## 6. சங்க காலம் ஒரு பொற்காலம்.

தங்கம் நிகர் சங்ககாலம், வரலாற்று ஏட்டில் ஒருபொற்காலம் என்று கருதப்படும' காரணம் சான்றோர் பலர் வாழ்ந்த காலம சங்க காலம். அவர் சாதி, குலம், தொழில் என்ற வேறுபாடு கருதாது வாழ்ந்த காலம். அறிவுக்கு அடிபணிந்த காலம். உலகில் கற்றவரே தலை சிறந்தவர் என்று கருதப்பட்ட காலம். அத்தகைய சங்க காலத்தின் சிறப்பை இவண் விரிவாகக் காண்போம்.

சங்க இலக்கியத்தில் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட கற்பனையை மருந்திற்கும் காணமுடியாது. உள்ளதை உள்ளவாறு கூறுவதே சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு. சங்க காலப் புலவரிடையே ஓர் ஒருமைப்பாடு நிலவிற்று. காரணம் அவர்கள் அனைவரும் ஓரினத்தவர் அல்லர். ஒரு காலத்தவர் அல்லர், ஓரிடத்தவர் அல்லர். அவ்வாறிருந்தும் அவர்கள் தம்முள் ஒரு சிறிதும் மாறுபாடு கொள்ளவில்லை.

புலவர்களுக்குச் சமமாகப் புரவலர்களும் பாடல் இயற்றினர். பாண்டியன் அறிவுடை நம்பி ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கோப்பெருஞ்சோழன் போன்ற அரசர்களே இவ்வுண்மைக்கு ஏற்ற எடுத்துக்காட்டு. இவ்வாறே சங்க காலத்தில் பெண்பாற் புலவர்களும் உண்டு. அவருள் அரசியாரும் உண்டு. வெள்ளி வீதியார், ஔவையார், காவற்பெண்டு, மாறோக்கத்து நப்பசலையார், பூங்கணுத்திரையார் போன்றார் பெண்பாற் புலவர்கள். பூதபாண்டியன் தேவி, ஆதிமந்தி போன்றார் அரசியர்கள்.

சங்க காலத்தில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த உள்ளம் எங்கும் நிலவிற்று. காழ்ப்புணர்ச்சி என்பதே அக்காலத்தில் இல்லை. ஒரு புலவர் தம்பாடலில் மற்றொரு புலவரை எடுத்தாள்வதே இதற்குச் சான்று. எடுத்துக்காட்டாகப் பெருஞ்சித்திரனார் தம் பாடலில், 'மோசி பாடிய ஆய்' என்று மோசியார் என்ற புலவரைக் குறிப்பிடுகின்றார். அவ்வாறே நல்லிசைக் கபிலன் என்று கபிலரைப் போற்றுகின்றார். 'அணியில்லாத கவிதை பணியில்லாத வனிதை' என்று கூறப்படுமாதலின் சங்கப் புலவர் பாடலில் அணி நலம் கமழும். உள்ளுறை, இறைச்சி போன்றன களி நடம் புரியும். சங்க நூல்களில் நீதிக் கருத்துக்கள் நின்று நிலவும். அக்கால மக்கள் தரை வழியாகவும், கடல் வழியாகவும் சென்று யவனர் போன்ற பிறநாட்டாரோடு வாணிகம் புரிந்த வளத்தை எடுத்துக் கூறும். சங்ககாலப் பாடல்களில் காதலும், வீரமும், களிநடம் புரியும். சங்ககால மக்களின் வாழ்வு புகழை அடிப்படையாகக் கொண்டது. இவ்வுண்மை ''புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்'' என வரும் புறநானூற்று அடிகளால் புலனாகும். சங்க இலக்கியத்தில் பிறமொழிக் கலப்பு பெரிதும் இல்லை. எங்கும் தூய தமிழ் நடையே காணப்படும்.

இறுதியாகச் சங்ககாலம் வறுமை அறியாத வளமிகு காலம். சங்ககாலப் பொருளாதார வளம் பட்டினப்பாலையில் பெரிதும் இடம் பெறும்.

இத்தகைய சிறப்புக்கள் பலவற்றைப் பெற்றிருப்பதால் தான் இலக்கிய வரலாற்றில் சங்ககாலம் ஒரு பொற்காலம் என்று பெரிதும் போற்றி உரைக்கப்படுகின்றது.

## 7. சங்கம் மருவிய கால இலககியங்கள்.

கீழ்க்கணக்கு என்பது இரண்டடி முதல் ஆறடி வரை வெண்பாவினாலோ, அதன் இனத்தினாலோ ஆகிவரும் நூலாகும். இவை பதினெட்டு நூலாதலின் பதினெண்கீழ்க்கணக்கு என்ற பெயர் பெறறது. அவற்றுள் **நீதி பற்றிய அறநூல்கள் 11** .—அவையாவன : நாலடியார், நான்மணிக்கடிகை இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம, முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, திருக்குறள்.

**அகப்பொருள் பற்றிய நூல்கள் 6** :— கார் நாற்பது, ஐந்திணை ஐமபது. ஐந்திணை எழுபது. திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைநநிலை.

**புறப்பொருள் பற்றியது 1** :—களவழி நாற்பது

**1. நாலடியார் :** இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாககளினாலாகிய நூல், இதுநானூறு பாடல்களைக் கொண்டதால் 'நாலடி நானூறு' என்றும் பெயர் பெறும். 'ஆலும் வேலும பல்லுககுறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி', 'பழகுதமிழச் சொல்லருமை நாலிரண்டில்', 'நாலடி இரண்டடி கறறவர் முன் வாயடி கையடி ஆகாதே' எனவரும தொடர்கள் இந்நூலின் பெருமையை நன்குணர்த்தும். இதில் ஒவ்வொருபாடலும ஒவ்வொரு சமண முனிவரால் இயற்றப் பெற்றது. இந்நூலைப் பதுமனார் என்ற சைன முனிவர் தொகுத்தார். இநநூலை நக்கீரர் இயறறியிருக்க வேண்டும் என்பது மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களின் கருத்து. இந்நூல் திருக்குறளைப் போல அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பெரும் பிரிவுகளும், அதிகார முறை வைப்பும்

கொண்டது. இந்நூலின் பெருமையை நன்குணர்ந்தே ஜி. யு. போப் துரைமகனார் இதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**2 நான்மணிக்கடிகை :** இந்நூல் அறவொழுக்கம் பற்றிய நூல்களில ஒன்று. இதை இயற்றியவர் விளம்பி நாகனார். இந்நூல் 101 வெண்பாக்களை உடையது. ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணிபோன்ற உண்மைகள் கூறப் படுவதால் இது நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது. இந்நூல் தொல்காப்பியர் கூறும் எட்டு வகை வனப்புகளில் ஒன்றாகிய அம்மை என்ற வனப்பில் அடங்கும் என்பது உரையாசிரியர் கூற்று. ஆசிரியர் கடவுள் வாழ்த்தில் திரு மாலைப் போற்றுவதால் வைணவரோ என்று கருத இடம் தருகிறது.

**3. இன்னா நாற்பது :** இந்நூல் அறவொழுக்கம் பற்றிய நூல்களில ஒன்று. இந்நூலாசிரியர் கபிலர். இவர் சங்க காலக் கபிலரினும் வேறுபட்டவர். இந்நூலாசிரியர் இந்த உலக வாழ்வில் கண்ட இன்னாதன சில கூறுகின்றார். ஒவ்வொரு பாடலிலும் இன்னது இன்னது துன்பம் தரு மென்று கூறப்படுவதால் இது இப்பெயர் பெற்றது

**4. இனியவை நாற்பது.** இந்நூல் அறவொழுக்கம் பற்றிய நூல்களில் ஒன்று. இந்நூலாசிரியர் மதுரைத் தமிழா சிரியர் மகனார் பூதஞ்சேந்தனார். ஒவ்வொரு பாடலிலும் நான்கு அல்லது மூன்று இனிய பொருள்கள் கூறப்படுவதால் இந்நூல இப்பெயர் பெற்றது.

**5. கார் நாற்பது :** இந்நூல் அகப்பொருள் நூல்களில் ஒன்று. இதன் ஆசிரியர் மதுரைக் கண்ணங்கூத்தனார். இந் நூலில் கார் காலத்தின் அழகு மிகச் சிறப்பாக இடம் பெறும். இந்நூல் இயம்பும் காலத்தால், அழகுற இப்பெயர் பெற்றது.

**6. களவழி நாற்பது :** இந்நூல் புறப்பொருள் நூலாகும். இதன் ஆசிரியர் பொய்கையார். கழுமலம் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் கோச்செங்கணானோடு போரிட்டுத் தோல்வியுற்றான் குடவாயில் கோட்டத்தில் சிறைப்பட்டான். இதைக் கேட்ட பொய்கையார் சோழனின் வெற்றியைப் புகழும் முகமாக இந்நூலைப் பாடிச் சேர அரசனை மீட்டார் என்பர். இந்நூலில் யானைப்போர், கார்த்திகைத் திருவிழா முதலியன மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. உதிரம் உண்ட காக்கை வடிவு இழந்து செம்போத்தின் புறத்தை உடைய சிச்சிலிப் பறவை போலக் காணப்பட்டது என்பது இவர் கற்பனை பிறப்பிற்கோர் இருப்பிடம்.

**7. ஐந்திணை ஐம்பது :** இந்நூல் அகப்பொருள் நூல்களில் ஒன்று. இது முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற அகப் பொருள் திணை பற்றிய பத்துப் பத்துப் பாக்களாக அமைந்த 50 பாக்களை கொண்டது. இதன் ஆசிரியர் மாறன் பொறையனார். இது அகப்பொருள் உண்மை கூறும் அரிய இலக்கியக் கருவூலம்.

**8. திணைமொழி ஐம்பது :** இந்நூல் அகப்பொருள் நூல்களில் ஒன்று. இந்நூலாசிரியர் கண்ணன் சேந்தனார், திணை ஒன்றிற்கு 10 பாக்கள் வீதம் 50 பாக்களைக் கொண்டது. இது சொல் நயம், பொருள் நயம் வாய்ந்தது,

**9. ஐந்திணை எழுபது :** இந்நூல் அகப்பொருள் நூல்களில் ஒன்று. இந்நூல் ஒவ்வொரு திணைக்கும் 14 பாடல்கள் வீதம் 70 பாடல்கள் பெற்றிருப்பதால் இப்பெயர் பெற்றது. இந்நூலாசிரியர் மூவாதியார். இவர் மதம் பற்றிப் பல கருத்துக்கள் உண்டு. ஒரு சிலர் சமண மதத்தினர் என்பர். ஆனால் அதற்கு அகச்சான்று இல்லை, காதலர்ப் பிரிந்தவரிடம் வரும் மாலைக்காலம் கொலைக்களத்தில் வரும் ஏதிலர் போல இருக்கும் என்ற குறட்கருத்து மிக அழகாக எடுத்தாளப்படுகிறது.

**10 திணைமாலை நூற்றைம்பது :** இந்நூல் அகப் பொருள் நூலகளில் ஒன்று. இதனைப் பாடியவர் கணிமே தாவியார். இந்நூலில் இயற்கை அழகு மிகுச் சிறப்பாக இடம் பெறும். இந்நூலின் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு என்பர்.

**11. திருக்குறள் :** தமிழ்நாட்டுச் சாக்ரடீஸ் என்று போற்றப்படும் திருவள்ளுவரால் இயற்றப் பெற்றதே திருக் குறள். வாயுறை வாழ்த்து, பொய்யாமொழி, முப்பால் போன்றன இந்நூலுக்கு வழங்கும் வேறு பெயர்கள். இந்நூல் குறள் வெண்பாவினால் ஆனது. 133 அதிகாரங்களைக் கொண்டது. 1330 அருங் குறட்பாக்களைப் பெற்றது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பெரும் பிரிவுகளைப் பெற்றது. அறம், வாய்மை, இன் சொல், தவம் போன்றவற்றிற்கு இந்நூல் விளக்கம் கூறும் அழகே அழகு. இந்நூலில் வரும் உவமைகள் சிந்தைக்கினி யன; செவிக்கினியன இந்நூலுக்குப் பரிமேலழகர், மணக் குடவர், நச்சர், காளிங்கர் போன்ற பலர் சிறந்த உரை எழுதியுள்ளனர் இந்நூலின் பெருமையை நன்குணர்ந்தே ஜி. யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். நாயனார், தேவர், முதற் பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப் போதார். பெரு நாவலர் போன்றன இந்நூலாசிரியருக்கு வழங்கும் வேறு பெயர்கள் இந்நூல் அனைவருக்கும் பொது நூலாக விளங்கு கின்றது இந்நூல் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க் கப்பட்டுள்ளது. இந்நூலின் காலம் ஏறத்தாழ கி.மு. I முதல் 300-க்கு உட்பட்டது என்பர்.

**12 திரிகடுகம் :** இந்நூல் அறவொழுக்கம் பற்றிய நூல்களில் ஒன்று. இந்நூலாசிரியர் நல்லாதனார். சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று பொருள்களால் ஆகிய மருந்து மக்கள் உடல் பிணியைப் போக்குவதைப் போல இந்நூலில் கூறப்படும் ஒவ்வொரு பாடல் மூன்று கருத்துக்களும் மக்கள் உளப்பிணியைப் போக்குவதால் இந்நூல் இப்பெயர் பெற

றது. இந்நூலாசிரியர் 5–ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்பர்.

**13 ஆசாரக்கோவை:** இந்நூல் அறவொழுக்கம் பற்றிய நூல்களில் ஒன்று. இந்நூலாசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் வடமொழி, தமிழ் மொழிப் புலமை உடையவர். இவர் தம் பாடல்களில் உண்ணல், உறங்கல் உபசாரம், ஒழுகும் முறை முதலிய செய்திகளைக் கூறியுள்ளார்.

**14. பழமொழி:** இந்நூல் அறவொழுக்கம் பற்றிய நூல்களில் ஒன்று. இந்நூலாசிரியர் முன்றுறை அரையனார். இவர் சமண மதத்தினர் இந்நூல் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி காணப்படுவதால் இப்பெயர் பெற்றது. இது நானூறு பாடல்களைக் கொண்டது ஆதலின் பழமொழி நானூறு என்ற இப்பெயர் பெற்றது. 'திங்களை நாய் குரைத்தற்று'; 'பாம்பறியும் பாம்பின கால்'; 'யானையால் யானை யாத்தற்று'; 'ஆயிரம் காக்கைக்கு ஓர் கல்' போன்றன இந்நூலில் காணப்படும் அழகிய பழமொழிகளாம்.

**15. சிறுபஞ்சமூலம்:** இந்நூல் அறவொழுக்கம் பற்றிய நூல்களில் ஒன்று. இந்நூலாசிரியர் காரி ஆசான். இவர் சைனர். கண்டங்கத்தரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சி வேர் ஆகிய 5 வேர்களைக் கொண்டு செய்யும் மருந்து மக்கள் உடல் பிணியைப் போக்குதலைப் போல் இந்நூலில் கூறப்படும் ஒவ்வொரு பாடலிலும் வரும் ஐந்து கருத்துக்களும் மக்கள் உளப்பிணியைப் போக்குவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூலின் சமண சமயக் கருத்துக்கள் நிலவும். சமயப் பொதுக் கருத்துக்கள் பலவும் இடம் பெறும்.

**16. முதுமொழிக் காஞ்சி:** இந்நூல் அறவொழுக்கம் பற்றிய நூல்களில் ஒன்று இந்நூலாசிரியர் கூடலூர் கிழார். இது சிறு அடிகளை உடைய நூல். இந்நூலில் சிறந்த பத்து,

அறிவுப் பத்து, இல்லைப் பத்து, பொய்ப் பத்து, போன்ற பத்து அதிகாரங்கள் உண்டு. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பத்துப் பாடல்கள் இடம்பெறும். இளமைப பரு வத்தில் கல்லாமை குற்றம், வளமில்லாத போழ்து வள் ளன்மை குற்றம் போன்றன இந்நூல் கூறும் நயமான கருத் துககளாம். இந்நூல் ஆசிரியர் கல்வியிலும மேபபட்டது என்ற கருத்தை வலியுறுத்த.

'ஆர்கலி உலகத்து மக்கட்(கு) எல்லாம்
ஓதலின் சிறந்தன(று) ஒழுக்கம உடைமை'' என்றார்.

**17. ஏலாதி :** இந்நூல் அறவொழுக்கம் பற்றிய நூல் களில ஒன்று. ஏலம, இலவங்கம, நாககேசரம், சுக்கு, மிளகு திப்பிலி என்ற அறுவகைப் பொருள்களால் ஆகிய மருநது மககளை உடல் பிணியைப போக்குதலைப் போல இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் கூறப்படும் ஆறு கருத்துககளும் மக்கள உளப் பிணியைப் போக்கும். இநநூலாசிரியர் கணி மேதாவியார். இவர் சமண மதத்தினர். வடமொழிப் பயிற்சி உடையவர்.

**18. கைந்நிலை :** இந்நூல் அகப்பொருள் நூல்களில் ஒன்று. இதன் ஆசிரியர் புல்லங்காடனார். இது அன்பின் ஐந்திணையை விரித்துக் கூறும் அக இலக்கியம். இது திணைக்குப பன்னிரணடு பாடலகள் வீதம் 60 வெண்பாக் களைக் கொண்டது. இவ்வெணபாக்களில் பல சிதைந்துள் ளன. இப்பாடல் தொகுதி இன்னிலையா? கைந்நிலையா? என்ற ஓர் ஆராய்ச்சி எழுந்தது. இரணடு நூல்களும் வழக் கில் இருநததால் எதைக் கொள்வது என்ற மயக்கம் ஏற்பட் டது. இறுதியில் ஆராய்ச்சியாளர்கள் கைந்நிலையைத்தான் பதினெண் கீழ்க் கணக்கில சேர்த்தனர்.

**இன்னிலை**

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இத னைப் பொய்கையார் பாடினார். அறம், பொருள் இன்பம்

வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் உணர்த்து வது. 45 வெண்பாக்களால் ஆனது. இந்நூலில் சிவபெருமா னைப் பற்றிய குறிப்பு வருகின்றது. அது பின்வருமாறு :

''ஆக்கி அளித்து, அழிக்கும் கந்தழியின் பெருருவே.''

இந்நூலில் நடையழகு பொருந்திய —நயம் பொருந்திய பாடல்கள பலவற்றைக் காண்கிறோம், அவற்றுள் ஒன்றை,

''ஒத்த உரிமையளா ஊடற்(கு) இனியளாக்
குற்றம் ஒருஉம் குணத்தளாக்—கற்றறிஞர்
பேணும் தகையளாக் கொண்கன் குறிப்பறிந்து
பேணும் தகையினள் பெண்''

என வரும் அருமையான பாடல்.

## 8. இரட்டைக் காப்பியங்கள்

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஒரே குடும்ப வரலாற்றைக் கூறுவதால் அவை இரட்டைக் காப்பியம எனப்படும். அவற்றின் சிறப்பை இங்கு விரிவாகக் காண்போம.

**சிலப்பதிகாரம் :** நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனறு போற்றப்படும் நூல் சிலப்பதிகாரம். இந்நூல் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் விரவி வரப்பெற்றத னால முத்தமிழக் காப்பியம் என்றும், பொருள் தொடர் நிலைச் செயயுள் என்றும் 'உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும வேறு பெயர் பெறும்.

இந்நூல் வண்தமிழ் மூவர் சிறப்புக்களையும் ஒருங்கே எடுத்துக் கூறுகின்றது. சோழன் சிறப்பு புகார்க் காண்டத் திலும் பாண்டியன் பெருமை மதுரைக் காண்டத்திலும், சேரன் வீரம் வஞ்சிக் காண்டத்திலும் நன்கு புலனாகும். இதை இளங்கோவடிகள் ஓர் ஒற்றுமைக் காப்பியமாகப்

படைத்துள்ளார். இந்நூல் முப்பெரு நீதிகளை உலகிற்கு உணர்த்த எழுந்தது என்பர். ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்ற செய்தி புகார்க் காண்டத்தில் பேசப்படு கின்றது. அரசியல் நெறியில் பிழைத்தோர்ககு அறம கூற்றா கும் என்ற உண்மை மதுரைக் காண்டத்தில் நீதி தவறிய பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் துறந்ததனால் உணர்த் தப்படுகின்றது. பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் போற் றுவா என்ற செய்தி வஞ்சிக் காண்டத்தில் விளக்கப்படுகிறது.

இந்நூல் மங்கல வாழ்த்துப் பாடல் முதலாக வரந்தரு காதை ஈறாக 30 காதைகளை உடையது. சிலப்பதிகாரம் பெருமபான்மை ஆசிரியப் பாககளினாலும், சிறுபான்மை பிறவகைப் பாக்களினாலும அமைந்தது. இது ஐவகை நிலத்து மக்களைப் பற்றியும், அவர்தம் ஒழுக்கம, பண்பு முகலியன பறறியும் விரித்துக் கூறுகின்றது. இந்நூலை இயறறியவர் இளங்கோவடிகள். இவர் ஒரு சமணத்துறவி, இநத உண்மை 'குணவாயில கோட்டத்து அரசு துறந் திருநத' என்ற பதிகத்தின் முதல் தொடரால அறிகின் றோம். இவர் செங்குட்டுவன் தம்பி. செங்குட்டுவன் சிறந்த சைவன இளங்கோவடிகள் சமயமும சைவமே என்பார் டாகடர். உ. வே. சாமிநாதையர் அவர்கள். கவுநதியடிகளை தம் சமயக் கருத்துக்களைக் கூறப்படைத்திருப்பதால் இவரை சமணர் என்பர் சிலர். இவர் சமயம் எப்படியாயினும ஆகுக. சமய ஒருமைப்பாட்டினையும், அமைதியினையும கூறவநத அருங்கவிஞர் இளங்கோவடிகள என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. இநநூலில் கயவாகு என்ற இலங்கை வேநதன குறிக்கப்பெறுகிறான். இவன் இலங்கையில அர சாண்ட காலம் கி பி. 2-ஆம் நூற்றாண்டு என்பர். ஆதலின் சிலப்பதிகாரக் காலமும் அககாலமே எனலாம். இந்நூலுக்கு அரும்பத உரையாசிரியர் எழுதிய பழைய உரையும், பிற்கா லத்தில அடியார்க்கு நலலார் எழுதிய சிறநத உரையும் உள்ளன.

இறுதியாக இளங்கோவடிகள் வரந்தரு காதையில்,

''பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்''

எனத் தொடங்கி,

''செல்லும் தேஎத்துக்(கு) உறுதுணை தேடுமின்
மல்லல் மா ஞாலத்து வாழ்வீர்'' என்று முடிக்கும் பகுதியில் உலகோர்க்குக் கூறும் அறிவுரை சிந்தைக்கினிய. செவிக்கினிய அறிவுரை ஆகும்.

**மணிமேகலை :** சிலப்பதிகாரக் காப்பியத் தலைவனாம் கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மணி மேகலையின் வரலாற்றைக் கூறுவதால் இந்நூல் மணி மேகலை என்ற இப்பெயர் பெற்றது. இந்நூல் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இது மணிமேகலை துறவு என்றும் பெயர் பெறும். இந்நூலை இயற்றியவர் மதுரைக் கூலவாணி கன் சீத்தலைச் சாத்தனார் என்பவர் ஆவார். இவர் திருச்சி மாவட்டத்திலுள்ள சீத்தலை என்ற ஊரினர் ஆதலாலும், மதுரையில் கூலவாணிகம் செய்ததாலும் இப்பெயர். பெற்றார் என்பர். இவர் பாடல்கள் நற்றிணை, குறுந் தொகை, அகநானூறு, புறநானூறு முதலிய சங்க நூல்களில் காணப்படுகின்றன. இவர் காலம் கி. பி, 2—ஆம் நூற்றாண்டு.

இந்நூல் கதை சிலப்பதிகாரக் கதையோடு பெரிதும் தொடர்புடையது. இதனால் தான் சிலப்பதிகாரத்தில் உரை பெறு கட்டுரையில்,

''மணிமே கலையோடு உரைப்பொருள் முற்றிய
சிலப்பதிகாரம் முற்றும்''

என்ற தொடர் காணப்படுகின்றது. இந்நூல் விழாவறை காதை முதலாகப் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற

காதைச் சிறாக முப்பது காதைகளைக் கொண்டது. இந்நூலில் இந்திர விழா பற்றியும், பெண்டிர் சிறப்புப் பற்றியும் உடலின் இழிவு பற்றியும குறிக்கப்பட்டுள்ளன. இதில் பௌத்த சமயக் கருத்துக்கள் மிகுதியாக உள்ளன. நாட்டில் ஆட்சி செம்மையாக நடைபெறாவிட்டால் நாடு அழியும் என்றும் இந்நூல் கூறுகின்றது உண்டி கொடுத்தலே சிறந்த அறம் என்று இந்நூல் கூறுகின்றது.

## கல்லாடம்

இது ஆசிரியப்பாவால் ஆகிய நூல். 100 பாடல்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் கல்லாடர்.

''கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே''

''கல்லாடம் கற்றவனோடு மல்லாடாதே';

என வரும் தொடர்கள் இதன் சிறப்பினை உணர்த்தும். கல்லாடர் ஒவ்வொரு பாடலையும் மதுரை திருக்கோயிலில் பாடி முடித்தபோது அவர் பாடல் ''நன்று நன்று'' என்று இறைவன் தலையசைத்ததாகக் கூறப்படுகிறது. மாணிக்கவாசகர் இயற்றிய திருக்கோவையாரின் சிறப்பை ''மாற்றுரைக்கக் கல்''போன்றது இந்நூல். இவர் காலம் தேவாரம் பாடிய மூவருக்கும பிற்பட்ட காலமாயிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இந்நூலுககுச் சங்குப் புலவர் என்பார் சிறநத உரையெழுதியுள்ளார்.

இந்நூலுக்கும், சிலப்பதிகாரத்திற்கும் கருத்து ஒற்றுமை அடி ஒற்றுமை. தொடர் ஒறறுமை, சொல் ஒற்றுமை, போன்ற பல ஒற்றுமைகள் உண்டு. ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதை இரு காப்பியங்களும் பேசுகின்றன.

## முத்தொள்ளாயிரம்

இருண்ட காலம் என்று கூறப்படும் வரலாற்று ஏட்டுக் காலத்தில் தோன்றிய ஒரு சிறநத நூலே முத்தொள்ளா

யீரம். மூவேந்தர்கள் சேர, சோழ, பாண்டியர்களைத் தலைவர் களாகக் கொண்டு சிறப்பித்துப் பாடப் பெற்ற பாடல்களைக் கொண்ட நூலே இது. ஒவ்வொரு அரசருக்கும் 900 பாடல் களாக 2700 பாடல்கள் முன்பு இருந்தனவாம். ஆனால் நூல் கிடைக்கவில்லை. 108 பாடல்களே இன்று கிடைத் துள்ளன. இதில் கூறப்படும் சில பழமொழிகள் சிந்தைக் கினிய, செவிக்கினிய.

> ''பிணி கிடந்தார்க்குப் பிறந்தநாள் போல'';
> ''நீரொழுகப் பால் ஒழுகாதவாறு போல'';
> ''உழுத உழுத்தஞ்சேய் ஊர்க்கன்று மேய
> கழுதை செவி அரிந்தற்றால்'' —

எனவரும் தொடர்கள் மிகச் சிறந்த தொடர்கள்.

மூவேந்தரின் கொடை, வீரம், போர், படைச்சிறப்பு, குதிரை, யானை மறம், நாடு, நகர் வளம் ஆகியவற்றை இந் நூலில் அறிய முடிகிறது. சோழனது களிறு எத்தகையது என்பதைப் புலவர்

> ''கச்சி ஒருகால் மிதியா ஒருகாலால்
> தத்துநீர்த் தண்தஞ்சை தான்மிதியா—பிற்றையும்
> ஈழம் ஒருகால் மிதியா வருமேநம்
> கோழியர் கோக்கிள்ளி களிறு''

எனவரும் பாடலில் நன்கு விளக்குகின்றார்.

இவ்வாறே அரசனுடைய பிறந்த நாட்களாக இரேவதி நாள் என்றும், உத்திராட நாள் என்றும் கூறப்படுகின்ற சிறப்பையும் காணலாம். இந்நூலின் காலம் கி. பி. 5 அல் லது 6-ஆப் நூற்றாண்டு என்பர் சதாசிவப் பண்டாரத்தார்.

> ''அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
> வெள்ளந் தீப்பட்டது என வெரீஇப் புள்ளினந்தங்
> கைச்சிறகால் பார்ப்பொடுக்குங்
> கவ்வை உடைத்தரோ
> நச்சிலை வேல் கோக்கோதை நாடு''.

பாண்டியன் மீது ஒருதலைவி காதல் கொண்டாள். அன்னையே அவளை இற்செறித்து விட்டாள். இற்செறிக்கப் பட்ட தலைவி,

''குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை
வெறுங்கூடு காவல்கொண் டாள்''

என்று கூறுமிடம் நய மிக்கது. இத்துணைச் சுவை மிக்க இந்நூலின் ஆசிரியர் பெயர் இன்னதென்று அறிய இயலாமை வருந்துதற்குரியதே.

## நந்திக்கலம்பகம்

பல்லவ மரபில் தோன்றிய மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பெற்றதே நந்திக்கலம்பகம் என்ற இந்நூல். மூன்றாம் நந்திவர்மன் பாண்டிய மன்னன் ஒருவனோடு போர் நடத்தி வெற்றி பெற்ற தெள்ளாற்றுப் போரை இந்நூல் விவரித்துக் கூறுகிறது.

''தெள்ளாறெறிந்த நந்திவர்மன்; தமிழ் நந்தி;
சிவனாணை முழுவதும மறவாத சிந்தையன்''

என்றும் போற்றப்படுபவன்.

பல்லவன் வடபுலத்து அரசர்களிடம் வெற்றி பெற்றான் என்பதற்கும், திறைபெற்றான் என்பதற்கும், சோழபாண்டியரை வென்றான் என்பதற்கும் இந்நூலே சான்று. இதில் மூன்றாம் நந்திவர்மன் கடற்படை வைத்திருந்த செய்தி, தமிழ் வணிகன் ஒருவன் சயாமில் குளம் வெட்டிய செய்தி, பெரிய புராணம் கூறும் காடவர்கோன் கழல் சிங்கனே என்ற செய்தி போன்றன இந்நூலில் காணப்படுகின்றன கலம்பகம் என்ற பிரபந்த வகையில் முதன் முதல் நூல் இதுவே. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

இந்நூலில் 'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீத
சந்தனம் என்று ஆரோ தடவினார்'

என்று நந்தியின் ஆகம் தழுவாமல் நையும் தலைவி புலம்பும் பகுதி நயமுடையது.

## 8. பன்னிரு திருமுறைகள்

சைவ சமயச் சான்றோர்களால் இயற்றப்பெற்ற பாடல்களை வகைப்படுத்தி முறை செய்த தொகுதியே பன்னிரு திருமுறை. அவற்றின் முறை வைப்பை இங்கு விரிவாகக் காண்போம்.

**ஒன்று, இரண்டு, மூன்றாம் திருமுறை :** சைவ சமயக் குரவர்களுள் ஒருவரான திருஞான சம்பந்தரால் பாடப் பெற்ற தேவாரப் பாடல்கள் இம்முதல் மூன்று திருமுறைகள். இவர் சோழவளநாட்டில் சீகாழியில் அந்தணர்குலத்தில் தோன்றியவர். காழியர்கோன், ஆளுடையபிள்ளை என்பன இவருக்கு வழங்கும் வேறுபெயர்கள் இவர் தந்தை சிவபாத இருதயர். தாய் பகவதி அம்மையார். இவர் மூன்று வயதிலேயே ஞானப்பால் உண்டு இறையருளால் பொற்றாளம் பெற்றுப் பாடியவர் காவிரியில் ஓடம் தானே இயங்கச் செய்ததும், பூம்பாவையை உயிர்ப்பித்ததும், ஆண் பனையைப் பெண் பனையாக்கியதும், கூன் பாண்டியன் வெப்பு நோயைத் தீர்த்ததும், வைகை ஆற்றில் தாம் இட்ட ஓலை நீரை எதிர்த்துப் போகச் செய்ததும் இவர் ஆற்றிய அற்புதங்களாகும். இவர் காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

**நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் :** உழவாரப் படையைக் கையில் கொண்டு அயராது அருந்தொண்டு புரிந்த வித்தகர் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற தேவாரப் பாடல்களே நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்தார். தந்தை புகழனார், தாய் மாதினியார், இவர் இளமையில் பெற்றோரை இழந்தவர், திலகவதியார் என்ற தமக்கையரால் ஆதரிக்கப் பெற்றவர். வாகீசர், அப்பர் என்பன இவருக்கு

வழங்கும் வேறு பெயர்களாம். சைவத்திலிருந்து சமண மதம் மாறிய இவர் இறையருளால் சூலை நோயுற்று மீட்டும் சைவராக மாறியவர். அப்பூதியடிகள் மகன் மூத்த திருநாவுக்கரசு பாம்பு கடித்து இறந்த போது பதிகம் பாடி அவனை உயிர்ப்பித்தது இவர் ஆற்றிய அற்புதமாம் இவர் காலம் கி பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி,

**ஏழாம் திருமுறை ,** சுந்தரர் பாடிய தேவாரப் பதிகங்களே 7-ஆம் திருமுறை. சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் பிறந்தவர். வன்றொண்டர், தம்பிரான் தோழர், நம்பி ஆரூரர் என்பன இவருக்கு வழங்கும் வேறு பெயர்களாம். இவர் இறைவனால் ஓலைகாட்டித் தடுத்தாட் கொள்ளப்பட்டவர். இவர் தந்தை சடையனார், தாய் இசை ஞானியார். இவர் பொன்னை மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூரில் கமலாலயத்தில் எடுத்தது ஓர் அற்புத மாம். இவர் காலம் 8-ம் நூற்றாண்டு.

**எட்டாம் திருமுறை :** மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகமும், திருக்கோவையாரும் 8-ஆம் திருமுறை, இவர் பாண்டி நாட்டில் திருவாதவூரில் பிறந்தார். இவர் தநதை சம்புபாத சாரியார், தாய் சிவஞானவதியார். பௌத்தரை வாதில் வென்றதும், ஊமைப் பெண்ணைப் பேசவைத்ததும் இவர்ஆற்றிய அற்புதங்களாகும். 'திருவாசகத்திற்கு உருகா தார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்பது பழமொழி. இவர் ஆண்டவன் முன் அழுது அழுது மோட்சம் பெற்றவர். இதுபற்றியே' அழுதபிள்ளை பால்குடிக்கும்' என்றபழமொழி எழுந்தது போலும். இவர் காலம் கி.பி. மூன்றாம்நூற்றாண்டின் பிற்பகுதி என்பர் கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்.

**ஒன்பதாம் திருமுறை :** திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், கண்டராதித்தர், பூந்துருத்திநம்பி, காட நம்பி வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்ற ஒன்பதின்மர் பாடிய திருவிசைப் பாக்கள் ஒன்பதாம் திருமுறை எனப்படுகிறது,

**பத்தாம் திருமுறை :** திருமூலர் பாடிய திருமந்திரமே பத்தாம திருமுறை. திருமூலர் 'சக்கரவர்த்தி தவராச யோகி என்று தாயுமானவரால் போற்றப்படுவர். இவர் நந்தி தேவர் அருள் பெற்ற யோகியர்களுள் ஒருவர். இவர் 3000 ஆண்டுகள் வாழ்ந்தனர் என்பர். இவர் நூல் 3000 செய்யுட் களைக் கொண்டது. ஒன்பது தந்திரங்கள் கொண்டது 232 அதிகாரம் பெற்றது. இவர் பாடல்கள் தத்துவக் கருத்திற்கு ஓர் உறைவிடம், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையைப் பறை சாற்றியவர் இவரே. இவர் காலம் இன்றைக்கு ஏறக்குறைய 8000 ஆண்டுகளுக்கு முன் என்பர்

**பதினோராம் திருமுறை :** திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார் சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரதேவ நாயனார், கல்லாட தேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெரு மான் அடிகள, அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி என்ற பன்னிருவர் பாடிய பாடல் களே பதினோராம் திருமுறை.

**பன்னிரண்டாம்திருமுறை :** திருத்தொண்டர்புராணம். என்று போற்றப்படும பெரிய புராணம் 12-ஆம திருமுறை இந்நூல் சேக்கிழாரால் இயற்றப்பட்டது. இவர்இயற்பெயர் அருண்மொழித் தேவர், இவர் இரண்டாம் குலோத்துங்க னுடைய வேண்டுகோளுக்கிணங்கவே இந்நூலைப் பாடி அருளினார். இவருக்குச் சிவபெருமான் தில்லையில் 'உல கெலாம்' என்று நூல்பாட அடியெடுத்துக் கொடுத்தார், இவர் பாடல்கள் பக்திச் சுவை ததும்புவன. **இவர் காலம் கி,பி. 12-ஆம் நூற்றாண்டு,**

## திருக்கயிலாய ஞான உலா

உலா 96 வகைப் பிரபந்தங்களுள்ஒன்று. தன்னேரிலாத தலைவன் ஒருவன் வீதியில் பவனிவர அவனை எழுவகைப்

பருவத்துப் பெண்களும் கண்டு அவரவர் பருவத்திற்கேற்பக் கூறுவதாக அமைவதே இதன் இலக்கணம். இது கலிவெண் பாவில் பாடப்பெற்றது ஆதி உலா, தெய்வீக உலா, ஞான உலா என்பன இதன் வேறு பெயர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்களில்ஒருவரான சேரமான்,பெருமாள் நாயனார் என்பவர் இதன் ஆசிரியர் இவர் சேரர் மரபைச் சேர்ந்தவர் கொடுங்கோளூரில் பிறந்தவர். திருநீற்றிற்குப் பெருமதிப் பளிப்பவர்.ஒருமுறை உவர் மண்ணோடு வந்த வண்ணானை ''நீறு பூசிய சிவனடியார்'' என்று எண்ணி விழுந்து வணங்கினர். சுந்தரமூர்த்தி நாயனாருடன் ஒருசேரக்கயிலை சென்றவர். இவர் காலம கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

## 9. ஆழ்வார்கள் பன்னிருவர்

சைவத்திற்குத் திருமுறைகள் அமைந்தது போல வைணவத்திற்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் அமைந்தது. ஆழ்வார்கள் பன்னிருவர்.

**பொய்கையாழ்வார் :** இவர் காஞ்சி பொற்றாமரைக் குளத்தில் தோன்றியமையால பொய்கையார் என்று அழைக்கப் பெற்றார். இவர் பாசுரம் முதல் திருவந்தாதி எனப் பெயர் பெறும். இவரைத் திருமாலின் பாஞ்ச சன்னியம் என்ற சங்கின் அம்சம் என்பர். இவர் கதிரவனை விளக்காக வைத்துப் பாடிய பாடல் பெருஞ்சிறப்புடையது.

**2. பூதத்தாழ்வார் :** இவர் திருக்கடல் மல்லை என்ற ஊரில் (மகாபலிபுரம) பிறந்தவர் இவர் பாடல்களில் பூதம் என்ற சொல் மிகுதியாக வருமாறு பாடிய காரணத்தால் இப்பெயர் பெற்றார் போலும். இவர் பாடல்கள் 2.ஆம் திருவந்தாதி எனப்படும். பக்திச் செல்வமே தனிப்பெருஞ் செல்வம் என்பது இவர் கொள்கை.

**3. பேயாழ்வார் :** இவர் மைலாப்பூரில் வாழ்ந்தவர். இவர் கேணியில் உள்ள செவ்வல்லிப் பூவில் தோன்றியதா,

கவும் ஒரு வரலாறு உண்டு. பக்திப் பரவசம் காரணமாக நெஞ்சம் சோர்ந்து கண் சுழன்று அழுது, சிரித்து, ஆடிப்பாடிப் பேய்பிடித்தாற் போலஇறைவனைத் தொழுதுமகிழ்ந்த தால் இப்பெயர் பெற்றார். இவர் பாடல்கள் 3-ஆம் திருவந்தாதி எனப்படும். இம்மூவரும் ஒரே காலத்தினராதலின் இவர் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக்கு முற்பகுதி என்பர்.

**4. திருப்பாணாழ்வார்** : அவர் உறையூரைச் சேர்ந்தவர். குலத்தால் தாழ்ந்து கொள்கையால் உயர்ந்தவர். காவிரிக்கரை நின்று திருவரங்கநாதனை நோக்கித் தேனொழுகப் பாடியவர். இவர் திருமாலின் மேல் கொண்டிருந்த அன்பிற்கு ஈடு இணை இல்லை. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காண்போம்.

''கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயான்என் உள்ளம கவர்ந்தானை
அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.''

**5. திருமழிசையாழ்வார்** : இவர் பூவிருந்த வல்லிக்கு அருகிலுள்ள திருமழிசை என்ற ஊரில் பிறந்தவர் சைவத்திற்குத் திருமூலர் போல வைணவத்திற்குத் திருமழிசையாழ்வார் சிறந்தவர் என்று போற்றப்படுவார். இவர் ஆழ்ந்த வைணவப பற்று உடையவர். இவர் காலம் 7-ஆம் நூற்றாண்டு.

**6 நம்மாழ்வார்** : இவர் சடகோபர் என்று கூறப்படுவார் இவர் ஆழ்வார்களுள் தலைசிறந்தவர் இவர் நெல்லை மாவட்டத்தில ஆழ்வார திருநகரில் பிறந்தவர். இவர் பாடியதே திருவாய்மொழி. இவர் ஒரு நாட்டிற்கோ, ஒரு சமயத்திற்கோ, ஓர் இனத்திற்கோ மட்டும் உரியவரல்லர். இவர் எல்லா நாட்டிற்கும, எல்லா சமயத்தார்க்கும, எல்லா இனத்தார்க்கும உரியவர். அனைவரும ஏற்க ஓர்

ஆழ்வாரை அளித்த தமிழ் நாட்டை மனத்தால் நினைக்கின் றேன்; வாயால் தொழுகிறேன் என்றார் தமிழ் முனிவர் திரு. வி. கலியாண சுந்தரனார்.

**7. மதுரகவியாழ்வார் :** இவர் பாண்டிய நாட்டில் திருக்கோளூரில் பிறந்தவர். இவர் செவிக்கினிய பாடல் களைப் பாடியதால் இப்பெயர் பெற்றார். இவர் நம்மாழ் வாரின் சீடர். இவர் நம்மாழ்வாரைப் பற்றிக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்று பாடிப் புகழ் பெற்றவர். இவர் நம்மாழ் வாரையே கண்கண்ட கடவுளாகப் போற்றியவர்.

**8. பெரியாழ்வார் :** விட்டு சித்தன், பட்டர் பிரான் என்றும் இவர் போற்றப்படுவார். இவர் திருவில்லிப்புத்தூ ரில் அந்தணர்குடியில் தோன்றினார், இவர் உற்ற பிள்ளையே ஆண்டாள். இவர் கண்ணனைக் குழந்தை வடிவில் கண்டு மகிழ்ந்தவர். தாயுள்ளம் கொண்டவர். இவர் இயற்றிய பாடல்கள் பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு என்பனவாம்.

**9. ஆண்டாள் :** இவர் பெரியாழ்வாருக்கு உற்ற பெண். இவரைச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும், பெரியாழ்வார் பெண்கொடி என்றும், விட்டுசித்தன் கோதை என்றும் கூறுவார்கள். இவர் பெரியாழ்வார் அமைத்த துளசிப்பாத்தியில் தோன்றியவர். இவர் பூமிதேவியின் அம் சம் என்பர். இவர் திருமாலையே மணப்பது என்ற சிந்தனை யோடு வாழ்ந்தவர் அவ்வாறே கனவு கண்டவர். இறை வனைக் காதலனாகவும், தம்மைக் காதலியாகவும் கொண்டு இவர் பாடியதே நாச்சியார் திருமொழி, திருப்பாவை போன்றவை.

**10. திருமங்கையாழ்வார் :** இவர் சோழநாட்டில் திருக்குறையலூரில் தோன்றியவர். இவரை நீலன் என்றும் அழைப்பர். இவர் அரசர்க்கு அரசர். இவர் பொருளுக்

க்காக வழிப்பறி செய்யுங்கால் திருமாலால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர். இவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

**11. தொண்டரடிப் பொடியாழ்வார் :** இவர் சோழ நாட்டில் பிறந்தவர். விப்பரநாராயணா என்ற இயற்பெயர் உடையவர். இவர் திருவரங்கம் பெரிய கோயிலில் பெருமாளுக்குத் துளசி மாலை கட்டும் பணிபுரிந்து பேறு பெற்றவர். 'பச்சைமா மலைபோல் மேனி' எனத் தொடங்கும் புகழ் மிக்க பகதிப் பாடலைப் பாடியவர் இவரே.

**12. குலசேகர ஆழ்வார்** : இவர் சேர நாட்டைச் சேர்ந்தவர். திருமாலின கவுத்துவ மணியின் அம்சமே இவர் என்பர். இவர் இராமபிரானிடம் பேரன்பு கொண்டவர். இவர் பாடியதே பெருமாள் திருமொழி. இவர் பாடிய அருட்பாடல்களில் ஒன்று ஈண்டு காண்போம்.

*''தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை*
*விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் விததுவக்கோட்*
*டமமானே*
*அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவளதன்*
*அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன்*
*றிருந்தேனே ''*

## *10. ஐமபெருங் காப்பியங்கள்*

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி குண்டலகேசி என்பன ஐம்பெருங் காப்பியங்களாம்.

**சிந்தாமணி** : ஐம்பெருங் காப்பியங்களில் தலையாயதாக வைத்து எண்ணப்படுவது இந்நூல். இதற்கு மணநூல் எனறு வேறு ஒரு பெயரும் உண்டு. காப்பியத் தலைவனாகிய சீவகன், காந்தருவதத்தை முதலாக மங்கையர் எண்மரை மணம் செய்து கொண்டு இல்லற வாழ்வை இனிதே நடத்தி, இறுதியில் வீடுபேறு கருதித் துறவறம் பூண்ட செயலை இந்நூல் இனிதே கூறுகின்றது. இந்நூல் விருத்தப்

பாவால் ஆனது. இது பதின்மூன்று இலம்பகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலை இயற்றியவர் திருத்தக்க தேவர். இவர் ஒரு சமணத் துறவி. இவரை வீரமாமுனிவர் தமிழ்க் கவிஞருள் அரசர் என்று போற்றுகின்றார். இந்நூலுக்கு நச்சினார்க்கினியர் சிறந்த உரை வகுத்துள்ளார். இந்நூல் இளமை, செல்வம், யாக்கை முதலியவற்றின் நிலையாமையைக் கூறுகின்றது. கொலை, களவு, சினம், ஈயாத்தன்மை பொய் புகறல், புலாலுண்ணல் போன்ற புன்மைச் செயல்களை அறவே தவிர்க்க வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றது. இந்நூல் இன்பச்சுவையை எடுத்து இயம்புவதில் ஈடு இணை அற்றது. எடுத்துக் காட்டாகக் காந்தருவதத்தையார் இலமபகத்தில் ஒரு காட்சி. அநங்கமாலை சீவகன் மேல் காதல் கொள்கின்றாள். அவள் காதல் மனப்பான்மையுடன் நடனமாடுகின்றாள்.

இதை, ''ஆடவர் மனங்கள் என்னும்
அரங்கின்மேல் அநங்கமாலை
ஆடினாள் முறுவல் என்னும்
தோழியை ஐயன் காண
ஓடரி நெடுங்கண் என்னும்
ஓலையை எழுதி விட்டாள்
வாடிய வாறும் நோயும்
உரைத்துவார் கொடியனாளே''

என்று ஆசிரியர் போற்றிக் கூறும் அழகே அழகு.

டாக்டர் ஜி. யு. போப் என்ற மேலைநாட்டு அறிஞர் இந்த நூலை உலகிலேயே மிகச் சிறந்த காவியங்களில் ஒன்று என்று போற்றுகின்றார்.

அமைச்சர் எதையும் ஆராயும் இயல்புடையவராக இருக்க வேண்டும்; ஆசிரியர் சொற்படி மக்கள் நடத்தல் வேண்டும்; பகைவரை வெல்வோர் காலம், இடம், சூழ்நிலை தமக்கு ஏற்ப அமையும் வரை அமைதியாக இருத்தல் வேண்டும்; எண்ணிய எண்ணம் ஈடேற அறிவும், அன்பும் இன்றி

யமையாதன; பெற்றோர் சொல்படி பிள்ளைகள் நடத்தல் வேண்டும்; எல்லா உயிர்களிடத்தும் அருளும் அன்பும் உடையவராக இருத்தல் வேண்டும்; நன்றி மறத்தல் கூடாது என்பன போன்றன இந்நூல் உணர்த்தும் சில அறிவுரைகளாம். இந்நூலின் காலம் கி.பி, 10-ஆம் நூற்றாண்டு எனலாம்.

**சிலப்பதிகாரம் :** இந்நூல் விளக்கத்தினை இரட்டைக் காப்பியங்கள், என்ற தலைப்பின் கீழ்கண்டோம்

(பக்கம், 22.)

**மணிமேகலை :** இந்நூல் விளக்கத்தினை இரட்டைக் காப்பியங்கள் என்ற தலைப்பின கீழ்க்கண்டோம்.

(பக்கம். 24.)

**வளையாபதி :** வளையாபதி என்றஐம்பெருங்காப்பியங்களில் ஒனறாகிய இநநூலாசிரியரைப் பறறி ஒனறும் தெரியவில்லை இந்நூலைச் சமண நூல் என்பர் இந்நூலின பாடல்களாகப் புறத்திரட்டிலும், யாப்பருங்கல விருத்தியிலும், சிலம்பு, தொல்காப்பிய நூல்களின் உரைகளிலும் ஆகப் பல பாடல்கள் கிடைத்துள்ளன எனவே, இந்நூல் முழுமையும் நமக்குக் கிடைக்கவில்லை. பிற குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை நவகோடி நாராயணன் என்னும் வைசிகன் மணந்தான். அதற்காக அக்குலத்தைச் சேர்ந்தவர்கள் அவனை வெறுக்கவே அவன் அயல்நாடு சென்றுவிட்டான். அப்பெண்ணிற்குப் பிறந்த பையன் பல்லாண்டுகளுக்குப் பின்னர் புகார் நகரம் சென்றான். அங்கு தன் தந்தையை அறிந்து அவனைத் தன்தாயிடம் சேர்ப்பித்தான் என்று வளையாபதி கதையை வைசியபுராணம் கூறுகின்றது இந்நூலில் காணப்படும் வருணனை மிகச் சிறப்புடையது. நெற் பயிர் கரும்பு போல் வளரக் கரும்பு அதைக் கண்டு பாக்குப் போல் வளர முற்படுகின்றதாம். கரும்பு தன்னோடு போட்டியிடுவதைக் கண்ட பாக்குமரம் நாணமுற்று மேகத்தால் தன்முகத்தை மறைத்துக் கொள்கின்றதாம். பிள்

ளைப் பேற்றின் மாண்பும் இந்நூலில் மிகச் சிறப்பாகக் கூறப்படுகிறது.

**குண்டலகேசி :** ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய இந்நூல் பற்றிய விவரமும் கிடைக்கவில்லை. வணிக குலத்தில் தோன்றிய குண்டலகேசி என்பவள் காளன் என்னும் கள்வனைக் கண்டு காமுற்று அவனையே மணந்தாள். ஒரு நாள் ஊடலின் நிமித்தம் அவனைக் கள்வன் என்று சுட்டிக் காட்டினாள். அதனால் சினம் கொண்ட அவன் அவளை வஞ்சகமாக மலையுச்சிக்கு அழைத்துச் சென்று கொல்ல முயன்றான். அதையறிந்த அவள் மும்முறை அவனை வலம் வருபவள் போல வந்து இறுதியில் அவனைக் கொன்று விட்டாள். பின்னர் தன் செயலுக்கு மிக வருந்தித் துறவு மேற் கொண்டாள். பிற சமய வாதங்களை வென்று புத்த தரிசனம் பெற்று முக்தி அடைந்தாள். இது ஒரு பௌத்த காப்பியம். விருத்தப்பாவால் ஆனது. இது முழுமையாக இன்று கிடைக்கவில்லை.

## பெருங்கதை

இது கொங்குவேள் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இந்நூலுக்குக் 'கொங்குவேள் மாக்கதை' என்னும் பெயரும் உண்டு. கொங்குவேள் விசயமங்கலத்தவர், வேளாண் மரபில் உதித்தவர்.

பிருகத்கதா, ஸ்வப்ன வாசவதத்தா, இரத்தினாவளி, பிரதிக்ஞா யௌகந்தராயணம் போன்ற வடமொழி நாடகங்களைத் தழுவியே உதயணன் கதையைத் தமிழில் கூறும் பெருங்கதையைப் பாடியுள்ளார்.

''அன்புடைக் கணவர் அழிதகச் செயினும் பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை'' என்ற அடிகள் பெண்களின் மனப்பாங்கைக் காட்டுகின்றன. இது சமணக் கொள்கைகள் சிறந்த காவியம். இந்நூலில் உஞ்சைக் காண்டம்,

இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் என ஆறு பெரும் பிரிவுகள் உள இந்நூல் வடமொழி இலக்கணத்தையே தழுவி எழுதப்பட்டிருத்தலின் தமிழ் நூலார், தமிழ் ஆராய்ச்சியாளர்கள் இந்நூலை ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றாகச் சேர்க்கவில்லை வத்தவ நாட்டில் கௌசாம்பி நகரத்தரசனின மகன் உதயணன். இவன யாழ் மீட்டலில் வல்லவன் யாழிசையில் தெய்வத் தன்மையுடைய யானை இவனுக்கு அடிபணிந்தது. இவன் உச்சயினி மன்னனால் சிறைவைக்கப்பட்டபோது நண்பன் யூகி இவனுக்கு உதவி செய்தான். சிறை செய்த மன்னனின் மகள் வாசவதத்தையை மணந்தான் தன் கலை வன்மையால் வாசவதத்தை, பதுமாவதி, மானனீகை, விரிசிகை என்னும் நான்கு பெண்களை மணந்தான். இறுதியில் துறவறம் பூண்டு தவம் செய்தான் சமணக் கோட்பாடுகளுடன் ஊழ்வலி, நட்பு, அமைச்சர் தன்மை ஆகிய பல செய்திகள் கூறப்பட்டுள்ளன இந்நூலில்.

## 11. ஐஞ்சிறு காப்பியங்கள

அறம், பொருள், இன்பம் வீடு என்று நான்கு உறுதிப் பொருள்களில் ஒன்றோ, பலவோ குறைந்து வருவது சிறு காப்பியம். அத்தகைய சிறு காப்பியம் ஐந்து. அவை சூளாமணி, நீலகேசி. உதயண குமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம் என்ற ஐந்துமாகும். அவற்றைப்பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**1. சூளாமணி** : இது விருத்தப்பாவால் அமைந்தது. இது ஒரு சமணக் காப்பியம்.இதன் ஆசிரியர் தோலாமொழித் தேவர். இந்நூல் 12 காண்டம், 2131 பாடல்களைக் கொண்டது.மண்ணுலகைச் சேர்ந்த திவிட்டன் என்ற வீரன் விண்ணுலக மங்கையான சுயம்பிரபையை மணம் செய்து கொணடான். இந்நூல் கவிதைப்போக்கில் சிந்தாமணியின் இயல்பைப் பெற்றிருக்கிறது. இதன் சந்த நடைக்கு எடுத்துக் காட்டு ஒன்று காண்போம்.

''வளர்கொடியன மணம்விரிவன
மல்லிகையோடு மௌவல்
நளிர்கொடியன நறுவிரையன நறுமலரன நறவும்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கொகுடி
ஒளிர்கொடியன உயர்திரளினொ டொழு
கிணரன ஓடை''.

இந்நூலின் காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு என்பர்.

**2 நீலகேசி :** இதனை 'நீலகேசித் தெருட்டு' என்றுங் கூறுவர். இந்நூல் 10 சருக்கங்களையும், 894 செய்யுட்களையும் கொண்டது. இது சமணமே தலைசிறந்த சமயம் என்று கூறுகின்றது. வாமமுனிவர் இந்நூலுக்குச் சிறந்த உரை எழுதியுள்ளார்.

**3. உதயண குமார காவியம் :** இந்நூல் உதயணன் கதை என்றும் வழங்கப்படுகிறது. இது விருத்தப்பாவால் அமைந்தது. இந்நூலில் 367 செய்யுட்கள் காணப்படுகின்றன.

**4. யசோதர காவியம் :** இந்நூல் உயிர்க்கொலை தீயது என்ற நீதியை உணர்த்தவே எழுந்தது. இது 320 செய்யுட்களைக் கொண்டது. எளிய நடை பெற்றது. விருத்தப்பாவால் அமைந்தது. இந்நூலில் காணப்படும் சோழன் மாரிதத்தன் வரலாறு வேறு எந்தத் தமிழ் நூலிலும் காணப்பெறவில்லை.

**5 நாக குமார காவியம் :** ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று என்று கருதப்படும் இந்நூல் சமண சமயத் துறவி ஒருவரால் இயற்றப் பெற்றிருக்க வேண்டும் என்று செய்தி தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை.

## 12. கம்பராமாயணம்

கல்வியில் பெரியவராகிய கம்பர் தம் ஆசைபற்றி எழுதிய அருங்காவியமே கம்பராமாயணம் இந்நூலின் முதற் பெயர்

இராமாவதாரம். 'கவிச்சக்கரவர்த்தி': கல்வியில் பெரியவர் கம்பர். 'கம்பநாடன் கவிதையைப்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே'; 'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' எனவரும் தொடர்கள் இந்நூலாசிரியரின் பெருமையை நன்கு எடுத்துக்காட்டும். இந்நூல் தன் போக்கில் தமிழ் மரபையே, தமிழ்நாட்டுப் பற்றையே பெரிதும் போற்றியுள்ளது. இந்நூல் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் யுத்த காண்டம் என்ற ஆறு காண்டங்களைக் கொண்டது. இந்நூலில் எங்கு பார்ப்பினும் இயற்கைப் பேரழகு, கற்பனை வளம். ஆசிரியர் தம் நூலில் காணும் கற்பனை உலகில் வறுமை இல்லை. பகைவர் இல்லை; பொய்யில்லை; அறிவுக குறைவு இல்லை. பாடல்களிலோ ஓசை நயம் மிகுதி. எடுத்துக்காட்டாக இராமன் உள்ளம் கவர வரும் சூர்ப்பனகையை வருணிக்க வரும் ஆசிரியர் அவள், 'பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க மஞ்ஞை என அன்னம், என' வந்தாள், எனக் கூறும அழகே அழகு. இந்நூலின்காலம் கி பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

## 13. கந்தபுராணம்

முருகப் பெருமான் பிறப்பு. அவன் கார்த்திகை மாதரால் வளர்க்கப்படுதல், அவன் நிகழ்த்திய திருவிளையாடல் தேவர்களைச் சிறை மீட்டல், வள்ளி, தெய்வயானை இருவரையும் மணத்தல் போன்ற செய்திகளைக் கூறும் நூலே கந்தபுராணம். இந்நூல் 6 காண்டங்களைக் கொண்டது. காவியச் சுவை பெற்றது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் விரவப் பெற்றது.

இதன் ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியார். இவர் காஞ்சியில் ஆதிசைவ மரபில் தோன்றியவர். இந்நூலின் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்பர்.

## 14. கலிங்கத்துப்பரணி

பரணி என்பது 96வகைப் பிரபந்தங்களில் ஒன்று. சோழ நாட்டு அரசனாகிய முதல் குலோத்துங்கனுக்கும், கலிங்க நாட்டு அரசனாகிய அனந்தவன்மனுக்கும் நிகழ்ந்த போரை கூறுவதே கலிங்கத்துப்பரணி போர்க் களத்தில் 1000 யானைகளைக் கொனறு வெற்றியோடு திரும்பும் அரசனின் புகழைப் பாடுவதே பரணி என்று இலக்கண நூல் கூறும். காளிக்குரிய பரணி நாளில் பிறந்தவரைப்பற்றிப் பாடுவது பரணி என்றும் கூறுவதுண்டு கலிங்கப்போரில் ஈடுபட்டு முதற் குலோத்துங்கனுக்கு வாகை மாலை சூட்டியவன் கருணாகரத் தொண்டைமான். இவன் முதற் குலோத் துங்கன் படைத் தலைவன்; மந்திரத் தலைவன். இவன் 'வண்டையர்கோன்'; 'இலங்கை எறிந்த கருணாகரன்'; 'சோழன் சக்கரம்' என்று போற்றப்படுவான். அனந்தவன் மன் படைத் தலைவன் எங்கராயன்.

இந்நூல் செயங்கொண்டார் என்ற புலவரால் பாடப் பட்டது. இவர் பாணி பாடுவதில் மிகச்சிறந்தவர் இந்நூல் கடவுள் வாழ்த்து முதலாகக களமபாடியது ஈறாக 13 பிரிவு களைக் கொண்டது. இந்நூல் எளிய இனிய தமிழ் நடையும், பொருள் சிறப்பும் கற்பனை நயமும், காவியச் சுவையும், ஓசைச் சிறப்பும் பெற்றது. இந்நூலின் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

## 15. மூவருலா

விக்கிரமசோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராசராசசோழனுலா என்ற மூன்றும் மூவருலா எனப்படும். இந்நூலை இயற்றியவர் ஒட்டக்கூத்தர். இவர் உலா பாடு வதில வல்லவர். இவவுணமை 'கோவை உலா அநதாதிக்கு ஒட்டக்கூத்தர்' என்ற தொடரால் புலனாகும்.

*உலா என்பது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பாட்டுடைத் தலைவன் ஒருவன் பவனிவர அவனை ஏழு பருவ மகளிர் கண்டு தத்தம் மனக் கருத்துக்களைக் கூறும் வகையில் கற்பனை பொருந்தப் பாடப்படுவதே உலா. இவ் வகையில் மூவருலாவில் சோழர் குலப்பெருமை, பாட்டுடைத் தலைவர் பவனிவரும் சிறப்பு, உடன் வருவோர் இயல்பு, குழாங்களின் கூற்று, ஏழு பருவப் பெண்டிரின் உளப்பாங்கு போன்றன நன்கு படம்பிடித்துக் காட்டப்படுகின்றன. இந் நூலின் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு என்பர்.

## 16. முக்கூடற்பள்ளு

பள்ளர்களின் வாழ்க்கையினைப் புல்லிய மொழி கொண்டு அமைப்பது பள்ளு. இத்தகைய பள்ளு இலக்கியத்தில் மிகச் சிறந்தது முக்கூடற்பள்ளு பாமரர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிய சொற்களால் அமைவதே பள்ளு.

முக்கூடல் என்பது நெல்லை மாவட்டத்திலுள்ள ஓர் ஊர். இது தாமிரவருணி, சிற்றாறு, கயத்தாறு என்ற மூன்றும் கூடுமிடம். இங்கு எழுந்தருளிய அழகர் மீது பாடப் பெற்றதே இந்நூல் இம்முக்கூடலில் ஒரு பண்ணையாரிடத் தில் பயிர்த்தொழில் புரிபவன் ஒரு பள்ளன். அவன் பெயர் வடிவழகக்குடும்பன். அவனுக்கு இரு மனைவியர். அவருள் மூத்த மனைவி முக்கூடற்பள்ளி. பெருமாளை நாளும் தொழு பவள். இளையவள் மருதூர்ப்பள்ளி. சிவபெருமானை நாளும் வணங்குபவள். இவ்விருவர்பால் நாளும் நிகழும் உரையாடல் நகைச்சுவை பொருந்தியன. இருவர் கூற்றி லும் ஏச்சும் பேச்சும் நிகழும். ஒவ்வொருவர் ஊரைப் பற்றிய, மதம் பற்றிய அருமை பெருமை தெரியும் இத்தகைய அரிய நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சுருங்கக கூறின் இந்நூல் சிந்தைக்கினிய, செவிக்கினிய பெருவிருந்து.

## 17. சோழர் கால இலக்கண நூல்கள்

சோழர் காலத்தில் எழுந்த இலக்கண நூல்கள் பல. அவற்றின் சிறப்பை இலக்கிய வரலாற்றுக் கண் கொண்டு இங்கு விரிவாகக் காண்போம்.

**நன்னூல் :** பழங்காலத்திற்குத் தொல்காப்பியம் எவ்வாறு சிறந்ததோ அதைப்போல இக்காலத்திற்கு இடைக் காலத்தில் எழுந்த நன்னூல் சிறப்புப் பெற்றது. இதனை இயற்றியவர் பவணந்தி இவர் சமணர். 'நல்ல நூல்' என்ற சிறப்புக் கருதி இந்நூல் இப்பெயர் பெற்றது.

''முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினுள்
நன்னூ லாருக்கு எந்நூ லாரும்
இணையோ என்னும் துணிவே மன்னுக''

என்று இந்நூல் புகழ்ந்து பாடப்படுகிறது. இதன் காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

**நம்பியகப் பொருள் :** இது நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப்பட்டது. இவர் சமணர் புளியங்குடி என்ற ஊரினர்; இவர் இயற்பெயர் நம்பி நாயனார். தஞ்சை வாணன் கோவை நானூறு பாடல்களும் இவர் நூலில் வரும் துறைகளுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகின்றது. இந்நூலின் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதி.

**யாப்பருங்கல விருத்தி :** இந்நூலை இயற்றியவர் அமித சாகரர், இவரும் சமணர். இவர் தீபங்குடி என்ற ஊரில் பிறந்தவர். இந்நூலிற்கு உரை இயற்றியவர் குணசாகரர். இந்நூலின் காலம் 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டு என்பர்.

**யாப்பருங்கலக் காரிகை :** இந்நூலை இயற்றியவர் அமிதசாகரர், இவர் நூற்பாக்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலை பெற்றது. இதற்கும் குணசாகரர் உரை எழுதினார். இது காக்கை பாடினியத்தைப் பின்பற்றியது.

**நேமிநாதம் :** இதனை இயற்றியவர் குணவீர பண்டிதர். இவரும் சமணர். இவர் களத்தூரில் பிறந்தவர். இந்நூல் எழுத்து, சொல் ஆகிய இரு பகுதிகளை விளக்குகிறது. இந்நூல் இலக்கணப் பகுதியை மிகச் சுருக்கி விளக்குவதால் இதற்குச் சின்னூல் என்ற ஒரு பெயருண்டு.

**வச்சணந்தி மாலை :** இது ஓர் இலக்கண நூல் இதற்கு வெண்பாப் பாட்டியல் என்றும் ஒரு பெயருண்டு. இந்நூலை இயற்றியவர் குணவீர பண்டிதர்.

**வீரசோழியம் :** இந்நூலை இயற்றியவர் புத்தமித்திரர். இவர் பௌதத சமயத்தைச் சார்ந்தவர். இவர் பொன்பற்றி என்ற ஊரைச் சேர்ந்தவர். இந்நூல் எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணத்தையும் சுருக்கமாக உணர்த்துகிறது. தம்மை ஆதரித்த வீரசோழ மன்னரின் பெயரையே இந்நூலாசிரியா இந்நூலுக்கு அமைத்துள்ளார். இந்நூலின் காலம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டு எனலாம்.

**தண்டியலங்காரம் :** இது தண்டி என்பவரால் இயற்றப்பட்டது. காவியாதரிசம் எனற வடநூல் மொழிபெயர்ப்பே இது. தண்டி காஞ்சீபுரத்தில வாழ்ந்தவர் நூலில காணப்படும் பாடல்களில் சில அநபாய சோழனைச் சிறப்பித்துக் கூறுவதால் இந்நூலின் காலம கி.பி. 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம். இநநூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று பெரும பகுதிகளைக் கொண்டது.

## 18. நிகண்டுகள்

சொற்களின் பொருள்களை விளக்கும் நூல்களே நிகண்டு. இது வடமொழியில் 'நிருத்தம' என்று கூறப்படும். இது செய்யுள வடிவிலும், நூற்பா வடிவிலும் அமைந்து **மனப்பாடம் செய்யும் முறையில் உள்ளது.**

**திவாகர நிகண்டு :** நிகண்டுகள் பலவற்றுள் ஒன்றே திவாகரம், இது காலத்தால் முற்பட்டது. இதன் ஆசிரியர் திவாகர முனிவர். திவாகரன் சேந்தன் என்ற அரசன் வேண்டுகோளுக்கிணங்க இந்நூல் இயற்றப்பட்டது இந்நூலுக்கு வழங்கும் மற்றொரு பெயர் சேந்தன் திவாகரம்.

**பிங்கல நிகண்டு :** இந்நூலை இயற்றியவர் திவாகர முனிவரின் குமாரர். இந்நூலின் காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு என்பர்.

**சூடாமணி நிகண்டு :** இந்நூலாசிரியர் மண்டல புருடர். இவருக்கு வீரமண்டல புருடர் என்றும் பெயருண்டு.

**உரிச்சொல் நிகண்டு :** இதை இயற்றியவர் காங்கேயர்.

**கயாதர நிகண்டு :** இந்நூல் கயாதர முனிவரால் இயற்றப்பட்டது. இது கட்டளைக் கலித்துறையால் அமைந்தது.

**அகராதி நிகண்டு :** இந்நூலை இயற்றியவர் இரேவண சித்தர்.

**ஆசிரிய நிகண்டு :** இது காலத்தால் பிற்பட்டது. இந்நூலை இயற்றியவர் ஆண்டிப் புலவர். இவர் பாவாடை வாத்தியார் குமாரர்.

## 19. உரையாசிரியர்கள்

தமிழ் இலக்கியம், இலக்கணம் என்னும் கலைக்கோயிலுக்கு அழகிய உரை என்ற நிலைக்கதவு அமைத்தவர்கள் உரையாசிரியர்கள். அவர்கள் இலக்கண உரையாசிரியர், இலக்கிய உரையாசிரியர் என இருவகைப்படுவர். அவர் சிறப்பினை இங்கு விரிவாகக் காண்போம்.

**இளம்பூரணர் :** தமிழ் இலக்கண நூல்களுக்கு உரை வகுத்தவர்களுள் இளம்பூரணரும் ஒருவர். இவரே காலத்

தால் முற்பட்டவர். ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திற்கு முதன் முதலில் உரைகண்ட சிறப்பினால் இவர் உரையாசிரியர் என்றே அழைககப்படுவார். இவர் காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர் கா. சுப்பிரமணியப் பிள்ளை. இவர் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுதிகளுக்கு உரை வகுத்துள்ளார். இவர் உரையே எளிமையானது; சுருக்கமானது; பிறரோடு மாறுபடாதது.

**பேராசிரியர் :** இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியிருக்க வெண்டும் என்று தெரிகிறது. ஆனால் மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்ற நான்கு இயல்களுக்கு மட்டுமே இவர் உரை இன்று கிடைத்துள்ளது; கோவை நூல்களில் 'இராசாக் கோவை' என்று சிறப்பித்துப் போற்றப்படும் மாணிக்கவாசகர் இயற்றிய திருக்கோவையாருக்கு இவர் சிறந்த உரை எழுதியுள்ளார். இவர் உரை அழகு, தெளிவு வாய்ந்தது. இவர் வறுமை என்பதற்குப் 'போகம துய்க்கப்பெறாத பற்றுள்ளம்' என்று உரை வகுததுள்ளார். அதன் அழகே அழகு.

**சேனாவரையர் :** இவர் தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்குச் சிறநத உரை எழுதியுள்ளார். இவர் உரை சேனாவரையம் என்று குறிப்பிடப்படும் சிறப்பே இவர் சிறப்பைக் காட்டும். இவர் வடநூல் கடலை நிலைகண்டு உணர்ந்தவர். இவர் 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்.

**நச்சினார்க்கினியர் :** உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்; நசசினார்க்கினியன் எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' என்று போற்றப்படும் நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். இவர் பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி போன்ற நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். ஒரு பாடற்பொருளைக் கொணடு கூட்டிப் பொருள் செய்வது இவருக்கு அமைந்த தனிச் சிறப்பு.

**கல்லாடர் ; தெய்வச் சிலையார் ;** இவ்விருவரும் தொல் காப்பியத்திற்கு உரை எழுதிய பிற அறிஞர்கள் ஆவர்.

**அடியார்க்கு நல்லார் :** இவர் சிலப்பதிகாரம் முதல் இரண்டு காண்டங்களுக்கு உரை எழுதிய ஆசிரியர் ஆவார். இவர் தம் உரையின் இடையில ஆங்காங்கே சில இன்றியமை யாத இலக்கணக் குறிப்புக்களைக் காட்டுவார். இவர் தம் உரையில் சோதிடக் குறிப்பு இசைக்கலைச் சிறப்பு இவற்றை எடுத்துக் காட்டுவார். இவர் பொப்பண்ண காங்கேயன் என்ற கன்னட அரசரால் ஆதரிக்கப் பெற்றவர். இவர் தம் உரையில் சிற்சில இடங்களில் மெய்ப்பாடுகளைக் குறிப்பிடு வார். சிலப்பதிகாரத்திற்கு இவர் உரை கிடைக்காமல் போயிருக்குமானால் சிலம்பின் பெருமையை இன்று நாம் நன்கு உணர முடியாது.

**பரிமேலழகர் :** திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மருள் மிகச் சிறப்பு வாய்ந்தவர் பரிமேலழகரே. இவர் வடமொழி தமிழ் மொழி இரண்டிலும் வல்லவர். இவர் உரை தருக்க முறையில் அமைந்தது. இவர் இலக்கியப் பயிற்சி மிக்கவர் என்பதைத் தம உரையில் ஆங்காங்கே எடுத்துக் காட்டும் இலக்கிய மேறகோள்களைக் கொண்டு நன்கு உணரலாம். இவர் பரிபாடலுக்கும சிறந்த உரை எழுதியுள்ளார்.

**பெருந்தேவனார் :** இவர் தொல்காப்பியப் பாயிரச் சூத்திர விருத்தி என்ற உரைநூல் எழுதியுள்ளார் இவர் சைவ சித்தாந்த நூலாகிய சிவஞான போதத்திற்குச் சிறந்த உரை எழுதியுள்ளார்.

**பெரியவாச்சான் பிள்ளை :** இவர் நாலாயிரப் பிரபந்த உரை 24,000 படி இயற்றியவர். இவர் தென்கலையாரால பெரிதும் கொண்டாடப்படுவார்

**நம்பிள்ளை :** இவர் பெரிய திருமொழி, திருவிருத்தம், திருப்பள்ளி எழுச்சி போன்ற நூல்களுககு உரை எழுதியுள் ளார்.

**வடக்குத் திருவீதிப்பிள்ளை :** இவர் திருவாய்மொழிக்கு 'முப்பத்தாறாயிரப்படி' என்ற உரை எழுதியுள்ளார்.

## 20. சைவ சித்தாந்த சாத்திரங்கள்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் 14. அவற்றின் சிறப்பை ஈண்டு காண்போம்.

**1. திருவுந்தியார் :** இந்நூலாசிரியர் திருவியலூர் உய்ய வந்த தேவர். இந்நூல் கடவுள், உயிர், உலகம் என்ற மூன்று பொருள்களின் இலக்கணத்தை நன்கு விளக்கும். இந்நூல் 45 பாக்களைக் கொண்டது.

**2. திருக்களிற்றுப்படியார் :** இதனை இயற்றியவர் திருக்கடவூர் உய்யவந்த நாயனார் 63 நாயன்மார்கள் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில செய்திகளை விளக்குவதே இந்நூல். சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்க இந்நூலில் திருக்குறள் பாக்கள் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன. இந்நூலின் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு.

**3. சிவஞான போதம் :** இந்நூல் சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கில் தலைசிறந்தது. இந்நூலை இயற்றியவர் மெய்கண்ட தேவர். இவர் திருவெண்ணெய் நல்லூரில் தோன்றியவர். இந்நூலில் 12 நூற்பாக்களும், 36 அதிகரணங்களும், 81 எடுத்துக்காட்டு வெண்பாக்களும் உள்ளன. இந்நூல் பசு, பதி, பாசம் என்ற சைவ சித்தாந்த உண்மையை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

**4. சிவஞான சித்தியார் :** இந்நூலை இயற்றியவர் அருள் நந்தியார் இவர் மெய்கண்ட தேவரின் முதல் மாணவர். இந்நூல் பரபக்கம், சுபக்கம் என்ற இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது. 'சிவத்தின் மேல் தெய்வமில்லை' 'சிவஞான சித்திக்கு மேல் சாத்திரமில்லை' என்று சிவபோக சாரமும், ' பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்'' என்று சிவபோக சாரப் பாடற் பகுதியும் இதன் பெருமை கூறும்,

**5. இருபா இருபஃது :** இந்நூலைச் செய்தவர் அருள் நந்தியார். இந்நூல் அந்தாதித் தொகையில் அமைந்த நேரிசை வெண்பாவும், நேரிசை ஆசிரியப்பாவும் கொண்டது.

**6. உண்மை விளக்கம் :** இந்நூல் 'நமச்சிவாய' என்ற தத்துவப் பொருளை விளக்கும். இந்நூலாசிரியர் மெய் கண்ட தேவரின் மாணவர் திருவதிகை மணிவாசகங் கடந் தார் ஆவர்.

**7. சிவப்பிரகாசம் :** இந்நூலை இயற்றியவர் கொற்ற வன்குடி உமாபதி சிவாசாரியார். இவர் மறைஞான தேசிக ரின் மாணவர்.

**8. திருவருட்பயன் :** இந்நூலைஇயற்றியவர் உமாபதி சிவாசாரியார். இந்நூல் சித்தாந்த உண்மைகளை விளக் கும். இந்நூல் குறள் வெண்பாக்களால் ஆனது.

**9. வினாவெண்பா :** உமாபதி சிவாசாரியார் தம் ஞானாசிரியராகிய மறைஞான சம்பந்தரை வினவுவது போலச் சித்தாந்தக் கருத்துக்களை அமைத்து இந்நூலை எழுதியுள்ளார்.

**10. போற்றிப்பஃறொடை வெண்பா :** உமாபதி சிவம் தம் ஞானகுருவின் அருட் செயலகளை நினைந்து போற்று வதே இந்நூல்.

**11 கொடிக்கவி :** உமாபதி சிவம் தில்லைக் கோயி லில் கொடியேற்றும முறையில் அமைந்த சைவ சித்தாந்த உண்மைகளைக் கூறும் நூலே இது.

**12. நெஞ்சுவிடு தூது :** உமாபதி சிவம் இயற்றிய இந் நூல் 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று. ஆசிரியர்பால் நெஞ்சைத் தூது விடும முறையில் அமைந்ததே இந்நூல்.

**13. உண்மை நெறி விளக்கம் :** உமாபதி சிவம் இயற்றிய இந்நூல் தசகாரியம் என்று போற்றப்படும் சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் பத்தையும் 6 விருத்தப் பாக்களில் அழகுறக் கூறுவதாகும்.

14. **சங்கற்ப நிராகரணம் :** உமாபதி சிவம் இயற்றிய இந்நூல் புறச் சமயத்திற்கும், சைவ சமயத்திற்கும் உள்ள வேறுபாட்டினை நன்கு புலப்படுத்தும்.

குறிப்பு : உமாபதி சிவாசாரியார் இயற்றிய சிவப் பிரகாசம் முதலாகச் சங்கற்ப நிராகரணம் ஈறாக உள்ள 8 நூல்களும் 'சித்தாந்த அட்டகம்' என்று கூறப்படும்.

# நாயக்கர் காலம்

## 21. 15-ம் நூற்றாண்டுப் புலவர்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம் ஒரு நற்காலம் எனக் கூறலாம். காரணம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் பல தமிழ்ப் புலவர்கள் தோன்றி அருந்தமிழ் வளர்த்தனர். அவர் சிறப்பை இங்கு விரிவாகக் காண்போம்.

**வில்லிபுத்தூர் ஆழ்வார் :** பாரதக் கதையைத் தமிழில் எழுதிய புலவரே வில்லிபுத்தூர் ஆழ்வார். இவர் திருமுனைப் பாடி நாட்டில். சனியூரில பிறந்தவர். இவர் தந்தை வீரராகவர். இவர் சமயம் வைணவம். இவர் வக்கபாகை வரபதியாட கொண்டான் என்ற குறுநில மனனரால் ஆதரிக்கப் பெற்றவர். அவர் வேணடுகோளுக்கிணங்கவே இந்நூலையும் இயற்றினார். இவர் வாதில் புலமையற்றவரை வென்று அவர் காதை எட்டின மட்டும் அறுப்பார் என்று ஒரு வரலாறு கூறுகிறது. இவர் நூல் ஆதிபருவம், சபாபருவம், ஆரணிய பருவம், விராட பருவம், உத்தியோக பருவம், வீட்டும பருவம், துரோண பருவம், கன்ன பருவம், சல்லிய பருவம, சௌப்திக பருவம் என்ற பத்துப் பருவங்களைக்

கொண்டது. இவர் நூல் 4339 விருத்தப் பாடல்களைக் கொண்டது.

பாரதக் கதையைத் தமிழில் கூறும் நூல்கள் 4. அவை வில்லி பாரதம், நல்லாப்பிள்ளை பாரதம், பெருந்தேவனார் பாரதம், பெருந்தேவனார் பாரத வெண்பா. அவற்றுள் வில்லி பாரதமே சாலச் சிறந்தது, அனைவராலும் விரும்பிப் படிக்கப்படுவது.

**இரட்டைப் புலவர்கள்** இரட்டைப் புலவர்கள் என்பார் காளமேகப் புலவர் காலத்தில் வாழ்ந்த சிறந்த இருபெருங் கவிஞராவர் இவர்களில் ஒருவர் குருடர். மற்றொருவர் முடவர் இவர்கள் இளஞ்சூரியர், முதுசூரியர் என்று அழைக் கப்படுவர் இவர்கள் பாடலில் ஒரு சிறப்பு ஒரு வெண்பாவில் முதல் இரண்டு அடிகளை ஒருவர் பாட, மற்றொருவர் சொல், பொருள், கருத்து மாறுபாடு இல்லாமல் பாடி முடிப்பார், குருடர் முடவரைத் தூக்கிச்செல்ல இருவரும் சிவபெருமான் எழுந்தருளிய தலங்கள் தோறும் சென்று ஆங்காங்கே எழுந் தருளிய இறைவனைப் புகழ்ந்து பாடுவார்கள். ஒரு முறை இவர்கள் திருவாரூர் சென்றிருந்த பொழுது ஒருவர், ''நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம் பாணந் தான்'' என்று பாடினார். அவரால் மேற்கொண்டு இரண்டு சீர்களைப்பாட முடியவில்லை அதை அவர் முடித்தால் தானே மற்றொருவா பின்னிரண்டு வரிகளை முடிப்பார்? அருகிருந்த காளமேகப் புலவர், ''மண்தின்ற பாணமே'' என்று பாடி உதவினார், உடனே மற்றொருவர்.

''தாணுவே, சீராரூர் மேவும் சிவனே சிரிப்பன்றோ
நேராரூர் செற்ற நிலை'' என்று பாடி முடித்தார்.

இவ்வாறு இவர்கள் பாடிய தனிப்பாடல்கள் நமக்குப் பெரிதும் இன்பம் அளிப்பன.

ஒருமுறை மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் குருடர் இறங்கித் தம் ஆடைகளைத் துவைத்துக் கொண்டிருந்தார். அவர் ஆடை அவர் கையை விட்டு நழுவி நீரில் சென்று விட்டது. இந்நிலையில் குருடர் ஆடை ஒருபுறம் நீரில்

ஒதுங்க அவர் மற்றொருபுறம் தேடிக் கொண்டிருந்தார். இதைக் கண்ட கரையிலிருந்த முடவர்.

''அப்பிலே தோய்த்திட்(டு) அடுத்தடுத்து நாமதனைத்
தப்பினால் நம்மையது தப்பாதோ?'' என்று கேட்பது போலப் பாடினார். அதைக் கேட்ட குருடரோ,

. . . . . . . . . . . . . ''அப்படியே
ஆனாலும் கந்தை அதிலும் ஓர் ஆயிரங்கண்
போனால் துயர்போச்சுப் போ''

என்று பாடி முடித்தார்.

அதைக்கேட்ட முடவர் ஆயிரம் கிழிசல்களைக்கொண்ட கந்தை ஆடையாக இருந்தாலும் குளிரையாவது தாங்காதோ? என்ற பொருளில்,

''கண்ணா யிரமுடைய கந்தையே யானாலும்
தண்ணார் குளிரையுடன் தாங்காதோ'' என்றார்.

அதைக்கேட்ட குருடர் மதுரைச் சொக்கநாதர் துணையிருக்கும பொழுது இவ்வாடை போனால் என்ன? என்ற கருததில்

''இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை'' என்று பாடி
முடித்தார்.

**காளமேகப்புலவர் :** 15-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்நத சிறந்த கவிஞரே காளமேகப் புலவர். இவர் ஆசு கவி பாடுவதிலும், வசைபாடுவதிலும் வல்லவர். ''ஆசுகவியால் அகில உலகு எங்கும வீசுபுகழ்க காளமேகம்', என்ற தொடரும இவருடைய கவிததன்மையைப் புலப்படுத்தும். இரட்டைப் புலவரும், இவரும் ஒரு காலத்தவர் இவர் சிலேடைப்பாடல் பாடுவதில வல்லவர். எடுத்துக்காட்டாக ஒரு பாடல காண்போம். இவர் பாம்புக்கும, எள்ளுக்கும் பொருநத ஒரு சிலேடைப் பாடல் பாடினார். இது சிந்தைக்கும், செவிக்கும் இனிய விருந்து.

''ஆடிக் குடத்தடையும் ஆடும்போதே இரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்-ஓடி மண்டை
பற்றின் பரபரென்னும் பாரில்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடு பாம்(பு) எள்ளெனவே ஓது''

இவர் திருவானைக்கா உலா என்ற நூலைப் பாடியுள்ளார். இவர் தனிப்பாடல்கள் தமிழ் நாவலர் சரிதை, தனிச் செய்யுள் சிந்தாமணி போன்ற நூல்களில் காணலாம். இவர் திருவானைக்காவில் வாழ்ந்தவர்.

**அருணகிரிநாதர்** : குன்றம் எறிந்த குமரவேளின் புகழை இன்னிசைப் பாடல்களால் திருப்புகழ் எனப் பாடியவரே, அருணகிரிநாதர். இவர் 'வாக்கிற்கு அருணகிரி' என்றும் 'கருணைக்கு அருணகிரி' என்றும் புலவர்களால் பாராட்டப் பெறுவர், தாயுமானவர், 'கந்தர் அனுபூதி பெற்றுக் கந்தர் அனுபூதி சொன்ன எந்தை' என்று அருணகிரிநாதரைத் தம் நூலில் போற்றிப் பாடியுள்ளார் இவர் திருவண்ணாமலையில்பிறந்தவர் இவர் பாடிய திருப்புகழ் பாடல்களில் 1307 பாடல்களே இன்று கிடைக்துள்ளன. கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி, கந்தர்அலங்காரம் போன்ற நூல்கள் இவர் பாடியவை இவர் காலம் 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

**தத்துவராயர்** : இவர் சோழ நாட்டில் தோன்றிய புலவர். அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாடுதுறை போன்றன இவர் பாடிய நூல்கள்.

## 22. 16-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள்

16-ஆம் நூற்றாண்டில் பாங்குறத் தமிழ் வளர்த்த புலவர்கள் பலர் அவர்கள் வரலாற்றை இங்கு விரிவாகக் காண்போம்.

**திருக்குருகைப் பெருமாள் கவிராயர்** : மாறன் அலங்காரம் என்ற அணி இலக்கண நூலை இயற்றியவரே திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இவர் தென்பாண்டி நாட்

டில் ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர். இவர் வணிக மரபைச் சேர்ந்தவர். இவர் மாறன் அகப்பொருள் என்ற அகப்பொருள் நூலும் பாடியுள்ளார். திருப்பதிக் கோவை, குருமகான்மியம், மாறன் கிளவி மணிமாலை போன்ற நூல்களும் இவர் இயற்றியனவே.

**பரஞ்சோதிமுனிவர் :** மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் புரிநத 64 திருவிளையாடலகளைக் கூறும் திருவிளையாடற் புராணம் என்ற நூலை இயற்றியவரே பரஞ்சோதி முனிவர். இவர் திருமறைக் காட்டில் ஆதி சைவர் மரபில் பிறந்தவர் இவர் மதுரை மடத்தில் தம்பிரானாக இருந்தவர். வடமொழியில் உள்ள ஆலாசிபமகாத்மியம் என்ற நூலைத் தழுவியே இவர் நூல் தமிழில் எழுதப் பட்டுள்ளது இவர் நூல் 3 காண்டங்களையும், 68 படலங்களையும, 3363 பாடல்களையும் கொண்டது.

**அதிவீரராம பாண்டியன் :** 'நைடதம் புலவர்களுக்கு ஔடதம்' என்று போற்றப்படுகின்ற நைடதம் என்ற நூலை இயற்றிய ஆசிரியரே அதிவீரராமபாண்டியன் நளன் தமயந்தி வரலாறு கூறுவதே நைட தம் இவர் தென்காசியில் இருந்து பாண்டி நாட்டை ஆண்டவர். இவர் தென்காசியில ஒரு கோயிலும் கட்டியுள்ளார் நெல்லை மாவட்டத்திலுள்ள கரிவலம் வந்த நல்லூர் என்றஊரில் எழுந்தருளிய பால்வண்ண நாதர்மீது இவர் திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி என்ற நூல் பாடியுள்ளார். இந்நூல் 'குட்டித் திருவாசகம்' என்று போற்றப்படும். வெற்றிவேற்கை என்ற நீதிநூல் இவரால் இயற்றப்பட்டதே. இவர் உடன் பிறநதவர் வரதுங்க பாண்டியர். இவர் இயற்றியதே பிரம்மோத்தர காண்டம் என்ற நூல்.

## 23. நைடதம்

நைடதம் என்னும் நூலை இயற்றியவர் அதிவீராரம பாண்டியன். **"நைடதம் புலவர்க்கு ஔடதம் என்ற தொட**

ரால் இந்நூலின் சிறப்பு புலனாகின்றது. இவர் இயற்றிய நைடதம் நளதமயந்தியர் கதையைக் கூறுவதாகும் இதன் முதன நூல் வடமொழியிலுள்ள நைடதமாகும் நெல்லை மாவட்டத்தில் ஆட்சி புரிந்த இந்தப் பாண்டியன் ''அரசனுக்கு அரசன், புலவருக்குப்புலவன்''. விதிவசத்தால் தொழு நோய் ஏற்படத் திருககருவைப் பதிற்றுப்பத்தந்தாதி பாடிப் பால்வண்ண நாதரை வணங்கி நோய் நீங்கப் பெற்றார். கங்கைக் கரையில் அமைந்துள்ள காசிநாதரின் பெருமையைப் பற்றிப் பேசும் 'காசிக் காண்டம்' என்னும் நூலையும் இயற்றியுள்ளார் கூர்ம புராணம், இலிங்க புராணம சிறுவர்களுக்கு வெற்றிவேற்கை என்னும நூலகளையும இயற்றியுள்ளார்.

**வீரகவிராயர் :** அரிச்சந்திர புராணம் என்ற நூலை எழுதியவரே வீரகவிராயர் இவர் பாண்டி நாட்டில் நல்லூர் என்ற ஊரில் பிறந்தவர். இவர் பொற்கொலலர் மாபைச் சேர்ந்தவர். இவர் அரிச்சநதிர வெண்பா என்ற தமிழ் நூல், அரிச்சந்திர சரிதம் என்ற வடமொழி நூல் இரண்டையும், ஆதாரமாகக் கொண்டே அரிச்சநதிர புராணம இயற்றினார். இவர் ஆசுகவி பாடுவதில் வல்லவர் இவர் நூல் இனிய விருத்தப் பாக்களால் ஆனது 12 பிரிவுகளைக் கொண்டது. 1225 பாடல்களைக் கொண்டது இவர் நூலில் அரிச்சந்திரன் மனைவி தன் மகன் லோகிதாசன இறந்தபோது மயானத்தில் புலம்பும் காட்சி மிக உருக்கமானது.

**வீரைக்கவிராச பண்டிதர் :** இவர் ஆதிசங்கரர் வடமொழியில் எழுதிய சௌந்தர்ய லகரி என்ற நூலைத் தமிழில் பாடியுள்ளார். இவர் இயற்றியனவே வராகிமாலை, ஆனந்தமாலை போன்ற நூல்கள்.

**எல்லப்பநயினார் :** இவர் சௌந்தர்யலகரிககுச் சிறந்த உரை எழுதியுளளார். திருவிரிஞ்சைப்புராணம, அருணாசல புராணம் போன்றன இவர் இயற்றிய நூல்களே.

## 24. சைவத் திருமடங்களும், தமிழ்த் தொண்டும்

சைவ மடங்களின் தலைவர்களில் பெரும்பாலோர் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர். அத னால் சைவப் பயிர் தழைக்கவும், தமிழ்ப்பயிர் ஓங்கவும் பெருந்தொண்டு புரிந்தனர்

**திருவாவடுதுறை மடம்** : இம்மடம் கி பி. 16-ஆம் நூற் றாண்டில் தோன்றியது மிகப் பழமையானது. இதைத் தோற்றுவித்தவர் நமசிவாய தேசிகர். இம்மடம் கல்விக் காக மிக்க பொருளைச் செலவழித்துள்ளது. இம்மடத்தின் சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளி இயங்கி வருகின்றது. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இம்மடத்தால் ஆத ரிக்கப்பட்ட பெரும் புலவர். இம்மடத்தில் வாழ்ந்த சிவ ஞான முனிவர் வடமொழி, தமிழ் மொழியில் புலமை பெற் றவர். நன்னூலுக்கு இவர் சிறந்த விருத்தியுரை எழுதியுள் ளார். இவர் இயற்றியனவே தொல்காப்பியப் பாயிர முதல் சூத்திர விருத்தி, அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ். காஞ்சிப் புராணம் போன்றவை. இம்மடத்தில் இன்னும் புலவராக விளங்கியவர் நமச்சிவாய தேசிகர், அம்பலவாண தேசிகர் போன்றார். இம்மடம் ஆண்டுதோறும் திருமந்திர மாநாட் டினைச் சிறப்புற நடத்தி வருகின்றது.

**தருமபுர மடம்** : இம்மடத்தை நிறுவியவர் குருஞான சம்பந்தர். இவர் சிவபோக சாரம், சொக்கநாத வெண்பா, முத்தி நிச்சயம், நவரத்தின மாலை முதலான எட்டு நூல் களை இயற்றியுள்ளார். இம்மடத்திலிருந்த வெள்ளியம்பல வாணத் தம்பிரான் முத்தி நிச்சயம் என்ற நூலுக்கு உரை எழுதியுள்ளார். இவரால் எழுதப்பட்டதே சிவஞான சித்தி யாருக்கு விரிவுரையாகிய ஞானாபரண விளக்கம் என்ற நூல். இம்மடத்தின் மேற்பார்வையில் சோழநாட்டில் 27 கோயில் கள் நன்கு இயங்குகின்றன சைவத் திருமுறைகள், திருக் குறள் உரைவளம், திருமந்திரம் போன்ற நூல்களை இம் மடம் நல்ல முறையில் வெளியிட்டுள்ளது. இம்மடத்தின்

சார்பில் ஒரு தேவாரப்பாடசாலை, மேல்நிலைப்பள்ளி, புலவர் கல்லூரி நன்கு இயங்கி வருகின்றது. இம்மடம் வெளியிடும் திங்களிதழே 'ஞானசம்பந்தம்'.

**திருப்பனந்தாள் மடம் :** இதனை ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி தில்லைநாயக சுவாமிகள் ஏற்படுத்தினார். இவர் சைவமும், தமிழும் ஓங்க அருந்தொண்டு பல புரிந்தார். இம்மடத்தால் வெளியிடப்படும் திங்களிதழ் 'குமரகுருபரன்'. இம்மடம் சென்னைப் பல்கலைக்கழகத்தில் (புலவர்) இலக்கிய இளவல் இறுதி வகுப்புத் தேர்வு எழுதுவோர்க்கு 1000 ரூபாய் முதற் பரிசை வைத்துள்ளது. இம்மடத்தின் சார்பில் திருப்பனந்தாளில் ஒரு செந்தமிழ்க் கல்லூரி இயங்குகின்றது. திருவைகுண்டத்தில் கலைக்கல்லூரி ஒன்று இயங்குகின்றது. மகாவித்துவான ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் இம்மடத்தின் சார்பில் திருமந்திரம என்ற நூலுக்குச் சிறந்த விளக்கவுரை எழுதியுள்ளார். இம்மடத்தின் தலைவராய் இருந்த காசிவாசி சுவாமிகள் டாக்டர் உ.வே. சாமிநாத அய்யரைக் கொண்டு குமரகுருபர சுவாமிகள பிரபந்தத் திரட்டு, கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் போன்ற நூல்களை ஆராயச்சிக் குறிப்புடன் வெளியிட ஏற்பாடுசெய்தார. இமமடம் தேவாரம், திருவாசகம பெரிய புராணம, கந்த புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களை அடக்க விலைப் பதிப்பாக அழகுற வெளியிட்டுள்ளது.

**மதுரை மடம் :** சைவ மடங்களில் பழமை வாய்ந்த இம்மடம் மதுரைமீனாட்சியம்மன் கோயிலுக்கருகிலுள்ளது. இமமடத்தில சைவ சமய குரவர் நால்வருள ஒருவராகிய திருஞானசமபநதர் தங்கி இருந்ததாகக் கூறப்படுகின்றது. அதனால இமமடம திருஞானசம்பந்தர் திருமடம என்று அழைக்கப்படுகின்றது. இதன தலைவர் 'சிவலிங்க தத்துவம்' என்ற நூலை இயற்றியுள்ளார்.

**பேரூர் மடம்** : கோவைக்கு அருகிலுள்ள பேரூரில் சாந்தலிங்க சுவாமிகள் என்பவரால் நிறுவப்பட்ட வீர சைவ மடமே இப்பேரூர் மடம். இவர் சீடராகிய சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் சந்நிதி முறை, திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழ் போன்ற நூல்கள் பாடியுள்ளார். சாந்தலிங்க சுவாமிகள் பெயரால் பேரூரில் தமிழ்க் கல்லூரி ஒன்று சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மயிலம் என்ற ஊரிலும் ஒரு வீர சைவமடம் உள்ளது முருகப் பெருமான் எழுந்தருளிய இத்தலத்திலும் சிவஞான பாலைய சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி ஒன்று இயங்கி வருகின்றது.

சிதம்பரத்தில் ஒரு மடத்தில் வாழ்ந்த சென்னமல்லையர் என்பவர் சிவசிவ வெண்பா என்ற நூல் பாடியருளினார்.

திருக்கோயிலூர் ஆதீனத்தின் கிளையாகிய திருப்பாதிரிப்புலியூர் மடத்தைச் சேர்ந்த ஞானியார் சுவாமிகள் என்பவர் வடமொழி, தமிழ்மொழிப் புலமையும், சாத்திர அறிவும் பெற்றவர். இவர் புலமைக்கும், பெருமைக்கும் இவர் ஆற்றிய கந்தர் சஷ்டிச் சொற்பொழிவுகளே ஓர் உரைகல்.

காஞ்சி ஞானப்பிரகாசர் மடத்துத் தலைவராகிய காஞ்சி ஞானப்பிரகாச சுவாமிகள் கச்சிக் கலம்பகம், கிருட்டின தேவராயர் மஞ்சரிப்பா போன்ற நூல்களைப் பாடியருளினார்.

இவ்வாறு சைவத்திருமடங்கள் தன்னேரிலாத தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் ஒன்றல்ல, இரண்டல்ல; எண்ணில் பல.

## 25. 17–ஆம் நூற்றாண்டுப் புலவர்கள்.

17-ஆம் நூற்றாண்டு பெற்ற புலவர்கள் பலர். அவர் வரலாற்றை–சிறப்பை இங்கு விரிவாகக் காண்போம்.

**சிவப்பிரகாச சுவாமிகள் :** 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலவருள், ஒருவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்படுவார். இவர் இயற்றியதே 'நால்வர் நான்மணிமாலை, நன்னெறி, பிரபுலிங்க லீலை, திருவெங்கைக் கோவை, திருவெங்கை உலா, சோணசைல மாலை போன்ற நூல்கள். இவர் குமர குருபரரைப் போலத் துறவியாகித் துறைமங்கலம், திரு வெங்கை போன்ற ஊர்களில் மடத்தில் தங்கியிருந்தார். இவர் திருவாசகத்தின் மீது பெரும் பற்றுக் கொண்டவர். இந்த உண்மை ''திருவாசகம் இங்கு ஒரு கால் ஓதின் கருங் கல் மனமும் கரைந்துகக் கண்கள் தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாயும்'' என்று கூறுவதால் புலனாகும். இவ் வாறே நால்வர் நான்மணிமாலையில் ''பூவெனப்படுவது பொறிவாழ் பூவே''என்று தாமரைப் பூவையும்,'பாவெனப் பாடுவது உன்பாட்டே'' என்று மாணிக்கவாசகர் பாடலை யுமே போற்றிக் கூறுவார். இவர்தம் நூல்களில் ஆங்காங்கு திருக்குறள் கருத்தை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுவார்.

**பிள்ளைப் பெருமாளையங்கார் :** அஷ்டப் பிரபந்தம் என்ற நூலை இயற்றியவரே பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். அஷ்டப் பிரபந்தங்களாவன : அழகரந்தாதி, திருவரங்கத் தந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவேங்கடமாலை, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்க நாயக்கர் ஊசல் என்பன. 'அட்டப் பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்' என்ற தொடர் இவர் நூல் பெருமைக்கு ஓர் உரைகல். இவர் பாடல்கள் சொல் நயம், பொருள் நயம், ஓசை நயம் வாய்ந் தன. இவர் திவ்விய கவி என்றும், மணவாளதாசர் என்றும் அழைக்கப்படுவார்,

**படிக்காசுப் புலவர் :** இவர் சந்தப்பா பாடுவதில் மிகச் சிறந்தவர். இவர் தொண்டை நாட்டில் பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். இவர் செங்குந்தர் மரபைச் சார்ந் தவர். இவர் இரகுநாத சேதுபதி என்ற இராமனாதபுர அரசர் அவைக்களப் புலவராயிருந்தார். இவர் சீதக்காதி

என்ற முகம்மதிய வள்ளலைப் புகழ்ந்து பாடியுள்ளார். பலபட்டடைச் சொக்கநாதப் புலவர், படிக்காசுப் புலவர் பாடல் எழுதிய ஏட்டைப் பட்டினால் சூழ்ந்தால் மூன்று உலகும் பரியளிக்கும்; தொட்டால் கை மணக்கும்; சொன்னால் வாய் மணக்கும்; சேற்றில் நட்டால் தமிழ்ப் பயிராய் விளையும் என்ற கருத்துப் படப் பாடிய பாடல் இவர் பெருமைக்கு ஏற்ற சான்று.

**அந்தகக்கவி வீரராகவ முதலியார் :** இவர் தொண்டை நாட்டில் பூதூரில் பிறந்தவர். இவர் பிறவிக் குருடராய் இருநதமையால் ஏடாயிரம் கோடி எழுதாது தம் மனத்தில் எழுதிப் படித்த வீரகர். இவர் இலங்கை சென்று பரராச சிங்கன் என்ற அரசனிடம் யானை முதலிய பரிசில் பெற்றவர். இவர் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்பகம், திருவாரூர் உலா, திருக்கழுக்குன்றமாலை, சந்திரவாணன் கோவை, திருக்கழுக்குன்றப் புராணம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

**கடிகைமுத்துப்புலவர் :** இவர் சீறாப்புராணம் பாடிய உமறுப் புலவரின் ஆசிரியர். இவர் எட்டயபுர மன்னருக்கு அவைக்களப் புலவராக இருந்தார். இவர் பாடிய நூல்களே சமுத்திர விலாசம், திக்குவிசயம், திருவிடைமருதூர் அந்தாதி போன்றன. இவர் சிலேடை, யமகம், திரிபு அமைத்துப் பாடுவதில் வல்லவர்.

**வைத்தியநாத தேசிகர் :** இலக்கண விளக்கம் என்ற நூலை இயறறியவரே வைத்தியநாத தேசிகர். இவர் நூல் 'குட்டித்' 'தொல்காப்பியம்' என்று போறறப்படும். சிவாயம் என்ற ஊரின் பெருமையைத திருவாட் போக்கிப் புராணம் என்ற நூலாகப் பாடியுள்ளார்.

**சைவ எல்லப்ப நாவலர் :** திருவருணைக் கலம்பகம் என்றநூலை இயற்றிய புலவரே சைவ எல்லப்ப நாவலர் இவர் தொண்டை நாட்டிலுள்ள தாழை நகரில் பிறந்தவர்.

என்றும, காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகிலுள்ள இராதா நல்லூரில் பிறந்தவர் என்றும் இருவகையாகக் கூறுவர். இவர் சைவத்தை நிலைநாட்டினமையால் 'சைவ' என்ற அடைமொழி கொடுத்துக் கூறப்பட்டார். செவ்வந்திப் புராணம், திருவெண்காட்டுப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம் என்பன இவர் பாடிய நூல்களே.

## 26. தமிழ் வளர்த்த முகம்மதியப் புலவர்கள்

முகம்மதியர்கள் தமிழ் இலக்கியத்திற்குப் பெருந் தொண்டு புரிந்துள்ளனர். அவருள் சிறந்தார் சிலரைப்பற்றி இவண் விரிவாகக் காண்போம்.

**உமறுப் புலவர் :** ஷெய்க்கு அப்துல் காதர் மரைக்காயர் என்பவரே தம பெயரைச் சீதக்காதி என்று மாற்றிக் கொண்டார். இவர் சிறந்த முகம்மதிய வள்ளல். இவர் தமிழ்ப் புலவர்கள் பலரைப பெரிதும் ஆதரித்துளளார். இவரைப் பற்றிப் படிக்காசுப் புலவர் மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார். 'செத்துங் கொடுத்தான் சீதக்காதி' என்ற தொடர் இவர் கொடை பற்றி எழுநததே. இவ்வள்ளலின் பேராதரவு பெற்ற உமறுபபுலவர் அவர் வேண்டுகோளுக்கிணங்கவே சீறாப் புராணம் என்ற நூலைப் பாடினார். இந்நூல் நபிநாயகத்தின் வரலாற்றினையும், தொண்டினையும், அறிவுரையினையும், விளக்கிக் காட்டுகின்றது. இவர் நூல் விலாதத்துக் காண்டம், நபுவத்துக் காண்டம், இஜிரத்துக் காண்டம் என்ற மூன்று காண்டங்களையும், 92 படலங்களையும், 5027 செய்யுட்களையும் கொண்டது. கற்பனை வளமும், பொருள் செறிவும் மிகுந்தது

**குணங்குடி மஸ்தான் சாகிபு :** இவர் காயல்பட்டினத்தில் பிறந்தவர். 47 ஆண்டுகள் வாழ்ந்தவர். இளமையில் அத்தர் வியாபாரம் புரிந்தவர். பிறகு துறவியாகி, சென்னை இராயபுரத்தில் வாழ்ந்தவர். இவர் பாடல்கள் தாயுமான

வர் பாடல் போல உணர்ச்சிப் பெருக்கூடடும். நிராமயக் கண்ணி என்ற இவர் நூல் தாயுமானவர் பராபரக் கண்ணியை ஒத்திருக்கும்.

**வண்ணக் களஞ்சியப் புலவர் :** இவர் மதுரைக்கு அருகிலுள்ள மீசல் என்ற ஊரில் பிறந்கவர். இவர் நாகூர் முகையதீன் புராணம், இராசநாயகம், தீன் விளக்கம் போன்ற நூல்கள் எழுதியுள்ளார்.

**குலாம் காதர் நாவலர் :** இவர் அண்மையில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருந்தவர். இவர் புலவராற்றுப் படை என்ற நூல் இயற்றியுள்ளார்.

**காசிம் புலவர் :** இவர் அருணகிரியாரைப் போலச் சந்தம் மிகுந்த பாடல்கள் பல பாடியுள்ளார். இவர் பாடல்களும் திருப்புகழ் என்றே வழங்கும்.

**அலியார் புலவர் :** இவர் இந்திராயன் படைப் போர், இபுனி ஆண்டான் படைப் போர் என்ற நூல்களை இயற்றியுள்ளார்.

**சவ்வாதுப் புலவர் :** இவர் முகையதீன் ஆண்டவர் பிள்ளைத தமிழ், மதீனத்தந்தாதி போன்ற நூல்களைப் பாடியுள்ளார்.

**இஸ்மாயில் மரைக்காயர் :** இவர் 'காசிம் படை வெட்டு' என்ற நூலைப் பாடியுள்ளார்.

**சதாவதானி செய்குதம்பிப் பாவலர் :** இவர் நாஞ்சில் நாட்டில் இலங்கடை என்ற ஊரில் பிறந்தவர். இவர் திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி, திரு நாகூர்த் திரிபந்தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ், கவ்வத்து நாயகம், இன்னிசைப் பாமாலை போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

**பீர் முகமது சாகிபு :** இவர் சிறந்த ஞானி. இவர் பாடியனவே ஞான மணிமாலை, ஞானப் புகழ்ச்சி போன்ற நூல்கள்

**முகம்மது உசேன் :** இவர் பெண்புத்தி மாலை என்ற சிறந்த நூலை எழுதியுள்ளார்.

**மச்சரேகைச் சித்தர் :** தத்துவக் கருத்துக்களோடு அல்லாவைத் தொழும 'முனஜத்' வரலாற்றினைக் கூறும் 'கீசா' முதலிய நூல்களைப் பாடியுள்ளார்.

இவ்வாறு முகம்மதியப் புலவர் பலர் தமிழ்ப் பற்றுக் கொண்டு அரிய நூல்கள் பல இயற்றியுள்ளனர்.

## 27. கிறித்துவத் தமிழ்ப் புலவர்களும், அவர் தமிழுக்குச் செய்த தொண்டும்

தமிழகத்தில் கிறித்துவமதத்தைப் பரப்பவந்த மேனாட்டுக் கிறித்துவர்கள் தமிழின்பத்தில் ஈடுபட்டுத் தாமும் தமிழ் பயின்று அரிய நூல்கள் பல இயற்றியுள்ளனர்.

**தத்துவ போதக சாமி (இராபர்ட் டி நொபிலி) :** இவர் இத்தாலியிலிருந்து வந்தவர். இவர் மதுரையில் வாழ்ந்தவர். சென்னை மயிலையில் காலமானவர். இவர் அந்தணர்களையே கிறித்துவர்களாக்க முயன்றவர். இவர் இயற்றியதே ஞானோபதேச காண்டம், இயேசுநாதர் சரித்திரம் போன்றவை.

**வீரமா முனிவர் :** இவர் இயற்பெயர் ஜோசப் கான்ஸ்டன்டைன் பெஸ்கி. இவர் தமிழகம் வந்து மதுரை சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்றார். இவர் கம்பராமாயணத்தை நன்கு பயின்று அதன் சிறப்பில் ஈடுபட்டு அந்நூலைப போலவே இயேசு பெருமானின் பெருமை கூறத் தேன் சொட்டும் தேம்பாவணி என்ற நூலை இயற்றினார். திருக்குறள், சீவக சிந்தாமணி போன்ற நூல்களை மிகச்சிறப்பாகப் படித்தார். சதுரகராதி என்ற நூலொன்று இயற்றினார் இது நிகண்டுச்சொற்களை எல்லாம் முறைப்படுத்தி எழுதியது. இவரால் இயற்றப் பெற்றதே 'குட்டித் தொல்

காப்பியம்' என்று போற்றப்படும் தொன்னூல் விளக்கம். இவர் இயற்றிய பரமார்த்த குரு கதை என்ற உரை நடை நூல் நகைச்சுவை நிரம்பியது இது தமிழில் முதன் முதலாக எழுந்த 'அங்கத நூல்' எனபர். இதன் சிறப்புக் கருதியே இது ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மனி, தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**சீகன் பால்கு ஐயர் :** இவர் தமிழ் நாட்டில் தரங்கம் பாடியில் தங்கி அருந்தொண்டாற்றியவர். இவர் கிறித்துவ மதத்தைத், தமிழகததில் பரப்புவதற் நப் பெருந்தொண்டு புரிந்தவர். இவரே முதன்முதலில் தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட்டவர்.

**எல்லீசர் :** இவர் திருக்குறள் முதல் 13 அதிகாரங் களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதியவர். இவர் தமிழகத்தில் பல ஓலைச்சுவடிகளைத் திரட்டியவர். வீரமாமுனிவரின் வரலாற்றை வெளியிட்டவர் இவரே.

**இரேனியஸ் ஐயர் :** இவர் செர்மனி நாட்டைச் சேர்ந்த தவர் இவர் தமிழகம் வந்து நாளடைவில் தமிழில் பேசவும் எழுதவும் வல்லவராக விளங்கினார். இவர் வேதஉதாரணத் திரட்டு என்ற உரைநடை நூலை இயற்றினார்.

**போப்பையர் :** தமிழ்ப்பணியே தம் உயிர்ப்பணியாகக் கொண்டவர் போப்பையா. இவரே மேலைநாட்டாருக்குத் தமிழகத்தின் கலைச்செல்வத்தைக் காட்டிய கண்மணியர். இவர் பல இடங்களில் பள்ளிகளையும், சமயப்பள்ளிகளையும் ஏற்படுத்தினார். இவர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இவர் திருக்குறள், நாலடி யார், திருவாசகம் போன்ற நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவர் தம் கல்லறையில் 'தம்மை ஒரு 'தமிழ் மாணவர்' எனறு பொறிக்க வேண்டும் என்று விரும் பினார்

**கால்டுவெல் ஐயர் :** திராவிட மொழியில் ஒப்பிலக் கணம என்ற நூல் எழுதிப் பெருமை பெற்றவர் கால்டுவெல் ஐயர். இவர் அயர்லாந்து நாட்டிலிருந்து தமிழகத்துக்குப் போந்தார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் ஓரினத்தைச் சேர்ந்தவை என்பதை எடுத்துக் காட்டியவர் இவரே. இவர் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த இடையன்குடியில் தங்கிச் சமயத் தொண்டாற்றிய வர். இவர் நற்கருணை தியான மாலை, ஞானக்கோயில் என்ற உரைநடை நூல்கள் இயற்றினார்.

**வேதநாயகம் பிள்ளை :** விற்பன்னர் வேதநாயகம் பிள்ளை குளத்தூரில பிறந்தவர் இவர் மாயூரத்தில் மாவட்ட முனிசீப்பாகப் பணியாற்றியவர். இவர் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றவர். தமிழ் இலக்கியத்தில் நாவல் என்ற புதிய துறையை ஏற்படுத்தியவர் இவரே. பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம் போன்ற நூல்கள் நாவலுக் கேற்ப இவரால் எழுதப்பட்டதாகும் இவர் மகளிர் உல கிற்குப் பெரிதும் பயன்படப் 'பெண்மதி மாலை' என்ற நூலை இயற்றினார் எல்லா மதத்தவரும் ஒற்றுமையோடு வாழவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தச் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை' என்ற நூலை இயற்றினார். இவர் தம் பாடல்களில் சாதிவேறுபாட்டை ஒழிக்க—கையூட்டு வாங்கும் அலுவலர்களைத் தாக்க முனைந்ததாகத் தெரிகிறது. இவர் நகைச்சுவை தோன்ற நலங்குப் பாட்டுப் போலப் பாடல் பல பாடியுள்ளார்

**வேதநாயக சாஸ்திரி** . இவர் தஞ்சை சரபோசி மன்ன ரால் ஆதரிக்கப் பெற்றவர். இவர் பெத்தலேகம் குறவஞ்சி பராபரன்மாலை, ஞானக்கும்மி போன்ற நூல்களைப் பாடி யுள்ளார். சென்னை மக்கள் தமக்களித்த வரவேற்பிற்கு மகிழ்ந்து இவர் எழுதியதே சென்னைப் பட்டணப்பிரவேசம் என்ற நூல்.

**ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ணப் பிள்ளை :** இவர் நெல்லை மாவட்டத்தில் இரட்டியார்பட்டியில் பிறந்தார். இவர் ஜான் பனியன் என்ற மேலைநாட்டு ஆசிரியர் எழுதிய 'பில்கிரிம்ஸ் பிராகிராஸ்' (Pilgrim's Progress) என்ற நூலைத் தழுவி இரட்சணிய யாத்திரிகம் என்ற காவியத்தை இயற்றினார். இவர் பாடல்கள் ஆழ்வார்கள், நாயன்மார் களின் பக்திப் பாடல்களைப் போலவே மிகவும் உருக்கமாக அமைந்துள்ளன.

**அந்தோணிக் குட்டி அண்ணாவியார் :** இவர் வீரமா முனிவர் காலத்தில் வாழ்ந்த சிறந்த தமிழ்ப் புலவர். இவர் இயேசுநாதர் மீது பல செய்யுட்களை உருக்கமாகப் பாடி யுள்ளார்.

**முத்துசாமிப் பிள்ளை :** இவர் சென்னை கல்விச் சங் கத்தின தலைவர். இவர் வீரமாமுனிவர் வாழ்க்கை வர லாற்றைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டுள ளார்.

## 28. 18-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள்.

18-ஆம் நூற்றாண்டு பெற்ற தமிழ்ப் புலவர் பலர். அவர் வரலாறறை இங்கு விரிவாகக் காண்போம்.

**தாயுமானவர் :** இவர் திருமறைக் காட்டில் பிறந்தார். இவர் தந்தை கேடிலியப்பபிள்ளை தாய் கேசவல்லி அம்மை இவர் சைவ வேளாளர் குடியில் பிறந்தவர். இவர் மௌன குருவிடம் கல்வி பயின்றவர். இவர் வடமொழி, தென் மொழி இரண்டிலும் புலமை பெறறவர். இவர் திரிசிரபுரத் தில் விசயரங்க சொக்கநாத நாயக்கரிடம் கணக்கராக இருந்தவர் இவர் மட்டுவார் குழலி என்ற பெண்ணைத் திருமணம் புரிந்துகொண்டு சிலகாலம் இல்லறத்தில் வாழ்ந்து பிறகு துறவு பூண்டவர். யோக ஞானங்களில் சிறந்தவர். இவர் சைவ சமயத்தின் கொள்கைகளைத் தம் இனிய பாடல்

களால் வெளியிட்டவர். இவர் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றும் அறியாதவர். இவர் பாடல்கள் தாயுமானவர் பாடல் என்றே வழங்கும்.

**திரிகூடராசப்பக் கவிராயர் :** திருக்குற்றாலக் குறவஞ்சி என்றநூலைப்பாடியவரே திரிகூடராசப்பக் கவிராயர் இவர் ஊர் குற்றாலத்திற்கருகிலுள்ள மேலகரம் இவர் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். குற்றாலத் தலபுராணம் முதலிய 41 பிரபந்தங்கள் இவர் பாடியுள்ளார். இவர் நூல் மதுரையை ஆண்ட விசயரங்க சொக்கநாத நாயக்கர் அவையில் அரங்கேறிற்று. இவர் குற்றாலநாதர் மலை வளத்தைப் பாடும் அழகே அழகு. இவர் நூல் திருக்குற்றாலத்தில் குறும்பலா மரததினடியில் எழுந்தருளிய குற்றால நாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. இவர் நூல் வெண்பா, அகவல், விருத்தம் முதலியவற்றோடு சிந்து, கண்ணி போன்றனவும் கலந்து நாடகப்பாங்கில் அமைந்துள்ளது குறவஞ்சி எனபது குறத்திப்பாட்டு. தலைவன் வீதியில பவனி வாத் தலைவி அவன்மீது அன்புகொள்கிறாள் அத்தலைவிககு ஒரு குறத்தி குறி சொல்லிப் பரிசில் பெறுகிறாள். இதுவே இவர் நூலின் பொது அமைப்பாகும்.

**பலபட்டைச் சொக்கநாதப் புலவர் :** இவர் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர். படிககாசுப புலவர் பாடலைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்தவர் இவரே. அழகர் கிள்ளை விடு தூது என்ற சிறு காப்பியம் இவரால் இயற்றப் பட்டதே

**நல்லாப் பிள்ளை :** இவர் தொண்டை நாட்டில் மதலம் பேடு என்ற ஊரில் பிறந்தவர். இவர் பாரதக் கதையைத் தமிழில் பாடியுள்ளார். அது நலலாப் பிள்ளை பாரதம் என்றே வழங்கும் இவர் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மும்மொழிப் புலமைபெற்றவர். இவர் தேவயானைப் புராணம் என்ற ஒரு நூலும் பாடியுள்ளார்.

**அபிராமபட்டர் :** இவர் சோழ நாட்டில் திருக்கடவூரில் பிறந்தவர். அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். இவர் பாடிய

பாடல்கள் 'அபிராமி அந்தாதி' என வழங்கும். இவர் சரபோசி மன்னர் அவையில் அமாவாசையைப் பௌர்ணமி என்று கூறி அதை உண்மையாக்கியவர். இவர் இந்த அந்தாதியைப் பாடிய பிறகு அபிராமி அம்மை தம் திருத்தோட்டினை வானில்எறிந்து மதிபோல் ஒளிவிடச்செய்து பௌர்ணமியாக்கினாள் என்பதுவரலாறு 'விழிக்கே அருள் உண்டு' என்று தொடங்கும் பாடலே இந்த அற்புதத்தைச் செய்தது என்பர்.

**பகழிக் கூத்தர் :** இவர் திருநெல்வேலிக்கு அருகில் உள்ள சன்னியாசிக கிராமத்தைச்சேர்ந்தவர் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் பாடியவர் இவரே.

**மார்க்கசகாய தேவர் :** திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் என்ற நூலைப பாடியவர் இவரே.

**நாராயண பாரதி :** இவர் தொண்டை நாட்டில் வெண்பணி என்றஊரைச் சேர்ந்தவர். இவர் வைணவ குலத்தைச் சார்ந்தவர். இவர் திருவேங்கட சதகம் என்ற நூலைப் பாடியவர். இந் நூலுக்கு மணவாள நாராயண சதகம் என்றும் ஒரு பெயருண்டு. கோவிந்த சதகம் என்ற நூல் இயற்றியவரும் இவரே.

**அழகிய நம்பி :** குரு பரம்பரை என்ற நூலை இயற்றியவர் இவரே. வைணவ ஆச்சார்யர்களின வரலாற்றை இனிது விளக்குவதே குரு பரம்பரை.

**முத்துராசர் :** இவர் உறையூர்ப் புலவர். இவர் பாடிய 'கயிலாய மாலை' என்ற நூலில சிங்கை ஆரிய மன்னன் கல்லூரில ஆண்டது, தென் தமிழ் நாட்டில் இருந்து பல வேளாளரைக் குடியேற்றியது, கயிலாயநாதர் கோயில் கட்டுவித்தது போன்ற வரலாற்றுக் கருததுக்களைச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

**மாரிமுத்துப் பிள்ளை :** சிதம்பரத்திற்கு அருகிலுள்ள தில்லைவிடங்கன என்ற ஊரில வாழ்ந்தவரே மாரிமுத்துப்

புலவர். இவர் புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விறலி விடு தூது என்ற இரு நூல்கள் இயற்றியுள்ளார். இவர் சித்திர கவி பாடுவதில வல்லவர்.

## 29 19-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள்

*19-ஆம் நூற்றாண்டு பெற்ற புலவர்கள் பலர். அவர் வரலாற்றுச் சிறப்பை இங்கு விரிவாகக் காண்போம்.*

**இராமலிங்க அடிகள் (வள்ளலார்)** *திருவருட்பா என்ற நூலைப் பாடியவரே இராமலிங்க அடிகள். இவர் 19-ஆம நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் தென்னார்க்காடு பாவட்டத்தில் சிதம்பரத்தை அடுத்த மருதூரில் வாழ்ந்தவர். இவர் சென்னையிலும் கருங்குழியிலும் வாழ்ந்து இறுதியில் வடலூரில் 53-ஆம் வயதில் மறைந்தார் இவர் தந்தை இராமையா பிள்ளை தாய் சின்னம்மை. இவர் கொள்கை 'அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை' என்பது. இவர் 'எம்மதமும் சம்மதம்' என்று சமரச மனப்பான்மையுடையவர். இவர் மனு நீதிச் சோழன் வரலாற்றை 'மனுமுறை கண்ட வாசகம்' என்ற சிறந்த உரைநடை நூலாக எழுதியுள்ளார். இவர் 'கொல்லா விரதம் குவலயம் ஓங்குக' என்ற கொள்கையைப் பரபபப் 'பிள்ளைப் பெருவிண்ணப்பம' பாடியருளினார். இவர் மன்னுயிரைத் தன்னுயிர்போல் போற்ற வேண்டும் என்ற கருத்தில் இறைவன்பால் வேண்டுகோள் விடுக்கின்றார். அது ''அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்; ஆருயிர்க்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்'' என்பதாகும.*

**இராமானுசக் கவிராயர் :** *இவர் இராமநாதபுரத்தில் பிறந்தவர். சென்னையில் வாழ்ந்தவர். பார்த்தசாரதி மாலை, திருவேங்கட அநுபூதி, வரதராசப்பெருமாள் பதிற்றுப் பத்தந்தாதி போன்றன இவரியற்றிய நூல்கள். இவர் வைணவர் என்பர் சிலர். வடுகர் என்பாரும் உண்டு.* **இவர் பச்சையப்ப முதலியார் போன்ற வள்ளல்களையும்,**

சங்கராச்சாரியாரையும் புகழ்ந்து பாடியுள்ளார். இவர் திருக்குறள், நன்னூல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்களுக்கும் சிறந்த காண்டிகை உரை வகுத்துள்ளார். ஆதலின் இவரைச் சிறந்த உரையாசிரியர் என்று கூறலாம். இவரால எழுதப்பட்ட இலக்கணச் சுருக்கம் ஒன்று உண்டு. ஆத்மபோசப் பிரகாசிகை போன்ற வடமொழி நூலை இவர் தமிழில் சிறந்த முறையில் மொழி பெயர்த்திருக்கிறார்.

**இராமச்சந்திர கவிராயர்:** இவர் தொண்டைமண்டலத்தில் இராசுநல்லூர் என்ற ஊரில் பிறந்தவர். சென்னையில் வாழ்ந்தவர். இவர் நகைச்சுவை பொருந்திய இனிய எளிய தனிப்பாடல்கள் பாடுவதில் வல்லவர். இவர் எல்லீசரால் பெரிதும் பாராட்டப்பட்டவர். "ஆவீன மழை பொழிய இல்லம் வீழ" என்று தொடங்கும் இவர் பாடல் துன்பங்கள் அலைபோல அடுக்கடுக்காக வரும் என்பதை மெய்ப்பிக்கும் அருஞ்சான்று. கல்லாத ஒருவனைக் கற்றான் என்றும், காடெறியும் மறவனை நாடாள்வான் என்றும், இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான் என்ற கருத்துப்பட வரும் இவர் பாடல் நகைச்சுவைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. இவர் சதபங்கி நவபங்கி போன்ற சித்திரகவி பாடுவதில் வல்லவர். சகுந்தலை விலாசம், தருகா விலாசம், இரங்கோன சண்டை நாடகம் போன்ற நாடகத் தொடர்புடைய நூல்கள் பல இவர் இயற்றியுள்ளார்.

**சிவக்கொழுந்து தேசிகர்:** இவர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள கொட்டையூரில் பிறந்தார். இவர் தஞ்சை சரபோசி மன்னரால் ஆதரிக்கப் பெற்றவர். அவர் அவைக் களப் புலவராயும் விளங்கியவர். கோடீச்சுரக் கோவை, தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி இவர் பாடிய நூல்களே.

**தண்டபாணி சுவாமிகள்:** இவர் திருப்புகழ்ச் சுவாமிகள் என்றும், முருகதாச சுவாமிகள் என்றும் கூறப்படுவர். இவர்

திருநெல்வேலியில் சைவ வேளாளர் மரபில் பிறந்தார். இவர் முருகப் பெருமானைச் சிறப்பாக வழிபட்டு அவ்வழிபாட்டின் பயனாகப் பாடல் இயற்றும் வன்மை பெற்றார். இவர் 70 புலவர் வரலாற்றைப் புலவர் புராணம் என்ற நூலாகப் பாடியுள்ளார். இவர் நெய்தல் தொழிலை வியந்து பாடியுள்ளார். தில்லைத் திருவாயிரம் திருச்செந்தூர்க் கோவை, திருமயிலைக் கலம்பகம் சென்னைக் கலம்பகம் போன்ற சிறு காப்பியங்களும் பாடியுள்ளார்.

**பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை:** மனோன்மணீயம் என்ற நாடக நூலை இயற்றியவர் பெ. சுந்தரம்பிள்ளை. இவர் திருவனந்தபுரத்தை அடுத்த ஆலப்புழையில் பிறந்தவர் இவர் தந்தை பெருமாள் பிள்ளை. இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப்பேராசிரியராகப் பணிபுரிந்தவர் இவர் தமிழ் இலக்கியக் கடலில்மூழ்கியவர் இவர் திருமுருகாற்றுப் படை, நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி போன்ற சங்க நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார் திருஞான சம்பந்தர் கால நிச்சயம் என்ற ஆங்கிலக் கட்டுரை இலக்கிய வரலாற்றுக்கால ஆராய்ச்சிக்கு ஒரு கருவூலம். லிட்டன்பிரபு ஆங்கிலத்தில் எழுதிய 'இரகசிய வழி' என்ற நூலைத்தழுவிஎழுந்ததே இவர் இயற்றிய மனோன்மணீயம். இது சுவை பல தழுவிய சிறந்த நாடக நூல்.

**காஞ்சிபுரம் சபாபதி முதலியார் :** இவர் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழ்ப் புலவராய் இருந்தவர் இவர் சைவ சமய இலக்கிய வினா விடை, பிரமமோத்திர காண்டப் பொழிப்புரை போன்ற நூல்கள் இயற்றியுள்ளார். இவர் சந்தம் மிக்க தமிழ்ப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

**கோபாலகிருட்டின பாரதியார் :** நந்தன் சரித்திரக் கீர்த்தனை பாடியவரே கோபாலகிருட்டின பாரதியார். இவர் தியாகராச சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இவர் பஞ்ச ரத்தினக் கீர்த்தனங்கள் பல பாடியுள்ளார்.

**சரவணப் பெருமாள் ஐயர் :** இவர் நன்னெறி, திருவள்ளுவமாலை, திருவேங்கைக்கோவை போன்ற நூல்களுக்குச் சிறந்த உரை எழுதியுள்ளார்.

**விசாகப் பெருமாள் ஐயர் :** இவர் நன்னூலுக்குக் காண்டிகையுரை எழுதியுள்ளார். இலக்கண வினா விடையும் எழுதியுள்ளார்.

**மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை :** இவர் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவர். இவர் நாளொன்றுக்கு 300 கவி பாடும் ஆற்றல் படைத்தவர். திரிசிரபுரத்தில் பிறந்து, திருவாவடுதுறை ஆதீனத்தாரால் பெரிதும் ஆதரிக்கப்பெற்ற இப்புலவர் அவ்வாதீனத்திலிருந்த பலருக்கும் பாடஞ்சொல்லி வந்தார். இவருடைய அருமை மாணாக்கர்களே ஐயர் என்றும், செட்டியார் என்றும் முறையே போற்றப்படுகின்ற டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களும், தியாகராச செட்டியார் அவர்களுமாவர். இவர் பாடிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் ஒன்றே இவர் புலமையை உலகறியச் செய்யும். இவர் பல பல புராணங்கள், சிறு காப்பியங்கள், தனிப்பாடல்கள் இயற்றியுள்ளார்.

**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் :** பரிதிமாற் கலைஞர் என்று தம் பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்ட அறிஞர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார். இவர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகத் தொண்டாற்றியவர். இவர் மதுரையில் பிறந்தவர். சபாபதி முதலியாரிடம் கல்வி பயின்றவர். ஆங்கிலம், பிரெஞ்சு, வடமொழி போலத் தமிழும் ஓர் உயர் தனிச்செம்மொழியாகக் கருதப்பட அருந்தொண்டாற்றியவர். இவர் ஞானபோதினி என்ற திங்களிதழுக்குத் துணையாசிரியராக இருந்தவர். உருபாவதி, மானவிசயம், கலாவதி போன்ற நாடக நூல்கள் இயற்றியவர் இவரே. இவர் நாடகமுறை நவிலும் நாடகவியல் என்ற இலக்கண நூல் ஒன்று இயற்றி

யுள்ளார். இவர் இயற்றிய தனிப் பாசுரத்தொகை டாக்டர் ஜி. யு. போப் துரை மகனரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி வரலாறு என்ற நூல் இவர் இயற்றியதே.

## 30. தமிழில் புதினங்கள்

வாழ்க்கைப் போக்கினை நாளும் விளக்கிக் காட்டுவது கதையும், புதினமும். தாம் வாழும் தலைமுறையினர் வாழ்வையும், கடந்த கால நிகழ்ச்சிகளையும் கொண்டு படைக்கப்பெறுவதே பல்வகைப் புதினம். மேலைநாட்டார் தொடர்பால் வளர்ந்தது நாவல் துறை. அதன் சிறப்பை விரிவாகக் காண்போம்.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழியில் 19-ஆம நூற்றாண்டின் இறுதியில் தான் புதினம் தோன்றிற்று. இதற்கு அடிகோலியவர் விற்பன்னர் வேதநாயகம் பிள்ளை. இவர் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரமே' முதல நாவல். அவர் தீட்டிய மற்றொரு புதினம் 'சுகுண சுந்தரி சரிதம்' அடுத்துக் குடும்பச்சூழலை அடிப்படையாகக்கொண்டு சு. வை குருசாமி சர்மா என்பார் 'பிரேம கலாவதியம்' என்ற புதினம ஒன்றைப் படைத்கார். அ. மாதவய்யா என்பார் 'சாவித்திரி சரித்திரம' என்ற புதினமும், 'பத்மாவதி சரித்திரம்' என்ற புதினமும் தமிழ் உலகிற்குத் தந்தார். திரு. இராசமையர் என்பார் மனித வாழ்க்கையின் தத்துவம் செறிந்த 'கமலாம்பாள் சரித்திரம்' என்ற புதினத்தை வெளியிட்டார். பண்டித ச ம நடேச சாஸ்திரி என்பார் 'தானவன', 'தீனதயாளு' 'திக்கற்ற இரு குழந்தைகள்', 'மதி கெட்ட மனைவி' என்ற அரிய புதினங்களை உரிய முறையில் படைத்தார்.

ஆரணி குப்புசாமிமுதலியார் மேலைநாட்டு நாவல்களில் இடம்பெறும் பெயர்கள், நிகழ்ச்சிகளைத் தமிழ் நாவல்களில்

ஆங்காங்கே உலவவிட்டு வெற்றி கண்டார். அதற்கேற்ப இரெயினால்ட்ஸ நாவல்கள் தமிழ்ப்புதினமுறையில் பாங்குற அமைக்கப்பட்டன. வடுவூர் துரைசாமி அய்யங்கார் ஆங்கில நாவல்களை அழகிய தமிழில் எழுதினார். அவர் எழுதிய புதினங்களே மேனகா, திகம்பர சாமியார் அல்லது கும்ப கோணம் வக்கீல ஆகிய இரு புதினங்கள்.

அடுத்து ஜே.ஆர். இரங்கராசு என்பார் துப்பறியும் புதி னங்கள் பல தீட்டினார். அவர் புதினங்கள் திரைப்படங் களாகவும் புகழ் பெற்றுயர்ந்தன, அவர் தீட்டியனவே இராசாம்பாள், சந்திரகாந்தா போன்றன.

இரங்கூன் தி. ம. பொன்னுசாமிப் பிள்ளை என்பார் மர்மப் புதினங்கள் பல தீட்டினார்.

தமிழ்நாட்டு வால்டர் ஸ்காட் என்று போற்றப்படும் கல்கி அவர்கள் புதினம பல கண்ட பெருந்கதையாளர். தொடர் கதை படிக்கும் ஆர்வத்தைத் தமிழ் உலகிற்குத் தந்தவர் இவரே. தாம் கூறும் எந்தக் கதையையும் தனிப் பெருஞ் சுவையுடன் எழுதிச் செல்வதில் அவருக்கு நிகர் அவரே. கள்வனின் காதலி', 'தியாகபூமி' போன்றன இவர் முதலில் எழுதிய தொடர் கதைகள். வீணை பவானி மகுடபதி, சோலைமலை இளவரசி போன்றனவும் இவர் தீட்டியபுதினஙகளே. இவர்எழுதிய அலைஓசை பரிசுபெற்ற அரும் புதினம். இவர் இயற்றிய பார்த்திபன் கனவு அரிய வரலாற்றுப் புதினம். இவ்வாறே இவர் தீட்டிய அரும்புதி னம் பொன்னியின் செல்வன். இது கல்கியில் வாரநதோறும் தொடர்கதையாக இடம் பெற்றது.

வரலாற்றுப் புதினம் காண்பதில கல்கியை அடி ஒற்றி எழுந்த எழுத்தாளர் பலர். அவர்களில் சாண்டில்யன், கோவி மணிசேகரன், ஜெகசிற்பியன், அரு. இராமநாதன், கலைஞர் மு. கருணாநிதி, தீபம் நா பார்த்தசாரதி போன் றோர் குறிப்பிடத் தக்கார். இறுதியாகச் சமுதாய நாவல்கள்

எழுவதில் பெரும் புகழ் படைத்தவர் டாக்டர் மு வரத ராசனார் அவர்கள் அவர் புதினங்களில் வாழ்க்கைச் சிக்கல் பின்னிக் கிடக்கும். சங்க இலக்கியக் கருத்துக்கள் ஆங்காங்கு மிளிரும். எளிய, இனிய நடை எங்கும் தவழும். பாவை, கள்ளோ காவியமோ, பெற்ற மனம், அல்லி, நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு, மண் குடிசை, வாடாமலர் போன்றன அவர் இயற்றிய சமுதாயப் புதினங்கள்.

இவ்வாறே கொத்தமங்கலம் சுப்பு, தீபம் நா. பார்த்த சாரதி, மாயாவி, கு இராசவேலு போன்றவர்களும் சமுதாய நாவல் படைத்துள்ளனர்.

புதினம் படைப்பதில் பெண் எழுத்தாளர்களுக்கும் பெரும் பங்கு உண்டு எடுத்துக்காட்டாக இலட்சுமி என்பவர் தீட்டிய பெண் மனம், காஞ்சனையின் கனவு, அரக்கு மாளிகை போன்றன குறிப்பிடத்தக்கன. தமிழ்நாட்டு ஜேன் ஆஸ்டின் என்று போற்றப்படும் அநுத்தமா தீட்டிய சிறந்த படைப்பே கேட்ட வரம், மணல்வீடு, பிரேம கீதம் போன்றன. இராஜம் கிருஷ்ணன், வசுமதி இராமசாமி, சூடாமணி விமலா இரமணி போன்றோர் சிறந்த புதினம் படைக்கும் பெண்டிராவார்.

இவ்வாறு வரலாற்று ஏட்டில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியும,இன்றைய 20-ஆம் நூற்றாண்டும் கண்ட புதினம் சான இருக்கும் புதினம் தமிழ் மக்களுக்கு இனிய பெரிய விருந்து

## 31. தமிழில் சிறுகதைகள்

சங்க இலக்கியம் கண்டது—தொல்காப்பியம் போற்றுவது-மேலை நாட்டார் தொடர்பால் நாளும் வளர்ந்தது சிறுகதை. அதன் சிறப்பை இங்கு விரிவாகக் காண்போம்.

சுவையான நிகழ்ச்சி, கவர்ச்சியான காட்சி, ஒருவர் தனிப் பண்பு, ஓர் அனுபவம் போன்றனவே சிறு கதை. அது

தொடக்கமும். முடிவும் குதிரைப் பந்தயம் போலச் சுவை மிக்கதாக இருக்க வேண்டும் என்று செட்ஜ்விக் என்பார் கூற்றாக டாக்டர் மு வரதராசனார் தம் இலக்கிய மரபு என்ற நூலில் அழகுறக் கூறியுள்ளார். ஒரு சிறு கதை அரை மணியிலிருந்து இரண்டு மணிக்குள் படித்து முடிக்கக் கூடிய தாக அமைநதிருக்க வேண்டுமென்று எட்கார் ஆலன்போ என்பார் கூறியுள்ளார்

அம்பு பாய்வது போலப் பாய்ந்து படிப்போர் உள்ளம், நிகழ்ச்சியின் மையக கருத்தில் பொருந்துமாறு சிறு கதை முடியவேண்டும் என்பார் தீபம் ஆசிரியர் நா.பார்த்தசாரதி. மதன காமராசன் கதை, விக்கிரமாதிததன கதை போனறன பழம் பெருஞ் சிறு கதைகள் 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குருகதை போன்ற சிறு கதைகள், அஷ்டாவதானம வீராசாமிச் செட்டியார் இயற்றிய 'விநோதரச மஞ்சரி' என்ற நூல் போன்றன சிறு கதை பல அமைந்த சிறந்த நூல்கள்.

கி பி 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாயூரம் வேத நாயகம் பிள்ளை சிறுகதை வளர்ச்சிக்குச் சிறநத தொண் டாற்றினார் அவர் இயற்றிய சிறுகதை நூல்களே பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி கதை போனறன.

20-ஆம் நூற்றாண்டு சிறுகதை வளர்த்த சிறந்த அறிஞர் களைப் பெற்றிருந்தது. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டு மாபசான் என்றும், சிறுகதை மன்னன் என்றும போற்றப் படும் புதுமைப் பித்தனைத் தமிழுலகம் மறக்க முடியாது. இவர் இயற்பெயர் விருத்தாசலம். இவர் இயற்றிய சிறு கதைகளே 'கடவுளும சந்தசாமிப் பிள்ளையும்', 'அன்று இரவு' போன்றன

கு. ப. இராசகோபாலன் என்ற சிறுகதை படைப்பாளர் தமிழ் உலகிற்குத் தீட்டிய சிறு கதைகளே 'காணாமலே காதல்', 'புனர் ஜென்மம்', 'கனகாம்பரம்' முதலியன.

அடுத்துத் தமிழ்ச் சிறுகதைக்குத் தந்தை என்று போற்றப்படும், கல்கி அவர்கள் சிறுகதைக்கு ஆற்றிய தொண்டு அளவிடற்கரியன அவர் தீட்டிய சிறுகதைகளே 'காதறாக் கள்வன்', 'மயில் விழிமான்', 'ஒற்றை ரோசா' போன்றன.

சக்கரவர்த்தி சி. இராசகோபாலாச்சாரியார் அவர்களும் தத்துவக் கருத்துக்கள் பல நிறைந்த எளிய, இனிய சிறுகதைகள் பல இயற்றியுள்ளார். அவர் கதைகள் இர்ராசாசி கதைகள் என்ற பெயரில் வெளி வந்துள்ளன. கலைமகள் ஆசிரியர் கி. வா. சகந்நாதன் எழுதிய கதைகள் 'கலைஞன் தியாகம்' என்ற பெயரில் வெளி வந்துள்ளன. திரு பி. எஸ். இராமையா அவர்கள் தம் சிறு கதைகளை மணிக்கொடி, தினமணிக் கதிர் போன்ற இதழ்களில் வெளியிட்டுள்ளார். இன்றைய எழுத்தாளர்களில் தலைசிறந்த சோமு என்று போற்றப்படும் திரு மீ ப. சோமசுந்தரம் அவர்கள் 'கல்லறை மோகினி', கேளாத கானம்' போன்ற அரிய சிறுகதைப் படைப்புககளைத் தமிழ் உலகிற்குப் படைத்துள்ளார்.

புரட்சி உள்ளம் படைத்த உயர்ந்த எழுத்தாளர்—ஏழை உள்ளக் குமுறலை அப்படியே படம் பிடித்துக் காட்டும் ஏந்தல் விந்தன் அவர்கள். அவர் தீட்டிய சிறுகதைகள் 'முல்லைக் கொடியாள்' என்ற தலைப்பில் வந்துள்ளன.

எழுத்துலகச் சிற்பி டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தீட்டிய சிறு கதைகளே ''விடுதலையா?'' 'குறட்டைஒலி' போன்றன. ரா. கி ரங்கராசன தீட்டிய 'பல்லக்கு' எனற சிறுகதை பரிசுபெற்ற அருங்கதை அவர் தீட்டியசிறுகதையே 'நிலா நனையுமா?' என்பது. இன்றைய சிறுகதை ஆசிரியர்களுக்குச் சிறநத வழிகாட்டியாக விளங்கும் அகிலன் தீட்டிய சிறுகதைகள் பல 'அமராவதிக் கரையில்', 'ஆண் பெண்' போன்றன அவர் தீட்டிய அருங்கதைகளில் சில, சமுதாய ஊழல்களை அலசிக் காட்டும் எழுத்தாளர் செயகாநதன், கோவி. மணிசேகரன் ந. பிச்சைமூர்த்தி, தி. ஜானகிராமன்

ஜெகசிற்பியன், தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி போன்றோர் தமிழுலகிற்கு நாளும் சிறுகதை விருந்தளிக்கும் சிறந்த எழுத்தாளர்கள்.

இவ்வாறே தமிழ்நாட்டில் சிறுகதை வளர்க்கும் சிறந்த பெண் எழுத்தாளர்களும் உண்டு அவருள் அநுத்தமா ஆர். சூடாமணி, கோமதி சுப்பிரமணியம், ஆனந்தி, உமா குருமூர்த்தி, துளசி செயராமன், இராசம் கிருட்டினன் போன்றார் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வாறு இன்று சிறுகதையுலகில் நாளும் வெளிவரும் புதிய எழுத்தாளர்களின் அரிய படைப்புகள் ஒன்றல்ல, இரண்டல்ல, பலப்பல.

## 32. உரைநடை வளர்ச்சி

இலக்கிய வரலாற்றில் உரைநடை தோன்றுவதற்கு முன்னரே கவிதை தோன்றிற்று என்பது எமர்சன் என்ற அறிஞர் கொள்கை. உரைநடை தோன்றுவதற்கு முன் உரை நடை போன்ற நூற்பாக்கள் தோன்றின என்பது பேராசிரியர் அ மு. பரமசிவானந்தம் அவர்கள் கருத்து. எனவே உரைநடை பண்டு தொட்டே உள்ளது. அதன் சிறப்பை—வளர்ச்சியை இங்கு விரிவாகக் காண்போம்.

தொல்காப்பியத்தில் உரைநடை பற்றிய குறிப்பு உண்டு வனப்பு எட்டினுள் தொன்மை என்பது ஒன்று. தொன்மையாவது பாட்டும், உரையும் கலந்து எழுதப்பட்ட நூல்களை குறிக்கும் பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை என்ற இரண்டு நூலும் இத்தொன்மைக்கு எடுத்துக்காட்டாக உரையாசிரியரால் காட்டப்பெறும்.

இத்தகைய நூல்களை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று கூறுவர். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் இடையிடையே உரைநடை கலந்து இருப்பதால் அதற்கு உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றே ஒரு

காரணப் பெயர் உண்டு. எனவே உரைநடையும் செய்யுளும் கலந்த நூல்களும், பாடல்களுக்கு உரை கூறும் உரை வளங்களும், நவீனங்களும், நாடகங்களும், சிறு கதைகளும் உரை நடை நூல்களே என்பது நன்கு புலனாகும்.

சிலப்பதிகாரத்தில் உரைநடை கலந்து வருவதற்கு ஓர் எடுத்துக்காட்டு இவண் காண்போம்.

''அன்றுதொட்டுப் பாண்டிய நாடு மழைவறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்பு நோயும் குருவுந் தொடரக் கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்ல ராயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழைபெய்து நோயுந் துன்பமும் நீங்கியது''.

''அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழில் என்றும் மாறாதாயிற்று''.

இவ்வாறே இறையனார் களவியலுரை பண்டை உரை நடைக்கு ஏற்ற எடுத்துக்காட்டு. அதில் ஒரு பகுதியை இங்கு காண்போம்.

''......வண்டும் தேனும் யாழ் முரல, வரிக்குயிலும், கிளியும்பாட, தண்தாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப் பாறை மணித்தலத்து மீமிசை, நீல ஆலவட்டம் விரித்தாற் போலத் தன் கோலக் கலாவம் கொள விரித்து, முளை இள ஞாயிறு இளவெயில் எறிப்ப, ஓர் இளமயிலாடுவது நோக்கி நின்றாள்''.

தொல்காப்பியம் என்ற இலக்கண நூலுக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச் சிலையார், கல்லாடர், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் என்போர் கண்ட உரை வளங்களும் உரை நடையே. பத்துப் பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி

போன்ற நூல்களுக்கு உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் எழுதிய உரை வளம், திருக்குறளுக்குப் பரிமேலழகர் கண்ட உரைவளம், நெஞ்சையளளும் சிலப்பதிகாரம முதல் இரண்டு காண்டங்களுக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரைவளம போன்றன தமிழ் உரை நடைக்கு ஆக்கமும், ஊக்கமும அளித்தன

இவ்வாறு பல்வேறு உரையாசிரியர்கள் ஆற்றிய அருந் தமிழ்த் தொண்டிற்குப் பிறகு தமிழும், வட மொழியும் கலந்த மணிப்பிரவாள நடை தோன்றலாயிற்று. வைணவ உரையாசிரியர்கள் கண்ட உரைவளம் முழுவதும் பெரும பாலும் இம்மணிப்பிரவாள நடையே.

மேலை நாட்டிலிருந்து தம் மதத்தைப் பரப்ப வந்த கிறிததுவத் துறவிகளும தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும தொண்டாற்றினர். 16-ஆம் நூற்றாண்டில் கிறித துவ வேதோபதேசம் என்ற நூல் உரைநடையில் இயற்றப் பட்டது. 17-ஆம் நூற்றாண்டில் தத்துவ போதகர் என்று போற்றப்படும இராபர்ட் டி நொபிலி என்பார் இயேசுநாதர் சரித்திரம் போன்ற பல உரை நடை நூல்களை எழுதியுள்ளார்.

18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரமாமுனிவர் தமிழ் உரை நடையின் தந்தை என்று போற்றப்பெறும் அளவிற்குச் சிறந்த உரைநடை நூலகளை உருவாக்கினார். அவர் உரை நடை நூல்களே வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குரு கதை, வேத விளக்கம, தொன்னூல் விளக்கம் போன்றன.

மாதவ சிவஞான முனிவர் என்பார் சித்தாந்த மரபு கண்டனம், சிவசம்வாத உரை மறுப்பு போன்ற உரைநடை நூல்களை இயற்றியுள்ளார்.

19-ஆம் நூற்றாண்டில் தான் உரைநடை நூல்கள் பெரிதும் தோன்றலாயின. மதியூகி, விற்பன்னர் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரிதம், சுகுணசுந்

தரி சரித்திரம் போன்றன உரைநடை வளர்ச்சிக்கு உறுதுணை யாய் அமைந்தன. ஈழம் பெற்ற தமிழறிஞர் ஆறுமுக நாவலர் பெரிய புராணம், திருவிளையாடற்புராண வசனம், பாலபாடம் போன்றன எழுதி உரைநடையை வழிநடத்தி வளர்த்தார். வள்ளலார் என்று போற்றப்படும் இராமலிங்க அடிகளும் மனுமுறைகண்ட வாசகம், சீவகாருண்ணிய ஒழுக்கம் போன்ற உரைநடை நூல்கள் எழுதி உரைநடை வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமைந்தார். அமரகவி என்று அனைவரும் போற்றும் சி. சுப்பிரமணிய பாரதியாரும் தம் கதை, கட்டுரைகளால் உரைநடை வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தார்,

20-ஆம் நூற்றாண்டில் உரைநடை வளர்ச்சி பெரிதும் முன்னேற்றம் கண்டது. தனித்தமிழ் உரைநடையைத் தோற்றுவித்தவர் மறைமலை அடிகளார் இவர் இயற்றிய உரைநடையே முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, மக்கள் நூறாண்டு உயிர் வாழ்வது எப்படி? என்பது போன்ற அரிய நூல்கள், தமிழ் முனிவர் என்று போற்றப்படும் திரு வி. கல்யாணசுந்தரனார் இயற்றிய மனித வாழ்க்கையும், காந்தியடிகளும், பெண்ணின் பெருமை முருகன் அல்லது அழகு போன்ற நூல்கள் உரைநடை வளர்ச்சிக்கு அமைந்த உகந்த நூல்கள். சாமிநாதையர் அவர்கள் எளிய உரைநடையில் இயற்றிய அருந்தமிழ் நூல்களே நினைவு மஞ்சரி நல்லுரைக் கோவை, புதியதும் பழையதும் போன்றன

இவ்வாறே ரா. பி. சேதுப்பிள்ளை, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் ந மு. வேங்கடசாமி நாட்டார். நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், டாக்டர். மு வரதராசனார், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கலைமகள் ஆசிரியர் கி. வா. சகந்நாதன் போன்ற அறிஞர்கள் தமிழ் உரைநடைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த அருந்தமிழ்ப் புலவராவர். தென்னாட்டுத் திருக்கோயில்களைப் பற்றி அறிஞர் தொ. மு. பாஸ்கரத்

தொண்டைமான், 'வேங்கடம் முதல் குமரி வரை' என்ற அரிய நூல் ஒன்று இயற்றியுள்ளார்.

இவ்வாறே இன்றைய மறுமலர்ச்சி உரைநடைக்கு உயிர் ஊட்டியவர் தமிழ் நாட்டுப் பெர்னாட்சா என்று உலகம் போற்றும் அறிஞர் சி. என். அண்ணாதுரை. அவர் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் விரும்புமாறு எழுதிய உரைநடை பல. அவர் பேச்சும், எழுத்தும் தம் இனிமையால், எளிமையால், எதுகை, மோனை நயத்தால் அனைவர் உள்ளத்தையும் கவரும்.

இவ்வாறு இன்று குழந்தை இலக்கியத்தை வளர்க்கும் அறிஞர் பலர் உண்டு.

இவ்வாறு உரைநடை வளர்ச்சியால் அமிழ்தினுமினிய நம் தமிழ் நாளும் நன்கு வளர்கிறது என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

## 33. இலங்கை ஈந்த தமிழறிஞர்கள்

ஈழ நாடு என்று போற்றப்படும் இலங்கை ஈந்த இன்றமிழ்ப் புலவர் பலர். அவர் சிறப்பை இங்கு விரிவாகக் காண்போம்.

**ஈழத்துப் பூதந்தேவனார் :** இவர் தங்கம் நிகர் சங்க காலததைச் சார்ந்த புலவராவார். இவர் பாடிய பாடல்கள் குறுந்தொகை, அகநானூறு, நற்றிணை போன்ற நூல்களில் காணலாம. இவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்ற உண்மையை இவர் பெயரே பறை சாற்றும்.

**ஆறுமுக நாவலர் :** ஈழம் தந்த இனிய தமிழ்ப் புலவரே ஆறுமுக நாவலர் இவர் 19 ஆம நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவர். இவர் யாழ்ப்பாணம், நல்லூரில் பிறந்தார். இவர் சைவமும் தமிழும் தம் இருகண்கள் எனக்கொண்டார் இவர் இவ்விரண்டையும் வளர்க்க யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் கல்லூரிகள் நிறுவினார்.

''நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே?''

என்று நாவலரைச் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் மிகச் சிறப்பாகப் பாராட்டி உள்ளார்கள். அவர் சென்னையில் ஓர் அச்சுக்கூடம் நிறுவிப் பல இலக்கண நூல்களையும், சைவ சமய நூல்களையும் பிழையின்றிப் பதிப்பித்துள்ளார். இவர் பள்ளிச் சிறுவர்களுக்குப் பால பாட புத்தகங்கள் பல இயற்றியுள்ளார். இவர் சொற்பொழிவாற்றுவதில் வல்லவர். ஐரோப்பியர் வருகையால் கிறித்துவ மதம் பரவிவரும் நாளில் சைவத்திற்குப் புத்துயிர் அளித்த பெருமை இவரையே சாரும். ஆங்கில உரைநடைக்கு டிரைடன் போலத் தமிழ் உரைநடைக்கு ஆறுமுக நாவலரே சிறந்தவர் என்று பரிதிமாற் கலைஞர் என்று போற்றப்படும் வி. கோ சூரியநாராயண சாஸ்திரியார் பாராட்டியுள்ளார்.

**சி. வை தாமோதரம் பிள்ளை :** இலங்கை பெற்ற இனிய தமிழ்ப் புலவருள் ஒருவர் சி. வை. தாமோதரம் பிள்ளை இவர் யாழ்ப்பாணத்துச் சிறுபிட்டியில் பிறந்தவர். இவர் சைவசமயப் பற்று மிகவுடையவர். ஆயினும் கிறித்தவரோடு மிகவும் நெருங்கிப் பழகியவர். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பட்டம் பெற்றார். அரசினர் பதவி புரிந்த இவர் அச்சு ஏறாத, பனை ஓலைகளில தவம் கிடந்த தொல் காப்பியம் நச்சர் உரை, சேனாவரையர் உரை, வீரசோழியம், இறையனார் களவியல், கலித்தொகை போன்ற நூல்களை அழகுறப் பதிப்பித்தார். இவரைக் குமாரசாமிப் புலவர் என்பவர்,

''ஏட்டில் இருந்த அருந்தமிழ் நூல்கள் எனைப்பலவும்
தீட்டி வழுக்களைந்து அச்சினில் ஆக்குப செந்தமிழ்சேர்
நாட்டில் அளித்துயர் தாமோ தரேந்திரன் நண்ணுபுகழ்
பாட்டில் அடங்கும் தகைத்தோ புலவர் பாடுதற்கே''

என்று பாராட்டியுள்ளார்.

**சுவாமி விபுலானந்த அடிகள் :** ஈழம் பெற்ற இன்றமிழ்ப்

புலவரே விபுலானந்த அடிகள். இவர் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற் றியவர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மயில்வாக னன். இவர் இலங்கை மட்டக்களப்பில் உள்ள காரைத்தீவு என்ற ஊரில் பிறந்தார் இவர் சென்னை இராமகிருட்டின மடத்தாரால் விபுலானந்த அடிகள் எனத் துறவியாக மாற்றப்பட்டார். இவர் இயற்றியதே மதங்க சூளாமணி. தமிழரின் தனிப்பெரும்பொருளாகிய யாழைப்பற்றிச் சிறந்த ஆராய்ச்சி செய்து அரியயாழ்நூல் ஒன்று இவர் வெளியிட்டுள் ளார். இவர் காலம் கி பி. 20-ஆம நூற்றாண்டு.

இவ்வாறு இலங்கை சந்த தமிழ் இன்றமிழ் தூய செந் தமிழ் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

## 34 தமிழறிஞர்கள

**டாக்டர் உ வே சாமிநாதையர் :** தமிழ்த் தாத்தா என்று உலகம்போற்றும நல்லறிஞரே டாக்டர் உ. வே. சாமி நாதையர் இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் உளம கவர்ந்த மாணவர். இவர் கறையான் வாயில் இரையாகிக் கொணடிருந்த ஓலைச்சுவடி களை எல்லாம திரட்டித் திருத்தமான முறையில பதிபபித் தார். இவர் தஞ்சை மாவட்டத்தில உத்தமதானபுரம் என்ற ஊரில் பிறந்தார். புதியதும் பழையதும, கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி போன்றன இவர் இயற்றிய நூல்களாகும். இவர் குடந்தை, சென்னை போன்ற இடங் களில் உள்ள அரசினர் கலைக கல்லூரியில தமிழ்ப் பேராசிரி யராகத் தொண்டாற்றினார் இவர் இனிய எளிய தமிழ் உரைநடை எழுதுவதில் வல்லவர். இவரை அமரகவி சுபபிர மணிய பாரதியார்,

''குடந்தை நகர்க் கலைஞர் கோவே
பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவர் வாயில்
துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்

இறப்பின்றித் துலங்கு வாயே'' என்று போற்றிப் பாடியுள்ளார். இவர் காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

**பண்டிதமணி மு கதிரேசன் செட்டியார் :** இவர் மகிபாலன் பட்டியில் பிறந்தவர். இவர் உடம்பால் முடம்படினும் அறிவால் முடம்படாத பேராசிரியர் இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றியவர் இவர் இருமொழிப் புலமை படைத்தவர். இவர் சுக்கிர நீதி என்ற வடமொழி நூலைத் தமிழ்ப் படுத்தினார். மிருச்சகடிகம என்ற வடமொழி நூலை மண்ணியல் சிறுதேர் என்று தமிழில் மொழி பெயர்த்தார். இவர் உதயணன் கதை, சுலோசனை, உரைநடைக் கோவை போன்ற சிறு சிறு நூல்களும் இயற்றியுள்ளார். இவர் திருவாசகத்திற்கு 'நீத்தல் விண்ணப்பம்' என்ற பகுதிக்கு மட்டும் சிறந்த உரை எழுதியுள்ளார். இவர் 'மகா மகோபாத்தியாய' 'பண்டிதமணி' என்று போற்றப்படுவதிலிருந்தே இவர் சிறப்புப் புலனாகும். இவர் காலம் கி. பி. 20-ஆம நூற்றாண்டு.

**கா. சுப்பிரமணியப் பிள்ளை :** எம். எல். பிள்ளை என்று உலகம் பேசும் பெரும புகழ்ப் புலவரே கா சு. பிள்ளை, இவர் தாகூர் சட்ட நிபுணர். இவர் சிலை இன்றும் நெல்லையிலுள்ளது. இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டு ஆற்றியவர் இவர் சைவப்பற்று நிரம்பியவர். இவர் சைவசமய குரவர் நால்வர் வரலாற்றை அழகுற எழுதியுள்ளார் இவர் இயற்றியதே இலக்கிய வரலாறு என்று தமிழ் கூறும் நலலுலகம் போற்றும் சிறந்த ஆராய்ச்சி நூல். இவர் நினைவு விழா ஆண்டுதோறும் திருச்சி மாவட்டத்திலுள்ள குளித்தலையில் திருவாளர் இளமுருகு பொற்செல்வி அவர்களால் மிகச சிறப்பாகக் கொண்டாடபபட்டு வருகின்றது. இவர் காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு.

**மறைமலை அடிகள் :** சுவாமி வேதாசலம் என்பவரே

மறைமலையடிகள் இவர் தூய தனித்தமிழ் நடைக்குத் தந்தை என்று கூறலாம். இவர் தமிழர் மதம், முல்லைப் பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, திருக்குறள் ஆராய்ச்சியுரை போன்ற அரிய நூல்களை இயற்றியுள்ளார். மக்கள் நூறாண்டு வாழ்வது எப்படி? என்று தமிழில் அரிய நூலொன்று வெளியிட்டுள்ளார். இவர் மேடையிலபேசுங்கால் பெண்குரலில் பேசுவது என்று மரபை மேற்கொணடவர். இவர் காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு.

**திரு வி. கல்யாண சுந்தரனார்:** தமிழ் முனிவர், தமிழ்பெரியார் என்று போறறப்படும் திரு வி. க. இனிய எளிய தமிழ் நடைக்குத் தந்தை. இவர் கருத்தில் திட்பமும் நுட்பமும் செறிந்திருக்கும். இவர் செந்தமிழ்நயம் தோன்றச் சொற்பொழிவாறறுவதில் வல்லவர் இவர் எழுதியதே ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' என்ற நூல். இவர் தேசபக்தன், நவசகதி என்ற இரு செய்தித்தாள்களை நடத்தினார். இவர் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற கொள்கைக்கு ஏற்ப வாழ்ந்தவர். இவர் இயற்றியதே இளமை விருநது. முருகன் அல்லது அழகு போன்ற அரிய நூல்கள். இவர் பேசுங்கால் அழுத்தம் திருத்தமாகக் சில கருத்துக்களை மூன்று முறை கூறுவார். இவர் பழமையில் பெரிதும் விருப்பம் உடையவர். எளிய வாழ்வு வாழும் இயல்பினர். திருமால் அருள் வேட்டல், சிவனருள் வேட்டள், முருகன் அருள் வேட்டல், கிறித்துவின் அருள் வேட்டல், புதுமை வேட்டல் போன்றன இவரெழுதிய நூல்கள். இவர் நூல்கள் யாவும் பொது உடைமைக் கொளகையை விளங்கக் காட்டும். இவர் காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு.

**எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை:** இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த முந்நீர்ப் பள்ளம். என்ற ஊரில் பிறந்தவர். இவர் ஆங்கிலத்தில் பி. ஏ. பட்டம் பெற்றவர் தமிழிலும் நல்ல புலமை உடையவர். சில

காலம 'ஞானபோதினி' என்ற செந்தமிழ்த்தாளுக்குத் தலைவராகத் திகழ்ந்தவர். பல அரிய கட்டுரைகள் எழுதிப் பல தாள்களில் வெளியிட்டுள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றை முதன் முதலில் ஆங்கிலத்தில் தொகுத்து எழுதியவர் இவரே. இவர் எழுதிய நூலே 'தமிழ் இந்தியா' என்பது. இவர் நூல் தமிழர் நாகரிகத்தின் தொன்மையையும், கடவுள் கொள்கை உயர்வையும் நன்றாகக் காட்டும். இவர் எழுதிய உரைநடை நூல்கள் பல.

**டாக்டர் மு வரதராசனார்:** நாவல், உரைநடை போன்ற நூல்களை எழுதி நம் உள்ளம் கவர்ந்த தலைசிறந்த எழுத்தாளர் டாக்டர் மு. வ. அவர்கள். சங்க இலக்கியத்தின் சாரமான கருத்துக்கள் வரதராசனார் நூலில புதைந்து கிடக்கும். இவர் நூல்களில் வாழ்க்கைச் சிக்கல்கள் பின்னிக் கிடக்கும். இவர் நூல்களில் காணப்படும் பாத்திரப்படைப்பு ஒரு தனி அமைப்பு. தமிழகத்தில இவரொருவரே 'உரிமை ஆசிரியருக்கு' என்ற அமைப்பில் புத்தகம வெளியிட்டவர். பாவை, அந்த நாள், செந்தாமரை, அல்லி, கள்ளோ காவியமோ, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு, மண் குடிசை, நடைவண்டி போன்றன இவர் இயற்றிய பல நூல்களாகும். கள்ளோ காவியமோ இல்வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தைக் கொண்டு பலர் இல்வாழ்க்கைக்குத் துணை புரிகின்றது. இவர் இயற்றிய அகலவிளக்கு 'சாகித்திய அகாடமியின் பரிசைப் பெறறது. இவா சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாறறினார். இவா மதுரைப் பல்கலைக் கழகததில் துணை வேநதராகத் தொண்டாற்றினார். இவர் அண்மையில காலம் சென்றவர். எனவே இவர் காலம் கி.பி 20-ஆம் நூற்றாண்டு

**சங்கரதாச சுவாமிகள்:** தமிழ் நாடகத் தந்தை என்று போற்றப்படுபவரே சங்கரதாச சுவாமிகள். ஒரு நாடகம் சிறப்பாக அமையவேண்டுமெனில் அதை நமக்கும், நடிக்கும் நடிகருக்குமிடையே ஒரு வரையறை இருக்கவேண்டும் என்று

50 ஆண்டுகளுக்கு முன் எடுத்துரைத்தவர் இவர். நாடக அமைப்புத் திறனும், நுணுக்கமும் தெரிந்தவர். இவர் நாடகம் பார்க்கின்றவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற ஆர்வம் மிக உடையவர். பவளக்கொடி, பிரகலாதன், சிறுத்தொண்டர், வள்ளித் திருமணம் போன்றன இவர் இயற்றிய நாடகங்கள். இவரே நாடகத்திற்குப் பாடல்களும் எழுதுவார். ஓரே இரவில் 4 மணி நேரம் நடிக்கக்கூடிய நாடகத்தைப் பாடல்களுடன் எழுதும் அரிய ஆற்றல் படைத்தவர். அபிமன்யு, சுந்தரி, வள்ளித் திருமணம், சீமந்தினி, சதி அனுசுயா, பிரகலாதன், சத்தியவான் சாவித்திரி போன்றன இவர் இயற்றிய சில நாடகங்கள். இவ்வாறு இவர் ஆக்கிய நாடகங்கள் தமிழ் நாடக வளர்ச்சிக்கு அடிப்படை. இவர் காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு.

## 35. தமிழ்க் கவிஞர்கள்

**சி. சுப்பிரமணிய பாரதியார் :** இருபதாம் நூற்றாண்டு பெற்ற தமிழ்க் கவிஞர்—அறம் பாட வந்த அறிஞர்—மறம் பாட வந்த மறவர்—நாட்டில் படரும் சாதிநோய் படை மருந்து—காட்டில் கமழும் கற்பூரச் சொற்கோ சி. சுப்பிரமணிய பாரதியார். இவர் 1882-ல் நெல்லை மாவட்டத்தில் எட்டயபுரத்தில் பிறந்தார். இவர் தந்தை சின்னசாமிஐயர். தாய் இலக்குமி அம்மாள். இவர் சென்னை, புதுவை போன்ற இடங்களில் வாழ்ந்து இலக்கியப் பணியும், நாட்டுப் பணியும் இனிது புரிந்தார். பின்னர் சுதேசமித்திரன் நாளிதழில் துணையாசிரியராகப் பணியாற்றினார். இவர் விவேகானந்த அடிகளாரின் மாணவியான நிவேதிதா தேவியின் அருளும் ஞானோபதேசமும் பெற்றவர். இவர் பாடல்கள் இனிய தெளிந்த நீரோடை போல் விளங்குவன. நாட்டுப் பற்றையும், விடுதலை உணர்ச்சியையும் விளைப்பன, தெய்வ மணம் கமழ்வன. பிளாட்டோ என்ற அறிஞர் கண்ட ரிபப்ளிக் என்ற நூல் போல, சர் தாமஸ் மூர் எழுதிய உட்டோபியா என்ற கற்பனைக் குடியரசு போலப் பாரத நாடு எப்படி இருக்க வேண்டும் என்று கனவு கண்டவர் பாரதி. சுதந்திர

மண்டலம் கண்டு தெளிவோம்' என்று அன்றே விஞ்ஞான ஆராய்ச்சிக்கு வித்திட்டவர் பாரதி இவர் பாடிய குயில் பாட்டு கற்பனைப் பிறப்பிற்கோர் இருப்பிடம் இவர் பாடிய பாடல்கள் பாரதியார் பாடல் என்றே வழங்கும். இவர் உரை நடை நூல்களும், சிறு கதைகளும் எழுதியுள்ளார். இவர் பாடியதே ஞானாதர என்ற தத்துவப் பொருள் பொதிந்த நூல், சுருங்கக்கூறின இவர் பாடல்களில் ஷெல்லி யின் கற்பனை, வேர்ட்ஸ்வொர்த் கண்ட கடவுள் கொள்கை, பிரௌனிங் வாழ்வியல், டென்னிசன் எளிமை போன்றவை ஒருங்கு காணலாம என்றால் அது மிகையன்று. இவர் தம் முப்பத்தொன்பதாம் ஆண்டில் 1921-இல் காலமானார்.

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை .** இவர் 1876-இல் நாஞ்சில் நாட்டில் நாகர்கோயிலுக்கருகிலுள்ள தேரூரில் பிறந்தார். இவர் தந்தையார் சிறந்த தமிழறிஞர். இவர் திருவாவடுதுறை ஆதீன மடத்தைச் சேர்ந்த சுந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். இவர் மனைவியின் பெயர் உமையம்மை இவா திருவாங்கூர் அரசர் பெண்கள் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகச் சில காலம் பணியாற்றினார் 'ஆசிய சோதி, மலரும் மாலையும், நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம், உமர்கய்யாம் பாடல் போன்றன இவர் இயற்றிய கவிதை நூல்களாகும். காந்தளூர்ச்சாலை என்பது இவர் இயற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை இவர் உள்ளத்தில் பாரதியார் தனி இடம் பெற்றிருந்தார் என்ற உண்மையை 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என வரும் தொடரே பறை சாற்றும். சுருங்கக் கூறின், கவிமணியின் பாடல்கள் தமிழ் கூறும் நலவுலகிற்குச் சிறந்த ஒளி விளக்குகள் இவர் 1954-ஆம் ஆண்டில் இறந்தார்.

**பாரதிதாசன் :** 'கண் மூடிப்பழக்கம் மண்மூடிப் போக' என்று தமிழுலகிற்குப் பறை சாற்றிய பெருங்கவிஞர் பாரதி

தாசன். இவர் இயற்பெயர் கனக சுப்புரத்தினம். இவர் 1891-ஆம் ஆண்டு புதுச்சேரியில் பிறந்தார். இவர் தந்தை கனகசபை முதலியார். இவர் பிரஞ்சு மொழியிலும், தமிழி லும் நிறைந்த புலமை பெற்றவர். இவர் புதுவை அரசி னர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் சி. சுப்பிரமணிய பாரதியாரோடு நெருங்கிப் பழகி அவர் அன்பையும், ஆதரவையும் பெற்றார். அவர் தொடர்பால் பாரதிதாசன் என்ற துணைப்பெயரும் கொண் டார். இவர் பாடல்களில் உணர்ச்சி வெள்ளம் பெருக் கெடுத்து ஓடும். ஆதலின் தமிழ் மக்கள் இவரைப் புரட்சிக் கவிஞர் என்றே அழைத்தனர். மொழிப்பற்றையும் நாட்டுப் பற்றையும் இவர் பாடிய,

> "தமிழுக்கு அமுதென்றுபேர்—அந்தத்
> தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என வரும் தொடர்களே பறை சாற்றும். இவர் பாடிய பாடல்கள பாரதிதாசன் கவிதைகள் என வழங்கும். குடும்ப விளக்கு, இருண்ட வீடு, பாண்டியன் பரிசு போன்றன இவர் பாடிய கவிதை நூல்களே. இவர் 1964-இல் காலமானார்.

**நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை :** தமிழக அரசின் தன்னேரிலாத அவைக் கவிஞராக இருந்தவரே நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை. தமிழன் இதயம், சங்கொலி, அவனும் அவளும் போன்றன இவர் இயற்றிய கவிதை நூல்களாகும். 'என் கதை' என்பது இவர் வாழ்க்கை வரலாறு கூறும் அரிய நூலாகும். இவர் சிறையில் இருந்த பொழுது எழுதியதே மலைக்கள்ளன் என்ற நாவல். இவர் கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றின் நயம் கண்டு அவற்றை இலக்கிய இன்பம் என்ற நூலாக வெளியிட்டுள் ளார். இவர் எழுதிய நூல்களில் மிகச் சிறந்தது 'அவனும் அவளும்' என்ற காவியம். அதில் வரும் ஒரு பாடல் காவி யத் தலைவியின் அழகைப் போற்றுவதாகும். அப்பாடலை இங்கு முழுவடிவில் காண்போம்.

''மான்என அவளைச் சொன்னால் மருளுதல் அவளுக்
கில்லை
மீன்விழி உடையா ளென்றால் மீனிலே சருமை யில்லை
தேன்மொழிக்(கு) உவமை சொன்னால் தெவிட்டுதல்
தேனுக்(கு) உண்டு
கூன்பிறை நெற்றி என்றால் குறைமுகம் இருண்டு
போகும்.''

சங்க காலத் தமிழ்ப் புலவர்களைப் போல நாமக்கல் கவிஞர் தம் காலத்தில் வாழ்ந்த பிற கவிஞர்களையும் தம் பாடலில் போற்றிப் புகழ்வார். எடுத்துக்காட்டாகத்

''தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பது என் செவிப்பெருமை''

என இவர் பாடுவதொன்றே இந்த உண்மைக்கு ஓர் உரை கல். திலகர் விதைத்த விதை சுப்பிரமணிய பாரதியாக முளைத்தது போல உலகோர் உளளம் உறையும் உத்தமர்-மாந்தருக்குள் ஒரு தெய்வம் காந்தியடிகள் தூவிய விதையே நாமக்கல் கவிஞராகத்தோன்றியது என்றால் அதுமுற்றிலும் உண்மை.

**வ உ. சிதம்பரனார் :** கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த சிதம்பரனார் என்று போற்றப்படுகின்றவரே வ உ. சி. இவர் நாட்டு உரிமைக்காக முன்னணியில நின்று போராடிச் சிறை சென்றவர். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய ஜேம்ஸ் ஆலன் என்ல ஆங்கில அறிஞர் நூல் கருத்துக்களை இவர் தமிழில் மொழிபெயர்த்தார் அவற்றை மூன்று நூல்களாக வெளியிட்டார் அவை ''மனம் போல வாழ்வு'', ''அகமே புறம'', ''வலிமைக்கு மார்க்கம்'' என்பன. அவை மூன்றும் திருக்குறள் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சிறந்த தமிழ நடை பெற்றன. வாழ்க்கையின் உண்மைகளை விளக்குவன. வ.உ.சி. நூறுபாடல்களைக் கொண்ட ''என் பாடல் திரட்டு'' என்ற நூலை வெளியிட்டார். அந்த நூல் ''வள்ளியம்மை சரித்

திரம்'' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. அவரே முதன் முதலாக ஆங்கிலக் கம்பெனிகளுக்குப் போட்டியாகத் தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். செக்கிழுத்தார், இவ்வாறு நாட்டுப்பற்றில் ஈடுபட்ட இவர் மனம் மொழிப்பற்றிலும் ஈடுபட்டது என்றால் அது முற்றிலும் உண்மையே.

**கவிஞர் கண்ணதாசன் :** இருபதாம் நூற்றாண்டு பெற்ற இன்பக் கவிஞர்—மக்கள் உள்ளத்தில் நீங்காது இடம் பெற்ற திரைப்படக் கவிஞர் கண்ணதாசன். இவர் பாடல்கள் மரபு வழிக் கவிஞர் பாடல் போலவும், புதுக்கவிதை போலவும் காட்சி அளிக்கும், இவர் பாடல்கள் சொல்லழகும், பொருளழகும் வாய்ந்தன. பழமையைப் போற்றும் புதுமைக் கவிதைகளே இவர் கவிதைகள். மாங்கனி ஆட்டனத்தி, ஆதிமந்தி போன்ற காவியங்களை இவர் படைத்துள்ளார். இவர் பாடல்கள் நகைச்சுவை வாய்ந்தன. மக்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் பான்மையன. கசக்கி எறிந்த காகிதத்தில் கண்ட ஒரு நின்பொருளும் இவருக்குத் நிதந்திக்கும் பாட்டாகும். காரணம் அவர் எதையும் கற்பனைக்கண் கொண்டே காண்பார். இவர் இறப்பு திரைப்பட உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு.

**ச. து. சுப்பிரமணிய யோகி :** பாலபாரதி என்று போற்றப்படுபவர்—கணைனகி விருத்தம் கண்டவர் கவிஞர் ச.து. சுப்பிரமணிய யோகி அவர்கள் இவர் உமர் கயாம் பாடல்களை மொழி பெயர்த்துள்ளார். இவர் அகலிகைக் காவியம் படைத்துள்ளார். இவர் பைபிளிலுள்ள மேரி மக்தலேனா வரலாற்றை 112 பாடல்களில் ஒரு சிறு காவியமாகப்படைத்துள்ளார். இவர் பாடல்கள் படிக்க-பக்கம் நின்று கேட்க இனிக்கும் வீரவுணர்ச்சி பெருகும். எடுத்துக்காட்டாக இவர் பாடிய பாடல் ஒன்றைக் காணபோம்.

''கேட்டனள் எழுந்தாள் துன்பக்
கிளர்ச்சியின பொருமலோடு

வாட்டடங் கண்ணீர் சோர
மார்பகம் புடைத்து விம்ம
நாட்டுள வேந்தன் செய்கை
நன்றிது நன்றிது என்னாக்
கோட்டிய புருவத் தோடே
குதித்தாள் குமுறு கின்றாள்.

[கண்ணகி விருத்தம்]

## 36- தல புராணங்கள்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய தமிழகம்—வரலாற்று ஏட்டில் பொன்னெழுத்தில் பொறிக்கப் பெற்ற தமிழகம் அன்றும், இன்றும், என்றும் கலையும், கல்வியும் களிநடம் புரியக் கண்டது; காண்கிறது; காண விருப்பது சிற்பக்கலை, ஓவியக்கலைக்குப் பெயர்போனது நம் தமிழகத்திலுள்ள எண்ணிறந்த கோயில்கள். இத்தகைய கோயில்களின் சிறப்பினைத் தொகுத்துப் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் புராணங்களாகப் பாடி மகிழ்ந்தனர் இவைகளே தலபுராணங்கள் எனப்படும். அவற்றின் சிறப்பனை இக் கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

பரஞ்சோதி முனிவர் என்பார் இயற்றிய திருவிளையாடற் புராணம் தலைசிறந்த தலபுராணம். ஆலவாய், நான்மாடக் கூடல் என்று போற்றப்படும் மதுரைத்தலத்தின் மாண்பும், அவிர்சடைக் கடவுளின் அற்புதச் செயல்களும் இந்நூலில் அழகுறக் கூறப்படுகின்றன.

கருணைப்பிரகாசம் என்பார் இயற்றிய சீகாளத்திப் புராணம் ஒரு சிறந்த தலபுராணம். இது குலத்தால் தாழ்ந்து, கொள்கையால் உயர்ந்த கண்ணப்ப நாயனார் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்ற திருக்காளத்தியின் பெருமையை அழகுற எடுத்துக்கூறும்.

இறைவன் நடம்புரியும் இடங்கள் ஐந்து. அவையாவன; பொன்னம்பலம் — சிதம்பரம்; வெள்ளியம்பலம் — மதுரை;

தாமிரவம்பலம் – திருநெல்வேலி; சித்திர அம்பலம் – திருக்குற்றாலம்; இரத்தின அம்பலம் – திருவாலங்காடு. இவற்றுள் சித்திர அம்பலம் எனப்படும் திருக்குற்றாலத்தில் குறும்பலா மரத்தின் அடியில் எழுந்தருளிய திருக்குற்றாலநாதரின்-திருக்குற்றாலத்தின் பெருமை கூறும் தலபுராணமே குற்றாலத் தலபுராணம். இதனை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயர்

அந்தகக்கவி வீரராகவ முதலியார் எழுதிய தலபுராணமே திருக்கழுக்குன்றப் புராணம். திருக்கழுக்குன்றம் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம்.

ஞானக்கூத்தர் என்பார் முதுகுன்றம் என்றும், பழமலை என்றும் போற்றப்படும் விருத்தாசல புராணம் இயற்றியுள்ளார். இங்கு எழுந்தருளிய இறைவர் பழமலைநாதர்.

கச்சியப்ப முனிவர் இயற்றிய புராணமே திருவானைக்கா புராணம். பஞ்சபூத தலங்களில் இறைவர் நீர்வடிவமாக உள்ள தலமே திருவானைக்கா. இது யானையால் நாளும் பூசிக்கப்பட்ட தலமாதலின் திருவானைக்கா எனப்பட்டது. இறைவர் சோலைகளினிடையே இனிது வீற்றிருப்பார் என்பதற்கேற்ற எடுத்துக்காட்டு திருவானைக்கா. இந்நூலில் திருவானைக்காவில் ஐந்தாம் சுற்றுச் சுவராகிய திருநீற்றான் மதிலின பெருமை—பல்வகைத் திருக்குளங்களின் பெருமை அழகுற எடுத்துக் கூறப்படும். எல்லப்ப நாவலர் என்பார் இயற்றிய தலபுராணமே அருணாசல புராணம். இது திருவண்ணாமலையின் சிறப்பினை இனிது எடுத்துக் கூறும். இவர் இயற்றிய மற்றொரு தலபுராணம் பட்டினத்தார் தோன்றிய திருவெண்காட்டுப் புராணம்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய தலபுராணங்கள் பதினாறு. அவற்றுள் மிகச் சிறந்தன திருநாகைக்காரோணப் புராணம், திருக்குடந்தைப் புராணம், திருமுல்லைவாயில் புராணம், மாயூரப் புராணம்,

திருத்துருத்திப் புராணம், திருமயிலைப் புராணம், செவ் வந்திப் புராணம் போன்றன

இத்தகைய தலபுராணங்களைக் கொண்டு வரலாற்றுப் புகழ் பெற்ற பழந்தமிழ் ஊர்களைப் பற்றியும், ஆங்காங்கு இறைவன் புரிந்த அற்புதங்களைப் பற்றியும் அறியலாம். ஆதலின் தலபுராணங்கள் நமக்கு அரிய பெரிய வரலாற்றுக் கருவூலம் எனின் அது மிகையன்று

## 37. இசையும், நாடகமும்

இசையும், நாடகமும் இன்று நேற்று தோன்றியதல்ல. இந்த உண்மை தமிழுக்கு வழங்கும் முத்தமிழ் என்ற காரணப் பெயர் கொண்டே புலனாகும். அவற்றின் சிறப் பினை இங்குக் காண்போம்

தொல்காப்பியர் தம் இலக்கண நூலில் கருப்பொருள் களைக் குறிப்பிடுங்கால் யாழினைப் பற்றிக் குறிப்பிடுகின் றார். இசையைப் பற்றி மிகப் பழமையான குறிப்புக்கள் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய பரிபாடலில் காணப் படுகின்றன. இன்று கிடைத்துள்ள பரிபாடல் 22 பாடல் களில் ஒவ்வொன்றின் கீழும் இந்தப் பாடல் இன்ன வண்ணம், இன்ன யாழ், இன்ன செந்துறை, இன்ன தூக்கு என்று குறிப் பிடப்பட்டுள்ள செய்திகளே இசையின் பழமையை இனிது பறை சாற்றும்.

மண நூல் என்று போற்றப்படும் சீவக சிந்தாமணியில் காந்தருவதத்தையார் இலம்பகமும் யாழிசையின் சிறப் பினை இனிது எடுத்துக் கூறும். இசையின் பழமைக்கும், பெருமைக்கும் தேவாரப் பாடல்களும் ஏற்ற எடுத்துக்காட்டு. சீகாழி அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகமும், கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனையும் இசைத் தமிழ் பெருமை கூறும் இன்ப நூல்கள்.

இருபதாம் நூற்றாண்டில், வாழ்ந்த சி. சுப்பிரமணிய பாரதியாரும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும் இசைத்தமிழ்ப் பாடல்கள் பல பாடினர்.

இத்தகைய பழமையும் பெருமையும் வாய்ந்த தமிழிசைக்குப் புத்துயிர் ஊட்டியவர் செட்டிநாட்டரசர் இராசா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களே ஆவார். இந்த உண்மைக்கு இன்றும் சென்னையில் தமிழிசையை ஆண்டுதோறும் போற்றும் இராசா அண்ணாமலை மன்றமே ஏற்ற சான்று.

இவ்வாறே நாடகத்தின் பெருமையை இனிக் காண்போம்.

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்'' என வரும் தொல்காப்பியத் தொடரே நாடகத் தமிழின் பழமைக்கு ஏற்ற சான்று. இந்திரகாளியம், பஞ்சமரபு மதிவாணர் போன்ற நாடக நூல்கள் இருந்தனவாகக் கூறப்படுகிறது. இராசராசன் காலத்தில் கோயில்களில் இராச ராசேச்சுர நாடகம் நடிக்கப் பெற்றது என்றும், நாடகம் நடிப்போர்க்கு மானியம் வழங்கப்பட்டது என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. நம நாட்டில் புராண அடிப்படையில் அரிச்சந்திர நாடகம், மார்க்கண்டேயர் நாடகம் போன்றன மேடையில் நடிக்கப்படுவதுண்டு

இத்தகைய நாடகங்களை 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் போற்றிய சிலரை இங்கு காண்போம்

பேராசிரியர் பி சுந்தரம் பிள்ளை அவர்கள் மனோன் மணீயம் என்ற சிறந்த நாடக நூலை எழுதியுள்ளார்.

பரிதிமாற் கலைஞர் என்று போற்றப்படும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் ரூபாவதி, கலாவதி, மான விசயம் போன்ற நாடக நூல்களை எழுதியுள்ளார். தமிழ்

நாடகத் தலைமையாசிரியர் என்று போற்றப்படும் தவத்திரு சங்கரதாச சுவாமிகள் அபிமன்யு, பவளக்கொடி, சிறுத் தொண்டர், சத்தியவான் சாவித்திரி, வள்ளித் திருமணம் போன்ற நாடக நூல்களை எழுதியுள்ளார். தமிழ் நாடகத் தந்தை என்று போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியார் காதலர் கண்கள், பொன் விலங்குகள் போன்ற நாடகங்கள் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டுப் பெர்னாட்சா என்று போற்றப்படும் அறிஞர் அண்ணா ஓர் இரவு, நீதிதேவன் மயக்கம், வேலைக் காரி போன்ற நாடக நூல்களை எழுதியுள்ளார். டி. கே. எஸ் சகோதரர்கள் நாடகக் கலைக்குப் பெருந்தொண்டு புரிந்தனர். இன்றும் சோ என்பவர் நகைச்சுவை ததும்ப நாடகம் பல நடத்தி வருகின்றார். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நாடக மன்றமும், எம். ஜி. ஆர். மன்றமும் நாடகக் கலைக்கு இன்று பெருகூட்டி வருகின்றன. கலைஞர் மு. கருணாநிதி எழுதிய பராசக்தி, பூம்புகார், காகிதப்பூ போன்ற நாடகங் களை இன்றும் நாம் காணுகின்றோம்.

இவ்வாறு இசையும் நாடகமும் பண்டுபோல் இன்றும் சிறப்புற்று வருகின்றன என்ற உண்மையை நாடறியும், ஏடறியும்.